கேள்விகளும் பதில்களும்

...இதோ, நான் அதை அப்படியே மடக்கி வைத்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

24ஆ. இரவிலே நீங்கள் கூறப்போகும் இந்தக் காரியங்களைச் சிந்தித்துப் பார்ப்பதற்கு நீங்கள் ஒரு நாளை எடுத்துக்கொள்கிறீர்களா?

அதற்கு நிச்சயமாக ஒரு நாள் முழுவதும் பிடிக்கும், அதற்கு அவசியமில்லையா?

இல்லை, கிறிஸ்தவனே, என் சகோதரனே, நான் பிரசங்க பீடத்தில் என்ன கூறப் போகிறேன் என்பதைக் குறித்து நான் ஒருபோதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நான் எங்கோ ஒரு வேதவாக்கியத்தை வாசிப்பேன். நான்—நான் பலமுறை பிரசங்க பீடத்திற்குச் செல்வேன் என்றும், நான் ஒரு குறிப்பிட்ட பொருளின் பேரில் பிரசங்கிப்பேன் என்றும், அங்கே சென்றால், பரிசுத்த ஆவியானவர் என்னை மீண்டும் திருப்பி, வேறு எதையாவது செய்ய வைப்பார்.

நான் இரண்டு அல்லது மூன்று முறை குறிப்புகளை எழுதி, குறிப்புகளின் பேரில் பிரசங்கிக்க முயற்சித்திருக்கிறேன். நான் அந்தக் குறிப்புகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் வரையில், நான் என்னுடைய சிந்தையை தேவனிடமிருந்து விலக்கிவிட்டேன். எனவே நான் தொடர்ந்து சென்று, அவைகளை கசக்கி, அவைகளை கீழே வீசியெறிந்து, அவர் என்ன கூறுகிறாரோ அதைச் செய்ய வேண்டும். சில சமயங்களில் நான் ஆதியாகமத்தில் துவங்கி, வெளிப்படுத்தின விசேஷத்தில் முடிக்கிறேன், நான்...எனவே நான் ஒரு—ஒரு ஊழியக்காரனாய் இல்லை...நான் என்னுடைய செய்திகளை மேலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

நான்—நான் சொன்னது போல, நான் மிருகத்தின் முத்திரையைக் குறித்த ஒரு வேதவாக்கியத்தை வாசித்தேன். நான்...என் மனைவியும், என் தாயும், மற்றும் அறிந்திருக்கிறவர்களும், என் மாமியார் இங்கே உட்கார்ந்திருக்கிறார், இது ஒரு காலத்தில் இருந்த வீடு, நான் மதியம் சுமார் மூன்று மணியளவில் ஜெபிக்கத் தொடங்கினேன். உள்ளே சென்று ஜெபிக்க ஆரம்பித்தேன். அதன்பின்னர் நான் அங்குச் சென்று, நான், "சரி, இன்றிரவு நான் *மிருகத்தின் முத்திரை* என்பதன் பேரில் பேசுவதாகக் கூறினேன்" என்று நினைக்கிறேன். நான் அங்குச் செல்வேன். நான் இன்றிரவு, ஒரு—ஒரு க்ரூடன்ஸ் ஒத்துவாக்கியத்தைப் பதிலுக்காகக் கொண்டு வந்தேன். அது பதில்களைப் பெறுவதற்காகவே, இல்லை, பதில்களையல்ல, ஆனால் ஒத்துவாக்கியம் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள்: அவை யாவும் வேதாகமத்தின் வார்த்தைகளால் எழுதப்பட்டிருக்கின்றன. எனவே, சில சமயங்களில், அந்த நபரின்

கேள்வி எங்கே உள்ளது என்பதைக் கண்டறிய, நான் அந்த ஒத்து வாக்கியத்தைத் தேடுகிறேன்.

ஆனால் பெரும்பாலும், இன்று மதியம் நான் கடையில் அல்லது ஒரு கடையின் அருகே சந்தித்த என் நண்பர்களில் ஒருவரை இங்கே பார்ப்பது போல, அவர்...நாங்கள் இந்தக் கேள்விகள், அது போன்றவற்றைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம்.

இப்பொழுது, நான் ஒரு ஊழியக்காரனாயிருந்தது முதற்கொண்டே, என்னுடைய வாழ்நாள் முழுவதும், நான் கிட்டத்தட்ட எல்லாவற்றோடும் போராட வேண்டியதாயிருந்தது. நான் எந்த வேதபாடப் பள்ளிக்கும் சென்றதில்லை. நான் கற்றுக்கொண்ட ஒரே காரியம் என்னவெனில், அவர் என்னிடத்தில் கூறியதுதான். அதன்பின்னர் நான் அதில் நிலைத்திருந்து, அதை விசுவாசித்தேன். உலகத்தைச் சுற்றிலும் நான்—நான் நம்புகிற ஒவ்வொரு காரியத்தையும் கிட்டத்தட்ட எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டியதாயிருந்தது. நான்...அவர்கள்...ஆப்பிரிக்காவில் பல்வேறு இடங்களிலும், அயல் நாடுகளிலும் அமெரிக்கா நினைத்துப் பார்க்காத கொள்கைகளை நீங்கள் காண்கிறீர்கள். அது சரியாக உங்களுக்குள்ளே வீசப்பட்டுள்ளது. ஆனால் முக்கியமான காரியம் என்னவென்றால், நான் எப்பொழுதுமே இங்கே இந்த வார்த்தையின் பேரில் நிற்க முயற்சித்து வந்திருக்கிறேன்; பாருங்கள், ஒரு வேத வாக்கியத்தின் பேரில் மாத்திரமல்ல, அது வேதம் முழுவதும் வர வேண்டும்.

இப்பொழுது, நீங்கள் ஒரு வேதவாக்கியத்தை எடுத்துக் கொண்டு, அதில் எந்தக் காரியத்தையும் கூறலாம். நாத்திகர்கள் இந்த வேதாகமத்தை தங்களுடைய விவாதப் புத்தகமாகப் உபயோகிக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? நிச்சயமாக. ஆனால் அது எல்லா வழிகளிலும் ஒரேவிதமாக இருக்க வேண்டும். இப்பொழுது, நீங்கள் இந்த வெளிப்படுத்திக் கூறுதலை மன்னிப்பீர்களானால், (நமக்குக் கல்வி கற்பிக்கும் விதமாக, நான், வெறுமனே, சொல்கிறேன்), வேதாகமம் வெட்டப்பட்ட ஒரு புதிர் போன்றது. சரியாக. அதை எப்படி ஒன்று சேர்க்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ள நீங்கள் கிறிஸ்து இயேசுவின் மாதிரியை நோக்கிப் பார்க்க வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யவில்லையென்றால், நீங்கள் உங்களுடைய சொந்தக் கருத்தை எடுத்துக்கொள்கிறீர்கள், உங்களுக்குத் தெரிந்த முதல் காரியம், நீங்கள் உங்களுடைய காட்சியில், ஒரு பசு மரத்தின் உச்சியில் புல் மேய்வதைப் பார்ப்பீர்கள். அது சரியாகச் செயல்படாது. ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியை அனுமதிப்பீர்களானால்; நீங்கள் வேதத்தை ஆராய்ந்து பார்க்கையில், உங்களுடைய சொந்த சிந்தையை உபயோகிக்க மாட்டீர்கள். நீங்கள் உங்களுடைய சொந்த அறிவை அல்லது உங்களுடைய சொந்தச் சிந்தையையோ உபயோகிக்க முயற்சித்தால், நீங்கள் நிச்சயமாகவே ஒவ்வொரு முறையும் திசை

திருப்பப்படுவீர்கள். பார்த்தீர்களா?

ஏனென்றால் கிறிஸ்து, “நான் வேத சாஸ்திரப் பள்ளியினருக்கும், ஞானிகளுக்கும், கல்விமான்களின் கண்களுக்கும் அதை மறைத்து, கற்றுக்கொள்ளக் கூடிய பாலகருக்கு அதை வெளிப்படுத்துவேன்” என்றார். பாருங்கள். “நான் அதை மறைத்துவிட்டேன்.” அதனால் பள்ளிகளும், கல்வி வாரியங்களும், சபை வாரியங்களும் வேதாகமத்தை அது போதிக்கப்பட வேண்டிய விதத்தில் போதிப்பதில்லை. இப்பொழுது, அதைக் கூறுவது ஒரு மகத்தான காரியமாக உள்ளது. அவர்கள் ஏராளமான சத்தியங்களை உடையவர்களாயிருக்கலாம், ஆனால் பரிசுத்த ஆவியானவர் அதைத் தனிப்பட்ட நபர்களுக்கு வெளிப்படுத்துகிறார். ஆகையால், பரிசுத்த ஆவி தனிப்பட்ட நபர்களுக்கானதாயுள்ளது. அந்தக் காரணத்தினால்தான் ஸ்தாபனம் ஒவ்வொரு முறையும் ஜனங்களைத் தேவனுடைய ஒழுங்கிலிருந்து விலக்குகிறது. தேவன் தொடர்ந்து புதியதாக ஒன்றைக் கொடுக்கிறபடியால், அவர் அந்தவிதமாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறார். ஆனால் இதுவே எப்பொழுதும் பின்னணியாய் உள்ளது. அது வேதாகமத்தில் எவ்வாறு படிப்படியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள், காலப்போக்கில் அது எவ்வாறு படிப்படியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் கவனியுங்கள். அப்பொழுது நீங்கள் எங்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்களால் காண முடியும்.

இப்பொழுது, இந்தப் பதில்களில், நான் கூறியுள்ளது போல, நான் ஒரு ஆற்றல் மிக்க ஆசிரியர் அல்ல. ஆனால் நான் அதைக் குறித்து எனக்குத் தெரிந்ததைக் கூறவும் விரும்புகிறேன், நான் அதை மற்றவர்களுக்கு விளக்கிக் கூற விரும்புகிறேன். நீங்கள் வித்தியாசப்பட்டு, “பாருங்கள், சகோதரன் பிரான்ஹாம், நான் அதை அந்த விதமாக நம்பவில்லை” என்று கூறினால், அது பரவாயில்லை, அது இனிமேல் நாம் சகோதரர்களாய் இருப்பதிலிருந்து நம்மை முறித்துவிடாது, பாருங்கள். நாம் சகோதரர்கள். நான்...நீங்கள் ஒரு—ஒரு—ஒரு...நான் நிலையான ஆலயத்தைச் சேர்ந்திருக்க வேண்டும் என்று விரும்பினால், உங்களுக்குத் தெரியும், அதுவோ எனக்குப் பரவாயில்லை. பாருங்கள். நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், அப்போதும் நாம் கூட்டாளிகளாயிருந்து, தொடர்ந்து செல்வோம். மேலும்—மேலும் நல்ல பழமை நாகரீகமான பரிசுத்தமாகுதல் அதைக் குறித்து உங்களை அந்த விதமாகவே உணரச் செய்யும் என்று நான் நம்புகிறேன். நீங்கள் விரும்பவில்லையா? அது உண்மை, எங்களை ஒத்துக்கொள்ளச் செய்யும்.

நேற்று மாலை இங்கு நின்ற இந்த மனிதர், அந்த வகையான ஒரு பதவியில் இருந்தார். மேலும்—மேலும் நான் சந்தித்திருக்கிறேன்... இதோ, இந்தியாவின் பேராயர் இங்கே இருக்கிறார், நாற்பத்தேழு

கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்குப் பொறுப்பானவர். அவர் வந்து, அதைக் குறித்து கேள்விப்பட்டு, அவர் இங்கு வந்து, "இது உண்மையா?" என்று கேட்டார்.

நான், "ஆம்" என்றேன்.

அவர், "நான் எப்படி பரிசுத்த ஆவியைப் பெறுவது?" என்று கேட்டார்.

"கைகளை வைக்குதல்." அவர்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் வந்தார்.

அவர் ஒரு சில வாரங்களுக்கு முன்பு, இங்கே சிக்காகோவில் ஒரு பெரிய கிறிஸ்தவ வர்த்தகப் புருஷர் கூட்டத்தில் நின்று, "நான் எல்லா போப்பாண்டவர் மன்ற உறுப்பினர்களும் மற்றுமுள்ள அனைவரும் அங்கே என்மீது கைகளை வைத்தார்கள்; மகத்தான மனிதர்கள், மகத்தான பேராயர்கள் போன்றவர்கள், அவர்கள் என்னை இந்தியாவின் பேராயராக நியமித்தபோது, இந்திய எபிஸ்கோபலியன் பேராயர், இந்திய கிறிஸ்தவ ஐக்கியத்தின் தலைவர்" என்று கூறினார். இந்தியாவிலேயே மிகப் பெரிய மதசம்பந்தமான அடையாளம். மேலும் அவர், "அவர்கள் என்மீது கைகளை வைத்தபோது ஒன்றும் சம்பவிக்கவில்லை" என்றார். மேலும், "நான் இங்கே தன்னுடைய மொழியின் முதல் எழுத்துக்களையே அறியாத ஒரு நபரிடம் வந்தேன், அவர் என்மேல் கைகளை வைத்தபோது, நான் பரிசுத்த ஆவியைப் பெற்றேன்" என்று கூறினார். அது உண்மை. அது விநோதமாக இருக்கிறது, இல்லையா? பாருங்கள்.

எனவே, அது கல்வியினால் அல்லது அறிவினால் வருகிறதல்ல; அது தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்துவதன் மூலமே வருகிறது. அது உண்மை.

அதன்பின்னர், நீங்கள் ஒரு கிறிஸ்தவன் என்பதை இங்கே நீங்கள் எப்படி அறிந்துகொள்வீர்கள்: நீங்கள் கொடுக்கும் கனிகளைக் கொண்டு. இப்பொழுது, நீங்கள் கூச்சலிடும் விதத்தினால் அல்ல. நான் சத்தமிடுவதில் நம்பிக்கை கொண்டுள்ளேன், ஆனால் அது நீங்கள் சத்தமிடுகிறீர்களா அல்லது இல்லையா என்பது அல்ல, நான்...அல்லது—அல்லது நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசுகிறீர்களா அல்லது இல்லையா என்பதல்ல. அதாவது...நான் அந்நிய பாஷைகளில் பேசுவதில் நம்பிக்கை கொண்டுள்ளேன். நீங்கள் வியாதியஸ்தரை சுகப்படுத்துகிறீர்களா, அல்லது இல்லையா என்பது அல்ல. நான் சுகமளித்தலை விசுவாசிக்கிறேன். ஆனால் இங்கே ஆவியின் கனிகள் உள்ளன: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, நற்குணம், தயவு, பொறுமை. அதுதான் ஆவியின் கனி. பார்த்தீர்களா? அந்த அடையாளங்கள் உங்களைத் தொடருமானால், அப்பொழுது அதைத்தான் நோக்கிப் பார்க்கும்படி இயேசு என்னிடம் கூறினார் என்று நான்—நான் நம்புகிறேன்.

அவர், “நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லா மனிதர்களும் அறிந்து கொள்வார்கள், அப்பொழுது நீங்கள்...” என்றார். [சபையோர், “ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள்” என்கின்றனர்.—ஆசி.] அது உண்மை. “நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருக்கும்போது.” அந்த மனிதன் உங்களுடன் முரண்பட்டாலும், அதே சமயத்தில் நீங்கள் அவரை அதே விதமாக நேசிக்கிறீர்கள். பார்த்தீர்களா?

ஓ, உங்களில் அன்பு கூருகிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்கு என்ன பலன்? பாவிகள் அதையே செய்கின்றனர். பார்த்தீர்களா? பார்த்தீர்களா? ஆனால் உங்களைப் பகைக்கிறவர்களை நீங்கள் நேசிக்க வேண்டும், நீங்கள் அவர்களை நேசிக்கிறீர்கள் என்று காண்பிக்காமல், ஆனால் அவர்களை உண்மையாகவே நேசியுங்கள். [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] உங்களுக்கு நன்றி. அது உண்மை. “ஆமென்” என்பது உண்மை. பார்த்தீர்களா? ஒரு மனிதன் உங்களை உண்மையாகவே வெறுத்தால், அவன் உங்களை வெறுக்கிறான் என்று நிரூபித்திருந்தால், நீங்கள் இன்னமும் உங்களுடைய இருதயத்தில் அவனை நேசிக்கிறீர்கள், நீங்கள் இராஜ்ஜியத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மை.

இப்பொழுது அவனை நேசித்து, “சரி, நான் அதைச் செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியும்” என்று கூறாதீர்கள். ஆனால் நீங்கள் எப்படியும் அவனை நேசிக்கிறீர்கள். நீங்கள் உங்கள் இருதயத்திலிருந்து அவனை நேசிக்கவில்லையென்றால், நீங்கள் அவனை நேசிக்கிறாய் என்று சொல்லும்போது, உண்மையில் நீங்கள் அவனை நேசிக்கவில்லையென்றால், அது உங்களை என்னவாக ஆக்குகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? மாய்மாலக்காரர். பாருங்கள். நீங்கள் உண்மையாகவே நேசித்தாலொழிய, நீங்கள் அவனிடம் சென்று நேசிப்பதாகச் சொல்லாதீர்கள். நீங்கள் அந்தவிதமாக உணரவில்லையென்றால், நீங்கள் அந்தவிதமாக உணரும் வரையில் இங்கேயே இருங்கள். ஏனென்றால் நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன், அந்தவிதமாக உங்களை உணரச் செய்யப் போதுமான கிருபை உண்டு. அது உண்மை. அது உண்மையாகவே இருக்கும்.

இப்பொழுது—இப்பொழுது, இந்தக் கேள்விகள்...இப்பொழுது நினைவிருக்கட்டும், அது ஆராதனைகளில் இருப்பது போன்று, அந்தக் காரியங்கள் யாவும் யாருடைய சபையையும், யாருடைய விசுவாசத்தையும் நோக்கியதாக இல்லை. நான் இங்கே என்னுடைய சொந்த சிறு கூடாரத்தில் இந்தப் பாடப் பொருள்களின் பேரில் என்னுடைய உணர்வுகளை மாத்திரமே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறேன். பாருங்கள்.

இப்பொழுது, நீங்கள் வித்தியாசப்பட்டால், அது சரியாயிருக்கும். இங்கே நம்மில் இரண்டு பேர் கூட ஒரே மாதிரியாக இல்லை, மேலும்

நம்மில் யாருக்கும் ஒரே மாதிரியான கட்டை விரல் இல்லை என்பது உங்களுக்குத் தெரியுமா. நம்முடைய எந்த மூக்கும் ஒரே மாதிரியாக இருக்காது. என்னுடையதைப் போன்ற ஒருவரை நீங்கள் பெற்றிருக்கவில்லை என்பதற்காக நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள் என்று நான் யூகிக்கிறேன். ஆனால்—ஆனால் அது ஒரு...ஆனால் இங்கே ஒரே மாதிரியான ஒன்று கிடையாது. பார்த்தீர்களா? அதன்பின்னர் நாம் வித்தியாசப்படப் போகிறோம். இப்பொழுது, நான் செர்ரி பையை விரும்பலாம், நீங்கள் ஆப்பிள் பழத்தை விரும்பலாம், ஆனால் நாம் இருவரும் பணியாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். அதுதான் காரியம். எனவே, நாம்...அதுதான் கருத்தாகும். நாம் கர்த்தராகிய இயேசுவை நேசித்து, தேவனுடைய ஆவியினால் மீண்டும் பிறந்திருக்கும் வரை, நாம் கிறிஸ்தவர்களே. இப்பொழுது, சபை உங்களுக்காக அதைச் செய்ய முடியாது. இயேசு உங்களுக்காக அதைச் செய்ய முடியும். பாருங்கள்.

இப்போது, இந்தக் கேள்விகளை உற்று நோக்கினால், அவற்றில் சில மிகவும் கூர்மையான கேள்விகள் இருக்கின்றன. எனவே, அவைகளுக்கு இப்பொழுது பதிலளிக்கையில், ஒவ்வொருவரும் இதைப் பற்றிய நல்ல பட்டியலை எடுத்து, பாருங்கள், இதைக் குறித்துக் கொள்ளுங்கள்: தேவனுடைய வார்த்தையின் மூலம் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் மாத்திரமே நான் அவர்களுக்குப் பதில் அளித்து வருகிறேன். புரிகிறதா? அதற்குச் சரியான பதில் அளிக்கப்படவில்லையென்றால், உங்களுடைய... மற்றொரு கேள்வி, ஏன், நீங்கள்...நீங்கள் அதை மீண்டும் மேடையில் வைக்கவோ அல்லது அதைக் குறித்து எங்களிடம் வந்து பேசவோ அல்லது நாங்கள் செய்யக்கூடிய எந்தக் காரியத்தையும் நீங்கள் செய்ய நான் விரும்புகிறேன். இங்குள்ள சகோதரன் நெவிலும் நானும் ஒருக்கால், நாம் ஒத்துக்கொள்ளாத காரியங்களை நாம் காணலாம்.

மேலும்—மேலும் திரு. பாக்ஸ்டர், என்னுடைய கூட்டத்தில் என்னுடைய நெருங்கிய சகாக்களில் ஒருவரான திரு.பாக்ஸ்டர், நாங்கள் பல வருடங்களாக ஒன்றாக இருந்து வருகிறோம்; அவர் ஒரு உண்மையான வேதாகம விளக்கத்தை அளிப்பவராய் இருக்கிறார், ஆனால் அவர் ஆயிர வருட அரசாட்சியில் நம்பிக்கைக் கொண்டிருக்கவில்லை. நான் வந்து, "சகோதரன் பாக்ஸ்டர் அவர்களே, நீங்கள் இந்த வேத வாக்கியங்களை எப்படிப் படிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்கிறேன். அவர் ஒரு பக்கம் குதித்தால், நான், "இப்பொழுது, ஒரு வெட்டுக்கிளியைப் போல் நடந்து கொள்ளாதீர்கள். நீங்கள் அமைதியாக இருங்கள்" கூறுவேன். பாருங்கள். மேலும் நான், "அவர்கள் கிறிஸ்துவுடனேகூட பூமியின் மேல் ஆயிரம் ஆண்டுகள் அரசாண்டார்கள்" என்றேன். "அதைக் குறித்து என்ன?" என்று கேட்டார்.

அவர், "ஆயிரம் ஆண்டுகள் என்பது ஒரு குறிப்பிட்ட கால

இடைவெளியைக் குறிக்கும் என்று நான் நினைக்கிறேன்" என்றார்.

நான், "இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள், நீங்கள் கோட்பாட்டை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். வேதம், 'ஆயிரம் ஆண்டுகள்' என்று கூறியுள்ளது" என்றேன். ஹூ-ஹூ. அவர்கள்— அவர்கள் தொடர்ந்து குதித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள், பாருங்கள், நாம் அதைச் செய்யவில்லை, ஆனால், ஆயிரம் வருட அரசாட்சி இருக்கிறதா அல்லது இல்லையா என்பதன் பேரில் நாங்கள் பிரிந்து போகவில்லை; நாங்கள் ஒன்று சேர்ந்து பரலோகத்திற்குச் செல்லப் போகிறோம், ஏனென்றால் அவர் மறுபடியும் பிறந்திருக்கிறார், பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்.

எனவே அந்தவிதமாகவே இந்தக் கேள்விகளைக் குறித்து நீங்கள் உணர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்: இவைகள் உங்களுக்கு நான் அறிந்த வரையில் மட்டுமே.

அப்பொழுது இங்கு யாராவது உட்கார்ந்து கொண்டிருப்பதை நான் கண்டால், இயேசு வெள்ளைக் குதிரையின் மேல் சவாரி செய்து வருகிறார் என்று அவர்கள் விசுவாசித்தால், மற்றும் அவர் ஒரு வெண்மையான மேகத்தில் வந்துகொண்டிருந்தார் என்று நான் விசுவாசித்தால்; இப்பொழுது, நான் என்னுடைய நண்பன் ஒரு வெள்ளைக் குதிரையை விசுவாசித்தபடியால், நான் "வெள்ளை குதிரை" என்று கூறிவிட்டு, அதே சமயத்தில் வேதப்பிரகாரமாக, அவர் ஒரு மேகத்தின் மேல் சவாரி செய்து கொண்டிருந்தார் என்று நான் விசுவாசித்தால், நான் ஒரு மாய்மாலக்காரனாயிருப்பேன். அது உண்மை. அது எப்படியுள்ளது என்பதை நான் வெளிப்படுத்தி, அதற்கான காரணத்தையும் கூற வேண்டும்.

பவுல், "எல்லா காலங்களிலும் ஆயத்தமாக இருங்கள், சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் உடனடியாகச் செயல்படுங்கள்; உங்களுக்குள் இருக்கும் நம்பிக்கைக்காக ஒரு மனிதனுக்கு பதிலை அளிக்க ஆயத்தமாயிருங்கள்" என்று கூறினான். பாருங்கள். அதைத்தான் நாங்கள் செய்ய முயற்சிக்கிறோம்.

இப்பொழுது, இந்த வேத வாக்கியங்கள், அவைகளில் சில இங்குள்ளவை, சிறு கருத்துக்கள் போன்றவைகள், நான் முதலில் அவைகளுக்கு பதிலளிக்க முயற்சிப்பேன், நான் அவைகளை வேறுபடுத்த முயற்சித்தேன். நான் இதைப் பெற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கலாம், இதிலிருந்து சிலவற்றைப் பெற்றுக் கொள்ள சிறிது நேரம் ஒத்துவாக்கியத்தை உபயோகிக்கலாம். அதன்பின்னர், இங்கே, நான் தவறாக அல்லது வேறெதையாவது மேற்கோள் காட்டினால், நீங்கள் என்னுடைய கவனத்தை முழுமையாக ஈர்க்கும்படி நீங்கள் பாருங்கள், எனக்கு ஒரு குறிப்பை எழுதி, எனக்குச் சொல்லுங்கள்.

இப்பொழுது, நாம் இதைத் திறக்க முயற்சிக்கும் முன்பு...

இப்பொழுது, நண்பர்களே, நான் இதைச் செய்வதற்கு காரணம், நான் உங்களுக்குச் சொல்கிறேன், இது ஒரு நோக்கத்திற்காகவே, நீங்கள் யாவரும் அதை அறிவீர்கள். இந்தக் கூட்டம் ஒரு நோக்கத்திற்காகவே இருந்தது. அந்தப் பனிப்புயலில் தேவன் என்னைத் திருப்பி, இங்கே இந்த நோக்கத்திற்காகவே என்னைத் திருப்பி அனுப்பினார் என்று நான் நம்புகிறேன். நீண்ட காலமாக இங்கே கூடாரத்தைச் சுற்றி ஏதோ ஒரு சிறு கோளாறு இருந்து வருகிறது. நான் அதைக் கண்டறிய வேண்டும். நான் அதைக் கண்டறியும்போது, அதைக் குறித்து என்னால் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கப் போகிறேன். அது உண்மை. சபையானது இசைந்து செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீங்கள் முன்னேறிச் செல்லாத காரணத்தால், ஒரு சிறு தவறு உள்ளது. நீங்கள் ஜனங்களை இரட்சிக்கப்பட வைத்துக் கொண்டிருக்கிறீர்கள், அது உண்மை, அது அற்புதமானது, ஆனால் நீங்கள் முன்னேற வேண்டிய விதத்தில் நீங்கள் முன்னேறிக் கொண்டிருக்கவில்லை. நாம் பிரசங்கிமார்களையும் மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் மாற்ற வேண்டும். செய்தியானது தொடர்ந்து செல்ல வேண்டும்.

நான் நம்முடைய சகோதரனையும், போதகரையும் வெளியே அழைத்து வந்திருக்கிறேன், சகோதரன் நெவில் அவர்களும் நானும் ஒன்றாக, நாங்கள் ஆலையினூடாகச் சென்றுள்ளோம். நான்—நான் பார்க்க விரும்புகிறேன்...உங்களுடைய போதகர்களில் ஒருவன் என்ற முறையில், அது—அது என்னுடைய கடமையாயுள்ளது. நேற்று மாலை...சபையில் இப்பொழுது உள்ள எந்தக் காரியத்தையும் நான் காணும்போது, அந்தக் காரணத்தினால்தான் நான் இந்தக் கூட்டத்தை ஒருபோதும் விளம்பரப்படுத்தவில்லை. நான் அதை அப்படியே அறிவித்துவிடுவேன்; ஏன், ஒவ்வொருவரும் வரவேற்கப்படுகிறீர்கள். நிச்சயமாகவே, நீங்கள் வர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] ஆனால், அது இந்தச் சபையில் தான் உள்ளது.

மேலும் நான், "முதல் இரவைக் குறித்தும், சபைக்கு இன்றைக்கு என்ன...மற்றும் காலத்தைக் குறித்தும் நான் போதிப்பேனானால், புவியியல் ரீதியாக, வேதாகமத்தில், எந்த நிலையில் இருக்கிறோமோ, அதன் அடிப்படையில் சபை நிச்சயமாக அதைக் குறித்து விழித்துக் கொள்ளும். அதன்பின்னர் 'மிருகத்தின் முத்திரை' என்ற தலைப்பில் பேசும்போது, அது என்னவென்று அவர்கள் காணட்டும்; அதன்பின்னர் 'தேவனுடைய முத்திரை.'" அதுதான் இப்பொழுது ஆதரவாகவும் எதிராகவும் உள்ளது, அதுவே இப்பொழுது இருளாகவும் வெளிச்சமாகவும் உள்ளது, அதுவே இப்பொழுது உள்ளே அல்லது வெளியே உள்ளது, இப்பொழுது போதிக்கப்பட வேண்டிய மிக இன்றியமையாத காரியம் அதுவேயாகும்.

2 நண்பர்களே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான்

இதை என்னுடைய இருதயத்திலிருந்து, தேவனுக்கு முன்பாகத் தாழ்மையாகக் கூறுகிறேன், கடந்த மூன்று இரவுகளில் நான் பேசிய வார்த்தைகளைப் பேசுவதற்குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நான் ஒருபோதும் இவ்வளவாய் உணர்ந்ததேயில்லை. அது உண்மை. ஆனால் அது என்னைக் கட்டுக்கடங்காமல் கொண்டு சென்றுவிட்டது. நான் வீட்டிற்குச் சென்றுவிடுவேன், வீட்டிற்கு வந்த பிறகும் என்னால் தூங்கக்கூட முடியவில்லை, அது ஒருவிதமான அப்படிப்பட்ட அபிஷேகமாய் இருந்தது!

3 இப்பொழுது, நான் எங்காவது ஏதாவது ஒன்றைக் கண்டறியலாம் என்ற நம்பிக்கையில் *இவைகளை* இங்கே வெளியிடுகிறேன். பார்த்தீர்களா? இங்கே ஒரு துண்டு காகிதத்தில் ஜனங்களின் உணர்வைப் பெறுங்கள். நான் இதை இந்தவிதமாகக் கண்டறியவில்லையென்றால், கர்த்தர் அதை எனக்கு வெளிப்படுத்தவில்லையென்றால், நான் அதைக் கண்டறியும் வரையில் நான் தொடர்ந்து இருப்பேன். தேவன் அதை எனக்கு அருளுவார். அது உண்மை. ஆகையால் அதன்பின்னர் நாம் அதைக் கண்டறிகிறோம், அது எங்கோ புதைக்கப்பட்டிருந்த ஒரு சிறிய, பழைய பொன் பாளமாக இருக்கலாம், ஆனால் ஆகானும் கூட ஒன்றை உடையவனாயிருந்தான். நாம் அந்தக் காரியத்தை அகற்றிவிட வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள், அப்பொழுது நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முடியும்.

4 இப்பொழுது, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது நாம் வார்த்தையைத் திறப்பதற்கு முன்பு... இப்போது—இப்போது, உங்களில் காலையில் ஞாயிறு பள்ளியுள்ள ஒவ்வொருவரும், நிச்சயமாக, நீங்கள்...நான்—நான் உங்களுடைய ஞாயிறு பள்ளியைத் தவறவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளமாட்டேன், அது—அதுவே உங்களுடைய சபைக்கான உங்களுடைய கடமையாகும். அது உண்மை. ஆனால், இப்பொழுது, நீங்கள் ஞாயிறு பள்ளிக்குச் செல்லவில்லையென்றால், காலையில் வந்து எங்களைப் பாருங்கள். அதன்பின்னர் உங்களுடைய சபையில் நாளை இரவு, ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகள் நடைபெறவில்லையென்றால், நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள். எந்த நேரத்திலும் நீங்கள் வருவதற்கு நாங்கள் மகிழ்ச்சியடைவோம். எனவே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. என்னுடைய சார்பாக எல்லா கிறிஸ்தவர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள்; நான் இங்கு அடிக்கடி வருவதில்லை.

5 நான் அங்கே அந்த அறையில் பார்த்துக் கொண்டிருந்தேன், நான் அங்கு எழுதி வைத்துள்ள ஒரு சிறு காகிதம் இன்னமும் இந்தச் சபைக்கு ஒரு நினைவுச் சின்னமாக இங்கே உள்ளது. அப்பொழுது நான், “கர்த்தர் என்னை வெளியே அழைக்கிறார்” என்றேன், நாங்கள் யாவரும் அழுது புலம்பினோம். நான் சென்ற முதல் இரவு எனக்கு

நினைவிருக்கிறது. என்னுடைய முதல் அழைப்பு, இங்குள்ள யாருக்காவது நினைவிருக்கிறதா? நீங்கள் யாவரும் என்னைப் செயின்ட் லூயிஸுக்கு அனுப்புவதற்காகப் பணத்தை திரட்டினீர்கள், அங்கே சிறுமி பெட்டி டாஹெர்ட்டி சுகமாக்கப்பட்டாள். நான் தங்கியிருந்தேன்...

6 நினைவிருக்கட்டும், நான் அணிவதற்காக இங்கே யாரிடமோ ஒரு மேலங்கியைக் கடன் வாங்கினேன். நான் அணிந்து கொள்ள மேலங்கி ஏதும் வைத்திருக்கவில்லை. நான் அங்குச் சென்று படுக்கையற்ற ஒரு இரயிலில் அமர்ந்து செயின்ட் லூயிஸுக்கு சென்றேன். அந்த நேரம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? நான் சகோதரர்களில் ஒருவரின் மேலங்கியைக் கடன் வாங்கியிருந்தேன், அது எனக்கு மிகப் பெரியதாயிருந்தது, நான் அதை என் கையில் எடுத்துக்கொண்டேன்; ஏனென்றால் அது குளிர்ச்சியாக இருந்தது, என்னிடம் ஒரு மேலங்கி இல்லை.

7 அதன்பின்னர் நாங்கள் அங்குச் சென்றோம், நான் செயின்ட் லூயிஸுக்குச் சென்றேன், நான் அங்குச் சகோதரன் டாஹெர்ட்டியை சந்தித்தேன். அவருடைய குட்டிப் பெண்ணை, சுற்றிலுமுள்ள எல்லா வைத்தியர்களும், சிறப்பு மருத்துவர்களும், மருத்துவமனைகளும் அவளைக் கைவிட்டிருந்தனர். அவள் ஒரு வெறிபிடித்த பைத்தியத்தைப் போல இருந்தாள். நகரம் முழுவதிலும் இருந்த ஊழியக்காரர்கள்...எல்லா இடங்களிலும் இருந்து, அங்கே அவளுக்காக ஜெபித்தனர். நான் உள்ளே சென்று அவளுக்காக ஜெபித்தேன், அந்தப் பரிதாபமான ஜனங்கள் மிகவும் வாடிப்போய்க் காணப்பட்டனர். அங்கே இருந்த அந்தச் சிறு பெண் கதறி அழுது, சண்டையிட்டுக் கொண்டிருந்தாள்.

8 மேலும்—மேலும் அவளால் இனிமேல் ஒரு மனிதனைப் போலச் சத்தமிட முடியவில்லை, ஒரு மிருகத்தைப் போலச் சத்தமிட்டாள், அவளுக்கு...ஓ, சுமார் மூன்று அல்லது நான்கு மாதங்களாகக் குரல் மிகவும் கரகரப்பாக இருந்தது. அது முதுகுத்தண்டில் உள்ள மூளைக் கவிகைச் சவ்வழற்சி அல்லது...இல்லை, முதுகுத்தண்டில் நரம்பு நடுக்கு வலிப்பு நோயாகும். அவளுடைய சிறிய உதடுகள் முழுவதும் கடிக்கப்பட்டு, இரத்தம் வடிந்து கொண்டிருந்தன. அவளுடைய சிறிய விரல்கள் முழுவதும் இரத்தம் கசிந்தது, அங்கே அவள் விரல்களைக் கடித்து, அது போன்ற காரியங்களைச் செய்து, கூச்சலிட்டுக் கொண்டேயிருந்தாள்.

9 நான் ஜெபித்துவிட்டு, சபைக்குச் சென்றேன். மணிக்கணக்கில் காத்திருந்தனர். பழைய காரில் உட்கார்ந்து கொண்டு காத்திருந்தேன். பரலோகத்திலிருந்து செய்தி வரும் வரை நான் அந்தக் காரியத்தை விட்டு விலகிப் போவதாக இருக்கவில்லை. அங்கே காரில் அமர்ந்திருக்கையில், எனக்கு முன்பாக ஒரு தரிசனம் உண்டானது, "போய்த் தகப்பனிடமும், தகப்பனிடமும் சொல்..." என்று கூறினது. மேலும், "அன்றொரு நாள் நகர மையத்தில், அந்தப்

பெண்மணி ஒரு சிறிய, வெள்ளை கொதிகலன் வாங்கினாள் என்று நீ போய்க் கூறு. அதற்கு முன்பு அதில் தண்ணீர் இருந்ததேயில்லை" என்று கூறிற்று. மேலும், "அவளை மூன்றாவது அலமாரியைப் பார்க்கச் சொல். அப்பொழுது அவள் ஒரு துண்டு காகிதத்தில் ஒரு கைக்குட்டையை கண்டறிவாள், அது இதற்கு முன்பு ஒருபோதும் பயன்படுத்தப்படாதது. அதில் தண்ணீர் நிரப்பும்படி அவளிடம் சொல். தகப்பனை உன்னுடைய வலது பாரிசத்திலும், பாட்டனாரை உன்னுடைய இடது பாரிசத்திலும் நிறுத்து, 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே...' என்று மீண்டும் சொல். நீ அதைத் துவங்கும்போது, அவள் அவளுடைய முகத்தில் துணியைத் துடைக்கட்டும். அதன்பின்னர் ஜெபத்தின் நடுவில் அவள் அதனுடைய கரங்களையும், அதன்பின்னர் அதனுடைய பாதங்களையும் தொட வேண்டும். அப்பொழுது நின்று, '**கர்த்தர் உரைக்கிறதாவது**!'" என்று கூறு.

10 என்ன சம்பவித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள், நீங்கள் அறிந்திருக்கவில்லையா? அவள் அங்கேயே சுகமடைந்தாள். நாங்கள் எங்களுடைய கரங்களை ஒன்றாகச் இணைத்து, தெருவில் நடந்து, உணவருந்தின உணவகத்தில் ஒன்றாகச் சேர்ந்து ஒரு குளிர்பானம் குடித்தோம். அது உண்மை. அது செயின்ட் லூயிஸை அசைக்கச் செய்தது; முதலிரவில் பதினான்காயிரம் பேர்கள் அங்கு என்னுடைய முதல் கூட்டத்தில் இருந்தனர். சரிதான். செயின்ட்...

11 நான் அதிலிருந்து விலகிப் போய்; அவர்களை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக வரச் செய்தது மிகவும் வருத்தமளிக்கிறது. ஒரு வீட்டிற்குச் சென்று, அது முடியும் வரை அங்கே தங்கிவிட்டு, வீட்டிற்குத் திரும்பி வருவது, அது கூட்டங்களைக் காட்டிலும் மேலானதாக இருந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

12 சரி, நாம் இப்பொழுது இந்த வார்த்தையின் ஆக்கியோனிடத்தில் பேசும்போது, நாம் நம்முடைய தலைகளை வணங்குவோம்.

13 எங்களுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தயவில், எங்கள் பிதாவே, நாங்கள் உம்மை அணுகுகிறோம். நீர் எங்களுடைய பாவங்களையும், உமக்கு எதிரான அக்கிரமங்களையும் மன்னிக்க வேண்டும் என்று அவருடைய நாமத்தில் தெய்வீக இரக்கத்திற்காக நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். இன்றிரவு இந்தச் சிறிய சபையில் ஏதாவது பாவம் இருக்குமானால், கர்த்தாவே, இங்கே நிற்கிற ஒரு ஊழியக்காரனைப் போல, ஆடுகளின் ஒரு மேய்ப்பனாகவும், நாங்கள் ஜெபிக்கிறோம்...வேதம் கூறியுள்ளதுபோல, "தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாக இருங்கள்." இப்பொழுதும், பிதாவே, நீர் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுடைய எல்லா பாவங்களையும் மன்னிக்க வேண்டும் என்று நான் அவர்களுக்காகப் பரிந்து பேசுகிறேன். ஜனங்களுக்கு மத்தியில் உள்ள வியாதியைச் சுகப்படுத்தும். பரலோகப் பிதாவே, உம்முடைய

இரக்கங்கள் இப்பொழுது எங்கள்மேல் இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

14 அநேக வீடுகளிலிருந்தும், அநேக ஜனங்களிலிருந்தும், காகிதத்தில் எழுதப்பட்டு, இங்கே எனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது, சாதாரண பள்ளிக் கல்விக்கு அப்பாற்பட்ட உண்மையான வேதாகம கேள்விகளை, வேண்டுகோள்களை வைக்கிறது. கர்த்தராகிய இயேசுவே, உம்முடைய உதவி எங்களுக்குத் தேவை. இப்பொழுது இவைகளை எடுத்துக் கொண்டு, அறைக்குள் நடந்து, ஜெபம் செய்து, வெளியே நடந்து, அவைகளை இங்கே பிரித்து, இப்பொழுது பதிலளிக்கப்பட வேண்டியவைகளை ஒரு பக்கம் வைத்து, மற்றவை வேதவாக்கியத்திற்குள்ளாகச் செல்ல வேண்டியதாயுள்ளது. கர்த்தாவே, இந்த நேரத்தில் எனக்குத் தெரிந்தவரையிலும் அதுதான்.

15 இப்பொழுதிலிருந்து நீர் இங்கிருந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும், இன்றிரவு இங்குள்ள உம்முடைய ஜனங்களை, பேசுபவரின் உதடுகளிலும், கேட்பவர்களின் செவிகளிலும் அபிஷேகியும் என்றும் நான் ஜெபிக்கிறேன். பரிசுத்த ஆவியானவர் வந்து, இப்பொழுது வார்த்தையைப் பற்றிப் பிடித்து ஒவ்வொரு இருதயத்திற்குள்ளும் பதியச் செய்வாராக, அது தயவின் ஆவியில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவ்விதமாகவே கொடுக்கப்படுவதாக. இன்றிரவு ஆராதனை முடிந்ததும், நாங்கள் வீட்டிற்குச் செல்வோமாக, "அவருடைய பிரசன்னம் மற்றும் அவருடைய ஆசீர்வாதங்களின் நிமித்தமாக எங்களுடைய இருதயங்கள் எங்களுக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்லையா?" என்று கூறுவோமாக. கர்த்தாவே, என்ன கூற வேண்டும் என்பதை அறியாதிருக்கிறபடியால், நான் இந்தக் கேள்விகளோடு என்னை உம்மிடத்தில் சமர்ப்பிக்கிறேன், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், பதிலுக்காக. ஆமென்.

16 நண்பர்களே, உங்களுடைய பயபக்திக்காக உங்களுக்கு நன்றி. இந்தக் கேள்விகளில் பெரும்பாலானவை என்னவாயிருந்தன என்பதை நான் உங்களுக்குக் காண்பிக்க விரும்புகிறேன்.

சகோதரன் பில், தயவு கூர்ந்து அடுத்த வாரம் முழுவதும் தொடருங்கள்.

தயவு செய்து இன்னும் ஒரு வாரம் தங்கியிருங்கள்.

தயவு செய்து சற்று நேரம் தங்கியிருங்கள்.

சகோதரன் பில், தயவு கூர்ந்து அடுத்த வாரம், இன்னும் சிறிது காலம் தங்கியிருங்கள், எங்களுடைய ஆத்துமாக்கள் இந்த விதமான ஆகாரத்திற்காகப் பசியாயிருக்கின்றன.

இந்தச் சபையானது உங்களுக்குப் போதிக்கிறதா...அது அங்கே உள்ளே விழுந்திருக்க வேண்டும். அது தவறான இடத்தில் உள்ளது.

எனக்கு இரண்டு வயதுடைய, இரண்டு பையன்கள் இருக்கின்றனர்...அதாவது, நான் அவைகளை அதன் பேரில் கலந்துவிட்டேன் என்று, நான் யூகிக்கிறேன். இப்பொழுது, இங்கே, நான் அதை இங்கே கொண்டு வருவது நல்லது, அது ஒரு தனிப்பட்ட விவகாரத்தைக் குறித்ததாயுள்ளது.

சகோதரன் பில், நீங்கள்—நீங்கள் இன்னும் ஒரு வாரத்திற்கு மேலாக விரும்புகிறீர்களா? நாங்கள் இன்னும் ஒரு வாரம் இந்தச் சுவிசேஷ போதனையை விரும்புகிறோம்.

நீங்கள் இன்னும் ஒரு வாரம் தங்க வேண்டும் என்பதே என்னுடைய வேண்டுகோள். நீங்கள் இன்னும் சிறிது காலம் தரித்திருக்க வேண்டும் என்று நான் மிகவும் விரும்புகிறேன், உங்களுக்குத் தெரியும். நாங்கள் எப்பொழுதுமே...நாங்கள் எப்பொழுதுமே அதிகமாகக் கற்றுக்கொள்ள முடியும்.

இப்பொழுது, தயவு செய்து இன்னும் ஒரு வாரம் தங்கியிருப்பீர்களா?

சகோதரன் பில், தயவு செய்து எங்களுக்காக இன்னும் ஒரு வாரம் பிரசங்கியுங்கள். எங்களுக்கு இது தேவை.

சகோதரன் பில், தேவன் உங்களுடைய மனதை மாற்றி, உங்களை இன்னும் ஒரு வாரம் தங்கச் செய்ய வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாயுள்ளது.

என்னுடைய கேள்வி என்னவெனில்: பறக்கும் தட்டுகள் என்றால் என்ன, அவைகள் தேவனிடத்திலிருந்து ஏதோ ஒரு அடையாளத்திற்காக அனுப்பப்பட்டவையா? நீங்கள் இன்னும் ஒரு வாரம் தங்கியிருக்கும்படி நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தயவு செய்து இன்னும் ஒரு வாரம் தங்கியிருங்கள்.

17 (*இது நீங்கள் சபைக்குச் செல்ல, யாரோ ஒருவருக்காக ஜெபிக்க, பாருங்கள், ஒரு மருத்துவமனைக்குச் செல்லும்படியான வேண்டுகோளாயிருந்தது.*)

18 இப்பொழுது, இங்கே மற்றொரு ஒருவர் கூறினார்... நான்—நான் இதைக் கேட்பதை பாராட்டுகிறேன். என்னுடைய நியாயாதிபதியாகிய சர்வ வல்லமையுள்ள தேவன், இப்பொழுது இங்கே இந்தப் புனிதமான இடத்தில் நின்றுகொண்டிருக்கிறார்... நான் வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன்பு, கர்த்தருடைய ஆவியானவர் என்னிடம் கூறினார், இந்தக் கேள்வி இன்றிரவு இங்கே இருக்கும் என்று கூறினார். அதைக் குறித்து எனக்கு ஒன்றுமே தெரியாது, ஆனால் அது இங்கே இருக்கும் என்று நான் அறிந்திருந்தேன்:

யேகோவா சாட்சிக் குழு ஒரு கள்ளப் பிரிவா?

19 பாருங்கள், யாரோ ஒருவர்...பரிசுத்த ஆவியானவர், அந்த இடத்தில்...இங்கு வருவதற்கு முன்பு என்னுடைய குளியலறையில்

நின்றுகொண்டிருந்தார்; என்னுடைய பயபக்திக்குரிய நியாயாதிபதியாகிய தேவன் என்னிடத்தில், "அது மேடையின் மேல் வைக்கப்பட்டிருக்கும்," என்றார், நான் "அதைக் குறித்து ஒன்றும் கூறமாட்டேன்; அப்படியே செல்" என்றார். பார்த்தீர்களா? எனவே நான்...நேற்றிரவு நான் என்ன கூறினேன் என்பதை நீங்கள் அறிவீர்கள், நீங்கள் அறிந்திருக்கவில்லையா? சரி, அது அப்படித்தான் இருந்தது.

20 சரி, இப்பொழுது இவைகளில் சிலவற்றை நாம் இங்கே துவங்குவோம்.

21 நான் எந்த ஒரு குறிப்பிட்ட காரியத்தையும், யாரோ ஒருவரையோ அல்லது தனிப்பட்ட நபரையோ அதைப் போன்று கூற விரும்புகிறதில்லை. நான் முழு காரியத்தையும் ஒன்றாக இணைத்து... அதை ஒரு வழியில் போதிக்க விரும்புகிறேன். மேலும்—மேலும் நீங்கள் புரிந்து கொண்டீர்கள், நீங்கள் புரிந்து கொள்ளவில்லையா? நான் இங்கே நின்று கொண்டு, "இப்பொழுது, சகோதரன் நெவில் *இன்ன-இன்ன மற்றும் குறிப்பிட்ட-குறிப்பிட்ட* காரியம்" என்று கூறினால்...அவரைக் குறித்து நான் அவ்வாறு கூற வேண்டுமானால், நான் அவருடைய வீட்டிற்குச் சென்று, அவரை வெளியே அழைத்து, அதைக் குறித்து அவரிடத்தில் பேசுவேன். பாருங்கள், நான்—நான் சகோதரன் நெவில் அவர்களிடம் கூறுவேன்.

22 ஆனால் இப்பொழுது, இங்கே சில கேள்விகள் உள்ளன. இப்பொழுது, எங்கிருந்து துவங்குவது என்று எனக்குத் தெரியவில்லை, அது ஒரு கட்டாக இங்கே கிடக்கிறது. அது கூறுகிறது:

25. புராட்டஸ்டென்ட் சபை கத்தோலிக்க சபையோடு கொண்டிருந்த தொடர்பைக் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

26. "மிருகத்தின் சொரூபம்" என்பதன் பொருள் என்ன?

23 இப்பொழுது, கடைசி கேள்விகளில் ஒன்று...அநேகமாக ஜனங்களுடைய...இப்பொழுது, எனக்குத் தெரிந்த மிகச் சிறந்த முறையில், தேவனுடைய ஒத்தாசையினால் நான் என்னால் முடிந்தவரை முயற்சிப்பேன். இப்பொழுது அவர் எனக்கு அறிவைக் கொடுப்பாரானால் நலமாயிருக்கும், ஏனென்றால் நான்—நான் அவைகளை மேடையின் மேல் கொண்டு வந்தேன் என்பதை தேவன் அறிவார்.

இப்பொழுது, புராட்டஸ்டென்ட் சபை கத்தோலிக்க சபையோடு கொண்டிருந்த தொடர்பைக் குறித்து நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

24 இப்பொழுது, நான் அதற்கு முதலில் பதிலளிப்பேன், தேவன் உதவி செய்வாராக. கத்தோலிக்க சபை...என்று நான் கூறினேன். கடந்த இரவு ரோமாபுரியிலிருந்து மிருகத்தின் முத்திரை வரவேண்டியதாயிருந்தது என்பதை நாம் கண்டறிகிறோம். அது

சரியா? அது ரோமாபுரியைத் தவிர வேறு எந்த நாட்டிலிருந்தும் வர முடியாது. அங்குதான் அது அமர்ந்திருக்கிறது, அங்கேதான் அது வைக்கப்பட்டுள்ளது. கத்தோலிக்க ஜனங்களுக்கு எதிராகவும், எவருக்கு எதிராகவும் எனக்கு ஒன்றுமில்லை என்று நான் கூறினேன். நாம் யாவரும் பரலோகத்திற்குச் செல்ல முயற்சிக்கும் மானிடர்களாய் இருக்கிறோம்.

25 போப்பாண்டவர் போதிக்கும் ஒரு நபர், கான்டர்பரியின் தலைமைப் பேராயர் மற்றொருவர், மற்றொருவர், மற்றொருவர், மற்றொருவர்; நான் போதகர்களில் ஒருவன், அவ்வளவுதான். அவர்கள் போதித்து, ஒருக்கால் நான் ஒரு மதவெறியன் என்றும், நான் தவறாக இருந்தேன் என்பது போன்று கூறுவார்கள். எனக்கு ஒரு உரிமை உண்டு...என்னால் அதை வேத வாக்கியத்தின் மூலம் நிரூபிக்க முடிந்தால் நலமாயிருக்கும். அல்லது நான் ஒரு மதவெறியன் என்று அவர்களால் வேத வாக்கியங்களைக் கொண்டு அதை நிரூபிக்க முடிந்தால், அப்பொழுது நான் ஒரு மதவெறியன். ஆனால் அவர்கள் தங்களுடைய அமைப்பில் தவறாயிருக்கிறார்கள் என்று வேத வாக்கியங்களைக் கொண்டு என்னால் நிரூபிக்க முடிந்தால், அப்பொழுது அது தவறாகும்; வேதவாக்கியம் சரியாயிருக்கிறது. இப்பொழுது நீங்கள் ஒரு இடத்தில் மாத்திரம் இல்லை, அது வேதாகமம் முழுவதிலும், எங்கும் வர வேண்டும்.

26 இப்பொழுது, நான், "கத்தோலிக்க சபையானது தாய் சபையாயிருந்தது" என்று கூறினேன், அது முற்றிலும் உண்மை. சபை ஸ்தாபன அமைப்புகள் என்று வரும்போது, கத்தோலிக்க சபை தாய் சபையாகும். கத்தோலிக்க சபைதான் முதலில் உருவாக்கப்பட்டது, சுமார்...உங்களிடம் உள்ளது சிறந்த வரலாறு, அது கி.பி. 606-ஐப் பற்றியது, அந்தக் காலகட்டத்தில் எங்கோ ஒரு இடத்தில், அப்போஸ்தலர்களில் இரண்டாம் அல்லது மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்த ஆதி பிதாக்கள் இருந்தனர். அவர்கள் மரித்துப்போய், சிறு சிறு கொள்கைகளாகச் சிதறத் துவங்கிவிட்டனர். மேலும், ரோமானியர்கள் மதம் மாறியதால், ரோமப் பேரரசு அரசை ஆதிக்கம் செய்தது, அதன்பின்னர் சபையும் அரசும் ஒன்று சேர்ந்து, "உலகளாவிய மார்க்கம்" என்றழைக்கப்பட்ட ஒரு மார்க்கத்தை ஸ்தாபித்தனர். *கத்தோலிக்கம்* என்ற வார்த்தை "உலகளாவிய" என்று பொருள்படுகிறது. அவர்கள் சபையை ஸ்தாபித்தனர், அதுவே முதல் முறையாக அந்த மார்க்கமாயிருந்தது, உலக சரித்திரம் முழுவதிலும் கிறிஸ்தவ மார்க்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

27 யூத மார்க்கம் ஒருபோதும் ஒரு ஸ்தாபனமாயிருக்கவில்லை. அது ஒரு சுயாதீனமான ஜனமாயிருந்தது. அவர்களுக்குச் சபைகள் இருந்தன. ஆனால் அவர்களுக்குச் ஒரு ஸ்தாபனம் இருக்கவில்லை. அதாவது, தேவன் ஒரு ஸ்தாபனத்தோடு அல்ல, ஒரு தேசத்தோடு தொடர்பு கொண்டார். அது ஒரு தேசமாக இருந்தது.

28 இப்பொழுது. மேலும், அதன்பின்னர், கத்தோலிக்க சபையானது முதல் ஸ்தாபனமாயிருந்தது. அதன்பின்னர் அந்த ஸ்தாபனம் என்னவாயிருந்தது என்பதை கண்டறிய நாம் அதை வேதத்தில் எடுத்துப் பார்த்தோம். தேவனுடைய வார்த்தையின்படி, அது ஒரு தனி மனிதனால், ஒரே மனிதனால் கட்டுப்படுத்தப்பட வேண்டியதாயிருந்தது. அந்த மனிதன் வேதாகமத்தின்படி, ரோமாபுரியில் ஏழு மலைகளின் மேல் அமைக்கப்பட்டிருந்த ஒரு சபையில் இருக்க வேண்டியவனாயிருந்தான். அங்கே இல்லை...அவன் உலகத்தில் உள்ள ஒவ்வொரு தேசத்திலும் ஆளும் வல்லமையை, மதசம்பந்தமான ஆளும் வல்லமையை உடையவனாயிருக்க வேண்டியவனாயிருந்தான். உலகத்தில் வேறு யாருமே கிடையாது.

29 மேலும்—மேலும் கம்யூனிஸம், இயேசு கூறிய அந்திக்கிறிஸ்து அல்ல—அல்ல என்பதை நாம் கண்டறிந்தோம். கம்யூனிஸம் என்பது ரஷ்யாவைப் போன்ற ஒரு தேசம் அல்ல. கம்யூனிசம் ஒரு ஆவி. அமெரிக்கா அதனால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டுள்ளது. அது சபைகளில் உள்ளது, அது ஜனங்களுக்குள் உள்ளது, அது வியாபாரத்தில் உள்ளது, அது எல்லாவிடங்களிலும் உள்ளது. கம்யூனிஸம், அதனுடைய ஆவி, அது பள்ளிகளில் உள்ளது, அது வீடுகளில், எங்கும் உள்ளது.

30 அதன்பின்னர்—அதன்பின்னர் அவர்கள் முரணாயிருந்த இந்தச் சபையை ஸ்தாபித்தபோது...இப்பொழுது நாம் ஏழு சபைக் காலங்களையும், தீர்க்கதரிசனத்தையும் எடுத்துக் கொண்டு, அதேவிதமாகவே தேவன் அவர்களை வேதாகமத்தினூடாகச் சரியாக இங்கே நமக்குக் கொண்டு வந்தார். ஒவ்வொரு காலத்திலும் சரித்திரத்தின்படியே, வேதாகமத்தின்படி வந்ததாக நாம் சரித்திரத்தின்படியே கண்டோம்; இருண்ட காலங்களினூடாக ஒவ்வொருவரும் சரியான நேரத்தில் உள்ளே வந்தனர். அதன்பின்னர் கத்தோலிக்க சபையானது இருண்ட காலத்தில் உருவானது.

31 அதன்பின்னர் சீர்திருத்தம் உண்டானது, அதுதான் மார்டின் லூத்தர். மார்டின் லூத்தர் ஒரு ஒளியை உடையவராயிருந்தார், அந்த ஒளி "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்; விசுவாசத்தினாலே நீதிமானாகுதல்," என்பதாகும்—சீர்திருத்தத்தில். ஒரு ஜெர்மானிய பாதிரியார் அதை மறுத்து, அவர் இராபோஜனம் எடுத்தபோது... அவர்கள், "இது கிறிஸ்துவின் சரீரமாய் *இருக்கிறது*" என்று கூற வேண்டியதாயிருந்தது, அவர் அதைத் தரையில் வீசி, "அது கிறிஸ்துவின் சரீரம் *அல்ல*; அது ஒரு அப்பம்!" என்றார். எனவே அவர் கத்தோலிக்க சபையைக் கைவிட்டு, ஆதி சீர்திருத்த காலத்தில் வெளியே வந்தார். மார்டின் லூத்தர் அதைச் செய்தார், அது ஒரு அற்புதமான அசைவு.

32 இப்பொழுது, தவறு, லூதர் தவறு செய்த இடம், கத்தோலிக்க சபை செய்தது போலவே, ஜனங்களை ஸ்தாபனமாக்கியது போன்றே,

லூத்தர் மற்றொரு ஸ்தாபனமாக்கினார்.

33 அதன்பின்னர், நேரடியாக, ஒரு புதிய வெளிச்சம் வந்தது. புதிய வெளிச்சம் வந்தபோது, தேவன் தம்முடைய ஜனங்களோடு வெளியேறினார். லூத்தரன் சபையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஜனங்கள், அவர்கள் தங்களுடைய சபையில் நிலைத்திருக்க வேண்டியதாயிருந்தது...அது கத்தோலிக்கர்கள் இருக்க வேண்டியது போலவே இருந்தது, ஆனால் கத்தோலிக்கர்களில் அநேகர் லூத்தரன்களாக இருந்தனர். பாருங்கள், அதன்பின்னர் வெஸ்லி பரிசுத்தமாகுதல் என்ற செய்தியோடு வந்தபோது, அதன்பின்னர் அநேக லூத்தரன்களால் தங்களுடைய சபையை விட்டு வெளியேற முடியவில்லை; ஆனால் அவர்களில் அநேகர் வெளியேறி, வெஸ்லி சபையை உருவாக்கினர்.

34 அதன்பின்னர் நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலுக்குப் பிறகு, பெந்தெகொஸ்தே வந்தது. அதன்பின்னர் பெந்தெகொஸ்தேயினர், மெத்தோடிஸ்டுகளிலிருந்து அநேகர் வெளிவந்து, பெந்தெகொஸ்தேயினராக மாறினர், ஏனென்றால் அது ஒரு பெரிய வெளிச்சமாயிருந்தது. இப்பொழுது பெந்தெகொஸ்தேயினர் அவர்கள் ஒவ்வொருவரையும் போலவே சரியாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளனர்!

35 இப்பொழுது, வேதம் அதைக் கூறுகிறது...இவைகள் வெளிப்படையான வார்த்தைகள், ஆனால் நான் அவைகளை வேதாகமத்திலிருந்து வாசிப்பேன். மேலும் உங்களுடைய மருத்துவர் போன்றவர்கள் இதைச் சொல்வதை நீங்கள் கேட்கிறீர்கள், நானோ வேதவசனத்திலிருந்து போதிக்கும் உங்கள் சகோதரன். வேதம் கத்தோலிக்க சபையை "ஒரு விபச்சாரி, ஒரு வேசி, வே-சி" என்று அழைத்தது. அதைத் தொடர்ந்து வந்த சபைகளை அவர் பிராடெஸ்டெண்டு என்று அழைத்தார், தாய்மார்கள்...இல்லை அவர்கள் "இந்தத் தாயின் வேசிகள்." மேலும் கத்தோலிக்க சபை அந்தக் காரியத்தை ஸ்தாபித்தது, அக்காலத்தில் தங்களிடம் இருந்த ஒளியாக, அல்லது அக்காலத்தில் தங்களிடம் இருந்ததைக் கொண்டு, எல்லா மக்களையும் நம்ப வைத்தது என்பது எப்பேர்ப்பட்ட தொடர்பு! லூத்தரன்களும் அதையே செய்தனர். அவள் அந்த மாதிரியான ஒரு மகத்தான ஸ்திரீ என்று வேதம் கூறியுள்ளது.

36 அந்த வகையான ஸ்திரீ என்பவள் யார்? அவள் விபச்சாரம் செய்து வாழ்பவள். சபைகள் ஜனங்களோடு ஆவிக்குரிய வேசித்தனம் செய்து கொண்டிருக்கின்றன. பார்த்தீர்களா? அவர்கள்—அவர்கள்...இங்கே வேதம் இதைப் போதிக்கிறது, அவர்கள் வேதாகமத்தோடு எந்தச் சம்மந்தமும் இல்லாத ஒரு கூட்ட கோட்பாடுகளை உருவாக்கிக்கொண்டனர். மேலும், கிட்டத்தட்ட இருபதுக்கும் *மேற்பட்ட* ஆண்டுகளாக நான் இங்கே நின்று, எந்தவொரு ஊழியக்காரரிடமும் எப்போது வேண்டுமானாலும் கேட்டிருக்கிறேன், வந்து எடுத்துக்கொள்ளுங்கள்...உங்களுடைய

பாடப்புத்தகத்தை உங்களுடைய பிரமாணத்தை அல்ல, ஆனால் வந்து வேதத்தை எடுத்து, வேதாகமத்தின் வெளிச்சத்தில், அது தவறென்று நிரூபிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். பார்த்தீர்களா? அது உண்மை.

37 முரண்பாடுகளைக் குறித்து, அவர்கள், "முரண்பாடுகளே!" என்கின்றனர். யாராவது எனக்கு வேதாகமத்தில் முரண்பாடான ஒன்றைக் காண்பித்தால், நான் இரண்டு மாத ஊதியத்தை அளிக்க முன்வந்துள்ளேன். அது அங்கே இல்லை. அது அங்குள்ளது என்று நீங்கள் நினைக்கிறீர்கள், ஆனால் அது அங்கு இல்லை. வேதாகமம் தனக்குத்தானே முரண்பட்டால், அது நல்லதல்ல, உங்களால் அதை விசுவாசிக்க முடியாது. ஒவ்வொரு வார்த்தையும் ஏவப்பட்டு எழுதப்பட்டுள்ளது, வேதாகமத்தில் எந்த முரண்பாடும் இல்லை.

38 இப்பொழுது புராட்டஸ்டென்ட் சபை, அதனுடைய ஸ்தாபனத்தில், (தேவனுடைய வார்த்தையின்படி) அதே காரியத்தைக் கத்தோலிக்க சபையோடு இணைக்கப்பட்டுள்ளது.

39 இப்பொழுது, கத்தோலிக்க ஜனங்களுக்கு விரோதமாக எனக்கு ஒன்றுமில்லை. இப்பொழுது இங்கே அமர்ந்துள்ள என்னுடைய அருமையான நண்பர்களில் சிலர் கத்தோலிக்க ஜனங்களின் வளர்ச்சியில் உள்ளனர். இங்கே, நேற்று முந்தின இரவு, நான் பரிசுத்த ஆவியினூடாக ஒரு கடுமையான செய்தியை அளித்தபோது, ப்ராடெஸ்டெண்டுகள் மற்றும் கத்தோலிக்கர்கள்மீது, கத்தோலிக்கர் இங்கே பீடத்தண்டை நடந்து வந்து என்னுடைய கரத்தைக் குலுக்கினார். அவர்களும் நம்மைப் போன்றே மானிடர்களாயிருக்கிறார்கள்.

40 நீங்கள் கத்தோலிக்க குருமார்களோடு விவாதிக்க முடியாது, ஏனென்றால் அவர்கள் இந்த வேதாகமம் முழுவதுமே வார்த்தை என்று விசுவாசிப்பதில்லை. அவர்கள், "அது சபை" என்கின்றனர். நாம், "அது வேதமாயிற்றே!" என்று கூறுகிறோம்.

41 கத்தோலிக்கர், "கத்தோலிக்கர்களாகிய நாங்கள் சபைக்குச் சென்று வழிபடுகிறோம். ப்ராடெஸ்டெண்டுகளாகிய நீங்கள் வீட்டிலேயே தங்கி வேதாகமத்தைப் படியுங்கள்" என்று கூறுகிறார்கள்.

42 நான், "ஆம், நீங்கள் சபைக்குச் சென்று வழிபடுகிறீர்கள், ஆனால் என்ன?" என்று கேட்டேன். அதுதான் அடுத்த காரியம், பாருங்கள்.

43 இப்பொழுது, ஆனால் தேவன் தம்முடைய வார்த்தையில் இருந்தார் என்று கூறினார். இது தேவனுடைய வார்த்தை, நான் இதை விசுவாசிக்கிறேன். நான் ஒரு வேதாகமத்தை ஆராதிப்பவன். அந்தக் காரணத்தினால்தான் நான் புராட்டஸ்டெண்டு கொள்கையுடனும், வெறும் சபை அமைப்பு முறையையும் ஏற்கவில்லை, ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வார்த்தையல்லாத காரியங்களைப் போதிக்கிறார்கள். எனவே நான் இணங்காமல் இருக்க முடியாது. நான் அவர்களோடு பிரிந்து போவதில்லை; இல்லை, ஐயா,

அவர்கள் என்னுடைய சகோதரர்கள். நான் அவர்களோடு பிரிந்து போவதில்லை, ஆனால் நான் அவர்களோடு இணங்கவில்லை, ஏனென்றால் நான் தேவன் கூறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும், மற்ற யாவும் ஒரு பொய்யாயிருக்கட்டும். பார்த்தீர்களா?

44 இப்பொழுது அதுதான் அந்த இணைப்பு...இப்பொழுது இந்த ஸ்திரீயை, வேதாகமத்தில், வெளிப்படுத்தின விசேஷம் 17-ம் அதிகாரத்தில், "ஒரு வேசி" என்று அழைக்கப்பட வேண்டிய கத்தோலிக்க சபை அவள், "**வேசிகளின் தாய்**" என்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. ஒரு *ஸ்திரீ* "ஒரு சபைக்கு" அடையாளமாக இருக்கிறாள் என்று வேதம் கூறியுள்ளதை நாம் காண்கிறோம். ஆகையால் அவளுக்கு வேசிகளாகிய குமாரத்திகள் இருந்தால், அது பையன்களாக இருக்க முடியாது; அது குமாரத்திகளாக இருக்க வேண்டியதாயிருந்தது, எனவே அது சபைகளாக இருக்க வேண்டியதாயிருந்தது. ப்ராடெஸ்டெண்டு கொள்கை கத்தோலிக்க மார்க்கத்திலிருந்து பிறந்தது.

45 இப்பொழுது அடுத்தது, மிருகம்...அல்லது, இது கூறுகிற அடுத்த காரியம்:

"மிருகத்தின் சொரூபம்" என்பதன் பொருள் என்ன?

46 இது—இது ஒரு கூட்டுக் கேள்வியாயுள்ளது, இதைக் கேட்ட நபர் ஒரு நல்ல கேள்வியை உடையவராயிருக்கிறார். இப்பொழுது என்ன செய்கிறதென்றால்...கத்தோலிக்க சபையானது மிருகம் என்று வேதம் தெளிவாகப் போதிக்கிறது. *மிருகம்* ஒரு "வல்லமையை" பொருட்படுத்துகிறது என்று வேதம் கூறியுள்ளது. அது சரியா? ஒரு *மிருகம்,* அந்த *மிருகம்* ஒரு "வல்லமையை" பொருட்படுத்துகிறது என்று வேதம் கூறுகிறது. அந்த *மிருகம்* "வாடிகன் நகரம்," "கத்தோலிக்க குருக்களாட்சி." சரி. இப்பொழுது, அது மிருகமாக இருந்த சபையின் வல்லமையாயிருந்தது.

47 அதன்பின்னர் புராட்டஸ்டென்ட் சபையானது கத்தோலிக்க சபையிலிருந்து வெளிவந்து, தங்களை ஸ்தாபனமாக்கிக் கொண்டது, ஒரு சிறிய அதிகாரத்தைப் பெற்றது. அதுதான் சொரூபம்.

48 ஏதாகிலும்...ஏதோ ஒரு காரியம் என்னுடைய சாயலில் உண்டாக்கப்பட்டிருந்தால், அது என்னைப் போன்று காணப்பட வேண்டும். இந்தச் சபையின் சாயலில் ஏதாவது ஒன்றை உண்டாக்கினால், அது சபையைப் போலவே காணப்பட வேண்டும்.

49 ஏதோ ஒன்று உண்டாக்கப்பட்டது, ஒரு மிருகம்...இந்த மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்கியது, அது லூத்தரின் கொள்கை, மெதோடிஸ்டுகொள்கை, பாப்டிஸ்டுகொள்கை, பெந்தேகோஸ்தேகொள்கை, பரிசுத்த மார்க்கக் கொள்கை, அந்த எல்லா *கொள்கைகளும்* ஒரு ஸ்தாபனமாக உருவாகி, மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உண்டாக்கினது. இதோ அது உள்ளது!

50 இப்பொழுது, "அப்படியானால், சகோதரன் பிரான்ஹாம், எல்லா கத்தோலிக்கர்களும், எல்லா மெத்தோடிஸ்டுகளும், எல்லா பாப்டிஸ்டுகளும் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று நீங்கள் கூறுகிறீர்களா...?" நான் அதைக் கூறவில்லை.

51 அந்தச் சபைகளில் ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான மீண்டும் பிறந்த கிறிஸ்தவர்கள் உள்ளனர். ஆனால், அவர்களுடைய ஸ்தாபனத்தில், அவர்கள் ஒரு கோட்பாட்டிற்கு அவர்களை விரட்ட முயற்சிக்கின்றனர், அதை அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். ஒரு—ஒரு சபை, அது ஸ்தாபனமாகும்போது, அது ஒரு கோட்பாட்டின் கீழ் வருகிறது.

52 எனக்கு வேதாகமத்தைத் தவிர வேறு கோட்பாடு கிடையாது. இது தேவனுடைய பிரமாணமாயுள்ளது, பரிசுத்த ஆவியானவரே அதற்கு அர்த்தம் உரைப்பவராயிருக்கிறார், அவரே அதை ஒரு ஒளியிலிருந்து மற்றொரு ஒளிக்கு கொண்டு வருகிறார். இன்றைக்கு நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கிற சுவிசேஷத்தை, நான் இன்னும் நூறு ஆண்டுகள் உயிரோடிருப்பேனேயானால், நாம் விரும்பினால், அதிக வெளிச்சம் இருக்கும். அது எப்பொழுதுமே தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கிறது.

53 உங்களுடைய பெரிய பாட்டனார், அவர் பாட்டியைக் காணச் சென்றபோது, நீங்கள் முன்பு மாட்டு வண்டியில் சென்றீர்கள். அப்பா ஒரு டி-மாடலில் அம்மாவைக் காணச் சென்றார். ஆனால் இப்பொழுது நாம் ஏறக்குறைய ஒரு ஜெட் விமானத்தில் செல்கிறோம். பாருங்கள், நாம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறோம்; விஞ்ஞானம், முன்னேறிச் செல்கிறது; கல்வி முன்னேறி வருகிறது; சுவிசேஷம் முன்னேறிச் செல்கிறது. அவர்கள் முன்னேறிச் செல்வார்கள் என்று வேதம் கூறியுள்ளது, "அவர்கள் இங்கும் இங்கும் ஓடுவார்கள், அறிவு பெருகிப்போம்" என்று கூறியுள்ளது. எனவே அதுதான் கூட்டு. அந்தக் காரணத்தினால்தான் அங்கே...

54 பிராடெஸ்டெண்டு ஸ்தாபன சபைகள் மிருகத்தின் சொரூபமாயிருக்கின்றன, ஏனென்றால் அது கத்தோலிக்க மார்க்கத்தைப் போன்றே ஸ்தாபனமாக்கப்பட்டுள்ளது. தேவன் எந்தக் காலத்திலும் தம்முடைய சபையை ஸ்தாபனமாக்க வேண்டுமென்று கட்டளையிடவில்லை, ஆனால் அதை எப்பொழுதுமே கசப்பான முறையில் கண்டனம் செய்து வந்திருக்கிறார்! இப்பொழுது உங்களுக்கு இது புரிகிறதா? [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] ஜனங்கள் அல்ல; சபையையே!

55 அவர்கள் ஜனங்களை ஒரு—ஒரு வெளிச்சத்தின் கீழ் கொண்டு வர முயற்சிக்கும்போது...இங்கே, ஜனங்கள் நீங்கள் திரும்பிச் சென்று, ஒரு மாட்டு வண்டியில் சுற்றி ஓடத் துவங்க முயன்றால் என்னவாகும்? நீங்கள் அதற்காகச் சகிக்கமாட்டீர்கள்; நாம்

ஒரு சிறந்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அங்கே அந்தவிதமாகத்தான் அது உள்ளது. யாராவது என்னிடம், "ஓ, நீங்கள் செய்ய வேண்டிய ஒரே காரியம் *இது, அது*" என்று கூற முயற்சித்தால். நான் வேறொரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்! நான்...அதுதான் ஊழியக்காரர்களுக்குள்ள தொல்லை. அவர்கள் எப்பொழுதுமே திரும்பிப் பார்க்கின்றனர்.

56 இங்கே, ஒரு பிரெஞ்சு விஞ்ஞானி, முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர், "ஒரு மனிதன் மணிக்கு முப்பது மைல் என்ற பயங்கரமான வேகத்தை எப்போதாவது எட்டினால், புவி ஈர்ப்பு விசை அவனைப் பூமியிலிருந்து எடுத்துப் போடும். மணிக்கு முப்பது மைல் வேகம்!" என்று கூறினார். சரி, இன்றைக்கு விஞ்ஞானம் அதையே குறிப்பிடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அது ஒருபோதும் நடக்காது! இல்லை, ஐயா. அவர்கள் அவனை மணிக்குத் தொள்ளாயிரம் அல்லது ஆயிரம் மைல் வேகத்தில் ஓட்ட வைத்தார்கள். ஆம், அல்லது சில நேரங்களில் ஒரு ஏவுகணையில், அப்பொழுது அது மணிக்கு ஆயிரத்து அறுநூறு மைல் வேகத்தில் இருக்கும். அப்பொழுதும் அவனை முன்னோக்கி கொண்டு செல்கின்றதே!

57 விஞ்ஞானம் மனிதனை முன்னோக்கி, அதிக முன்னோக்கி, மகத்தான காரியங்களை அவனுடைய சிந்தையில் கொண்டுள்ளதை...அவன் பெற்றுள்ள ஒரே காரியம் அறிவு விருட்சமாகும். வரம்பற்றதாயிருக்கிற அவருடைய ஆவியினால், ஊழியக்காரர்கள் அவனை அழைத்துச் சென்றதைவிட அதிக தூரத்திற்கு. ஆனால் இங்கே அதுதான் உள்ளது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு விஞ்ஞானம் கூறியதை விஞ்ஞானம் பின்னோக்கிப் பார்க்கவில்லை; விஞ்ஞானம் அவர்கள் பெற்றுள்ளதை எடுத்துக்கொண்டு, வேறு ஏதோ காரியத்திற்காக முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது.

58 ஆனால் நீங்கள் பிரசங்கியாரைக் கேளுங்கள்; "சரி, அதைக் குறித்து மூடி என்ன கூறினார் என்பதை நாம் பார்ப்போம், அதைக் குறித்து வெஸ்லி என்ன கூறினார் என்பதை நாம் பார்ப்போம்." அவர்கள் அதைக் குறித்து என்ன கூறினார்கள் என்று நான் கவலைப்படுகிறதில்லை. *இப்பொழுது* தேவன் அதைக் குறித்து என்ன கூறினார் என்பதை நான் அறிவேன். இதுவே அது, நான் இன்னும் பெரியதை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்! அதுதான். அதுதான் காரணம்...

59 வேதம், "அந்த மிருகத்தின் வாயிலிருந்து மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டன" என்று கூறியுள்ளது. என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? "அசுத்த ஆவிகள்", "தவளைகளைப் போல" என்று கூறியுள்ளது. ஒரு தவளை எவ்வாறு காணப்படுகிறது என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? ஒரு தவளை எப்பொழுதுமே பின்னோக்கிப் பார்க்கிறது, அது

ஒருபோதும் முன்னோக்கி நோக்கிப் பார்ப்பதில்லை; பின்னால் திரும்பிப் பார்க்கிறது, எப்பொழுதுமே பின்னோக்கிப் பார்க்கிறது.

60 ஆனால் எசேக்கியேலில் நான்கு வெவ்வேறு தலைகளையுடைய நான்கு ஜீவன்களும், முன்னோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தன, அவைகளால் பின்னோக்கிச் செல்ல முடியவில்லை. அவர்கள் எல்லா நேரத்திலும் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் சென்ற இடமெல்லாம், அவர்கள் நேராக முன்னோக்கி சென்று கொண்டிருந்தனர். வித்தியாசம் புரிகிறதா?

61 இப்பொழுது, அதுவே ப்ராடெஸ்டெண்டுகள் கத்தோலிக்க மதத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

62 எனவே நீங்கள் எப்பொழுதுமே கத்தோலிக்கர்கள்மீது ஏளனமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள், ஆனால் "பானை கொதிகலத்தை 'கருப்பு' என்று அழைக்க முடியாது" அது உண்மை.

63 நான், "நீங்கள் ஒரு கிறிஸ்தவரா?" என்று கேட்கிறேன்.

64 "நான் பாப்டிஸ்டு சபையைச் சேர்ந்தவன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும்படி நான் கூறுவேன்." ஆம். நீங்கள் இங்கே எங்கோ ஒரு பண்ணையைச்...சேர்ந்தவர் என்று கூறுவதைக் காட்டிலும், அதற்கும் இதற்கும் எந்த அதிகமான சம்பந்தமும் இல்லை.

65 "ஏன், நான் கத்தோலிக்க சபையைச் சார்ந்தவன்." அது இன்னமும் உங்களை ஒரு கிறிஸ்தவனாக்கிவிடாது. பாப்டிஸ்டு அல்லது மெத்தோடிஸ்டு சபையைச் சேர்ந்திருப்பது உங்களை ஒரு கிறிஸ்தவராக ஆக்குகிறதில்லை.

66 ஒரு கிறிஸ்தவனாயிருக்க ஒரே ஒரு வழிதான் உண்டு. *கிறிஸ்தவன்* என்ற வார்த்தை "கிறிஸ்துவைப் போன்றவர்" என்று பொருள்படுகிறது. உங்களால் அதைச் செய்ய முடியாது, நீங்கள் அதை உங்களுக்குள்ளே கிரியை செய்ய முடியாது, நீங்கள் அதைச் செய்ய வழியேக் கிடையாது. நீங்கள் உங்களை மறந்து, உங்களுக்கு மரிக்க வேண்டும், கிறிஸ்து உள்ளே வந்து உங்களுக்குள் கிறிஸ்துவின் ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும்.

67 "ஒருவன்..." இங்கே இயேசு என்ன கூறினார், "ஒருவன் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறவாவிட்டால், அவன் ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்." அவர் கத்தோலிக்கராகவோ, மெத்தோடிஸ்டாகவோ, பாப்டிஸ்டாகவோ அல்லது யாராயிருந்தாலும் சரி, உங்களுடைய பாவங்களின் மன்னிப்பிற்காக நீங்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுங்கள், இல்லையென்றால் நீங்கள் இழக்கப்படுவீர்கள். அது இயேசுவினுடைய சொந்த வார்த்தை. ஆகையால் இப்பொழுது நீங்கள் மெத்தோடிஸ்டுகளாக இருந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருந்தால், தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நீங்கள் பரலோகத்தில் பிரவேசிப்பீர்கள் என்று இயேசு கூறினார். நீங்கள்

கத்தோலிக்கராயிருந்து, அதே காரியத்தைச் செய்திருந்தால், நீங்கள் பரலோகத்தில் பிரவேசிப்பீர்கள்.

68 ஆனால் நீங்கள் கத்தோலிக்க சபையின், அல்லது மெத்தோடிஸ்டு அல்லது பாப்டிஸ்டு சபையின் கோட்பாட்டை அப்படியே பற்றிக் கொண்டிருந்தால், நீங்கள் இன்னமும் இழக்கப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள். அந்தக் காரணத்தினால்தான் நாம் இன்றைக்கு உலகத்திலுள்ள நிலைமையைப் பெற்றுள்ளோம், ஏனென்றால் ஜனங்கள் சரியாக...அவர்கள், "அது என்னுடைய விசுவாசத்திற்கு விரோதமானது" என்கின்றனர்.

69 "தெய்வீக சுகமளித்தலில் நீங்கள் விசுவாசம் கொண்டிருக்கிறீர்களா?"

70 "அது என்னுடைய விசுவாசத்திற்கு விரோதமாயுள்ளது." அது உங்களுடைய சபைக்கு எதிரானது; உங்களுடைய சபையின் கொள்கை அறிக்கையில்தான் அது வகுக்கப்பட்டுள்ளது, பாருங்கள், சபை சொல்வதைத்தான் நீங்கள் செய்ய வேண்டும். அதன்பின்னர் நீங்கள் கத்தோலிக்கத்தைக் குறித்து கூச்சலிடுகிறீர்கள்; அதே காரியத்தைத்தான் அவர்கள் செய்கிறார்கள். அதுதான் மிருகம், மிருகத்தின் சொரூபம்! வேதம், "அதைப் பற்றிக் கொண்ட எவரும் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது, ஆனால் நாய்களும், சூனியக்காரர்களும், போன்ற பலர் இருக்கும் இடத்திலிருந்து துரத்தப்பட்டு, அக்கினியினாலும், கந்தகத்தினாலும், பரிசுத்த தூதர்கள் மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் முன்னிலையில் வாதிக்கப்படுவார்கள்" என்று கூறுகிறது. அதிலிருந்து வெளியே வாருங்கள், நண்பனே! தேவனோடு சரிபடுத்திக் கொள்ளுங்கள்! ஆம், ஐயா.

71 இப்பொழுது நான் இதைக் கூறட்டும். சரி, நாம் அவற்றை நாம் வழியிலிருந்து அகற்றிவிடுவோம். இப்பொழுது, இன்றைக்கு ஒருவர் என்னிடத்தில் கேட்டார்; இரண்டு அல்லது மூன்று முறை என்னிடம் கேட்கப்பட்டது.

27. சகோதரன் பிரான்ஹாம், "மிருகத்தின் முத்திரை" குறித்துப் பேசுகையில், அவர்கள் உங்களுடைய தலையில் ஒரு எண்ணைப் பச்சை குத்திக்கொள்வார்கள் அல்லது உங்களுடைய கையில் ஏதோ ஒன்றை பச்சை குத்திக்கொள்வார்கள் என்று நீங்கள் நம்பவில்லையா? இல்லை, ஐயா! அதற்காக ஒருபோதும் நோக்கிப் பார்க்காதீர்கள்.

72 அது ஒரு புறக்கணிப்பாக இருக்கும்! நிச்சயமாக! "ஒருவனும் சபைகளின் கூட்டமைப்பைச் சேர்ந்தவனாயிருக்காவிட்டால் அவன் விற்கவோ அல்லது வாங்கவோ முடியாது." அது உண்மை. இப்பொழுது, அது ஒரு இணைப்பாக வந்து, காரியத்தை ஒன்றிணைத்து, அதை ஒன்றிணைந்த மார்க்கத்தில் கொண்டு வரும். என்னுடைய வார்த்தையைக் குறித்துக் கொள்ளுங்கள்,

அது தூரத்தில் இல்லை! நீங்கள் அதைப் புரிந்து கொள்வீர்கள், அவள் வெகுசமீபத்தில் இருக்கிறாள்.

73 இந்தக் காரியங்களை நீங்கள் அறியாததற்குக் காரணம், நீங்கள் எல்லா நேரத்திலும் இங்கே வீட்டிலேயே இருக்கிறீர்கள். கத்தோலிக்க மார்க்கம் மேலாதிக்கம் பெற்றுள்ள இந்த நாடுகளில் ஒருமுறை என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள் என்ன நடக்கிறது என்று பாருங்கள். சகோதரனே, அவர்கள் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று அவர்களிடம் கூறுகிறார்கள்.

74 இங்கே வேதம் அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பற்றிப் பேசுகிறது, நாம் அதைத் தீர்க்கதரிசனத்தில் எடுத்துக்கொண்டோம், ஒரு *ஆட்டுக்குட்டியைப்* போல எழும்பி வந்து, "மத சுதந்திரத்தை" அவர்கள் நேரடியாக அந்தக் காரியங்களை ஒன்று சேர்த்து இணைத்து, அது ஒரு வலுசர்ப்பத்தைப் போலப் பேசி, தனக்கு முன்பாக இருந்த வலுசர்ப்பம் அதே வல்லமையை நிகழ்த்தினது. அதுதான் அமெரிக்கா! அது உண்மை.

75 அண்மையில் ஒரு ஊழியக்காரர் என்னிடத்தில், என்னுடைய நண்பர் ஒருவர், "சகோதரன் பிரான்ஹாம், தேவன் அமெரிக்காவை ஒருபோதும் விழவிடமாட்டார், ஏனென்றால் அதனுடைய முற்பிதாக்களின் அடிப்படை மார்க்கத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது" என்று கூறப்பட்டுள்ளது.

76 நான், "அவர் யூதர்களை விட்டுவிட்டார்; நிச்சயமாகவே கொண்டு போகப்பட்டனர், அவர்கள் நம்மைக் காட்டிலும் மேலான நிலைப்பாட்டை உடையவர்களாயிருந்தனர்" என்றேன். அது உண்மை. தேவன் கடந்த சில தலைமுறையினருக்கு மரியாதை அளிக்கிறவர் அல்ல; ஒன்று நீங்கள் அந்த ஒழுங்கில் நடப்பீர்கள் அல்லது நீங்கள் இராஜ்ஜியத்திற்கு வெளியே இருப்பீர்கள், அவ்வளவுதான். உண்மையிலேயே! அது மிகவும் கடினமானதுதான், ஆனால் அது உங்களுக்கு நல்லது. அது உண்மை. அது வேதவாக்கியமாயுள்ளது. நாம் பெற்றுள்ளோம், நாம்...

77 அதைக் குறித்த தொல்லை என்னவென்றால், இன்றைக்கு... பண்டைய காலத்தவர்களாகிய உங்களில் சிலர் இதை அறிவீர்கள். நாம் அதிகப்படியான ஹாலிவுட் சுவிசேஷத்தைப் பெற்றுள்ளோம். அது உண்மை. அதைக் குறித்து அதிகப்படியான முழு மோசடியுடனும், தொடர்ந்து செய்து கொண்டும், நிறைய கவர்ச்சியுடனும், அதைப் போன்ற ஒவ்வொரு காரியத்துடனும், மற்றும் ஒலிப்பான்களை ஒலிப்பது, மற்றும் பல; மேலும், "யார் எழுந்து நின்று கிறிஸ்துவைத் தமது தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள்? சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக, நீங்கள் இப்பொழுதே பரலோகத்திற்குச் செல்கிறீர்கள்." அது ஒரு பொய்! அது ஒரு பொய்!

78 “ஒரு மனிதன் மறுபடியும் பிறந்தாலொழிய!” அவன் மறுபடியும் பிறந்திருந்தால், அவனுக்கு அங்கே வந்த அதே ஆசீர்வாதம் இங்கேயும் அவனுக்கு வரும். நாம் கடந்த வாரத்தில் வேதவாக்கியங்களினூடாகத் திரும்பத் திரும்ப ஆராய்ந்து வந்தோம். கிழக்கத்திய ஜனங்கள், பரிசுத்த ஆவியானவர் யூதர்கள்மேல் விழுந்தபோது, அவர்கள் கிழக்கத்திய ஜனங்களாயிருந்தனர், பரிசுத்த ஆவியானவர் மகத்தான அடையாளங்களோடும் வெளிப்படுத்துதலோடும் இறங்கி வந்தார் என்பதை அறிந்துகொள்கிறோம். ஏறக்குறைய ஒரு—ஒரு நேரம் உண்டாயிருக்கும் என்று வேதம் உரைத்துள்ளது, அது இருட்டா அல்லது பகலா என்று கூடக் கூற முடியாது. அது ஒரு விதமான மேகமூட்டமான நாளாய், சாயங்காலத்தின் கடைசிப் பகுதிவரைக்கும் அதிகமாகவே இருந்தது. அதன்பின்னர் கடைசியாக, மாலையில் ஒரு சில நிமிடங்களில் சூரியன் உதயமாகும். “சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும்.” அது சரியா? பாருங்கள், அந்த மேற்கத்திய ஜனங்கள், புறஜாதிகள், அங்கிருந்த யூதர்கள் பெற்றிருந்த அதே பரிசுத்த ஆவியை, அதே அடையாளங்களோடும், வெளிப்படுத்துதலோடும் பெற்றிருந்தனர். அதுதான்.

79 மேலும், நிச்சயமாக, ஜனங்கள் உங்களை “வெறிபிடித்தவர், பைத்தியக்காரர்” என்று அழைப்பார்கள். வேதத்தில், அவர்கள் அதைச் செய்வார்கள் என்று இயேசு கூறினார். நீங்கள் ஒரு விநோதமான ஜனங்கள், நீங்கள் வினோதமாக இருக்கிறீர்கள், ஏனென்றால் அது மிகவும் வித்தியாசமாக இருக்கிறது.

80 நான் அதை என்னுடைய சொந்த சுற்றுப்புறத்தில் உள்ள வீட்டில், அங்குள்ள ஜனங்களிடத்தில் கவனிக்கிறேன். அவர்கள், என்னுடைய சிறு பிள்ளைகளும் கூட; நாங்கள் அவர்களை சுத்தமாக வைத்துக்கொள்ள முயற்சித்து, ஒழுக்கமாக ஜீவிக்க முயற்சிக்கிறோம், ஆனால் அயலகத்தார் பிள்ளைகளில் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணுவதை உங்களால் கவனிக்க முடியும். பார்த்தீர்களா? அவர்கள் ஒரு வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறார்கள்.

81 நான் அறிவேன், காரியங்களை அறிந்துகொள்ள எனக்கு ஒரு வழி உண்டு (நீங்கள் அதை அறிவீர்கள், நீங்கள் அதைக் கூட்டத்தில் கண்டிருக்கிறீர்கள்), நகரத்தின் போதகர்கள், “சரி, இப்பொழுது, பில்லி ஒரு நல்ல பையன், எங்களுக்கு அவனுக்கு விரோதமாக ஒன்றுமில்லை. ஆனால், நீங்கள் பாருங்கள், அது நம்மைக் காட்டிலும் சற்று வித்தியாசமான வகுப்பினராகும்” என்கிறார்கள். தேவனுக்கு நன்றி! அது உண்மை. தேவனுக்கு நன்றி! அதுதான் முத்திரை. நாம் பேசிக்கொண்டிருக்கிற அந்த முத்திரை.

82 பாருங்கள், கடந்த இரவு, பரிசுத்த ஆவியானவர் முன்னுரைத்தபோது, யூதர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்று, அது என்னவாயிருக்கும் என்று அவர்களுக்குக் கூறினதற்கு

தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே. “மைக்கூட்டு, கணக்கனுடைய மைக்கூட்டு எழுத்தாளன் எருசலேமின் நடுவிலே போய் அவர்களுடைய நெற்றிகளில் ஒரு முத்திரையைப் பதித்தார்.” அது சரியா? சபையானது தேவனால் ஆக்கினைக்குட்படுத்தப்படுவதற்கு முன்னர் அதைக் குறித்து பேசப்பட்டது. கி.பி. 96-ல் தீத்து எருசலேமின் மதில்களை முற்றுகையிட்டு நகரத்தைச் சுட்டெரித்தான். தீர்க்கதரிசனத்தின்படி, ஒரு கல்லின் மேல் ஒரு கல்லும் விடப்படவில்லை. மேலும், இன்றைக்கு, தேவாலயத்தில் அவர்களுக்கு விடப்பட்டிருக்கிற ஒரே காரியம், அவர்கள் கற்களைக் குவித்து வைத்துள்ள ஒரு பண்டைய மதில் மாத்திரமே, மேலும் ஆலயத்தின் எஞ்சியிருக்கும் ஒரே அடையாளமான அந்தப் புலம்பல் சுவரில், யூதர்கள் அழுது புலம்பும் இடம் தேய்ந்து வழுவழுப்பாகியுள்ளது. ஓமரின் முஸ்லீம்களும் அதே இடத்தில் நிற்கிறது.

83 இயேசு, “தீர்க்கதரிசியாகிய தானியேலின் மூலமாய் உரைக்கப்பட்டபடி; பாழாக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்திலே நிற்பதை நீங்கள் காணும்போது,” அப்பொழுது அவர், “(வாசிக்கிறவன் புரிந்து கொள்ளட்டும்)” என்று அடைப்புக் குறிக்குள் அடிக்கோடிட்டுக் காட்டப்படுகிறார். புரிகிறதா? அது உண்மை. அங்குதான் அது இருந்தது. புறஜாதிகள் இருக்கும் வரை...காலம் துண்டிக்கப்படும் வரை...எத்தனை நாட்கள் ஆகும் என்று அவர் சொன்னார்; அவர்கள் மதில்களை மிதித்துப் போடுவார்கள், அப்பொழுது தேவன் யூதர்களிடம் திரும்புவார். நாம் அந்த நேரத்தில் தான் இருக்கிறோம்! இங்கே கடந்த சில வருடங்களாக ஆயிரக்கணக்கான யூதர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். நேற்றிரவு நாம் அதை எப்படி பார்த்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள், எப்படி வேதவாக்கியம் பரிபூரணமாக...ஒரு செய்தித்தாளில் வாசிப்பது போல, அப்பொழுது நீங்கள் அதிலிருந்து அதிக புரிதலைப் பெற்றுக் கொள்வதால், அது இன்னும் தெளிவாகிறது.

84 ஆனால், இருப்பினும், அவர்களின் தலையில் இடப்பட்ட அடையாளம் பச்சை குத்தப்பட்டது அல்ல. அது அப்படியா? அது என்னவாயிருந்தது? பரிசுத்த ஆவியின் அபிஷேகம். இந்தக் கடைசி நாளுக்காக இருக்கப்போகும் அடையாளம் என்ன? வேதம், “தேவனுடைய முத்திரை கடைசி நாளில் ஜனங்களுக்கான பரிசுத்த ஆவியின் அபிஷேகமாயிருந்தது” என்று கூறியுள்ளது. இப்பொழுது...எபேசியர் 4:30, “ஆகையால், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.” வேதம் பேசுகிறது. எபேசியர் 1:13 அதேக் காரியத்தைக் கூறுகிறது, இன்னும் அநேக இடங்களில், “பரிசுத்த ஆவி தேவனுடைய முத்திரை” என்று கூறப்பட்டுள்ளது.

85 ஒரு முத்திரை என்றால் என்ன? எந்த ஒரு காரியமும்

முழுமையடையும் வரைக்கும் ஒரு முத்திரை போடப்பட முடியாது. லூத்தரன்கள் முத்திரையிடப்படவில்லை, கிருபையின் யுகத்தின் நாள் முடிவடையவில்லை; அவர்கள் நீதிமானாகுதலைப் பிரசங்கித்தனர். மெத்தோடிஸ்டுகள் முத்திரையிடப்படவில்லை. நான் இங்கே ஒரு கேள்விக்கு வருகிறேன்; நாம் அதைச் சற்று—சிறிது நேரம் கழித்து பார்ப்போம். அது முடிக்கப்படாததால், முத்திரையிடப்படவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியின் அபிஷேகமோ தேவனுடைய கிரியைகளின் நிறைவு!

86 அவர், "பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" என்றார். நீங்கள் குமாரன் இல்லாமல் பிதாவைப் பெற்றுக்கொள்ள முடியாது, பரிசுத்த ஆவியின்றி குமாரனைப் பெற்றுக்கொள்ள முடியாது, அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள்.

87 அவர், "பூமியிலே சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஜலம், இரத்தம், ஆவி, அவைகள் ஒன்றாயிராமல், ஒருமைப்பட்டிருக்கிறது," அங்குதான் காரியம், "ஒரே முழு முத்திரையில்." லூத்தரின் கீழ் நீதிமானாக்கப்படுதல், தண்ணீர்; இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல்.

88 நீதிமானாக்கப்படுதல் ரோமர் 5:1, "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால்...நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்!

89 இரத்தத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்படுதல், எபிரெயர் 13:12 மற்றும் 13, "இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தும்படிக்கு நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்."

90 லூக்கா 24:49-ல், "இதோ, நான் என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை உங்களுக்கு அனுப்புகிறேன், உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" என்றார். அப்போஸ்தலர் 1:8-ல், "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். பரிசுத்த ஆவியின் அபிஷேகமானது, இயேசு மீண்டும் திரும்பி வரும் வரையில் நீடிக்க வேண்டியதாயிருந்தது! "இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உங்களுடனே கூட இருப்பேன், உலகத்தின் முடிவுபரியந்தம் உங்களுக்குள்ளும், நான் செய்கிற காரியங்களை நீங்களும் செய்வீர்கள்" என்றார். அவருடைய ஆவியானது சபையினூடாகக் கிரியை செய்து கொண்டிருக்கிறதே! அவர், "நீ பரிகசிக்கப்படுவாய்"

என்றார். மேலும், "வீட்டு எஜமானாகிய என்னை அவர்கள் '*பெயல்செபூல்*, "குறி சொல்லுகிறவர்களுக்குத் தலைவன் என்று அழைத்தனர்,"' "அவருடைய வீட்டாரை இப்பொழுது அழைப்பது எவ்வளவு நிச்சயம்?" என்று கேட்டார். "மனுஷன் உங்களைக் குறித்து எல்லாவிதமான காரியங்களையும் கூறும்போது, நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள், களிகூர்ந்து, மிகவும் சந்தோஷப்படுங்கள், ஏனென்றால் பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளை அவர்கள் இவ்விதமாகத் துன்பப்படுத்தினார்கள்" என்றார்.

91 அது வேதவாக்கியமாயுள்ளது, பாருங்கள். அங்குதான் அது உள்ளது. எனவே, நீங்கள் பாருங்கள், நண்பரே, நீங்கள் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது நீங்கள் உங்களுடைய விருப்பத்தைச் செய்ய வேண்டும்; நீங்கள் ஒரு சுயாதீனமான ஒழுக்க முகவர்.

92 ஆனால் அதுதான் பிராடெஸ்டெண்டு சபைக்கும் கத்தோலிக்க சபைக்கும் உள்ள தொடர்பு. வேதாகமத்தின்படி அவை இரண்டும் ஒன்று சேர்ந்துள்ளன...அவர்கள் சபையை மாத்திரமே பற்றிக் கொண்டிருக்கிறார்கள்; இப்பொழுது சபைக்கு, இயேசுவை அல்ல. சபையில் உள்ள ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை பற்றிக் கொண்டு, தேவன் வழியைத் திறக்கும்படி ஜெபித்து, அவர்களுக்கு...அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுங்கள், அந்த நபர் இரட்சிக்கப்படுகிறார், அவர் எந்தச் சபையைச் சேர்ந்திருந்தாலும் எனக்குக் கவலையில்லை. அது உண்மை. ஆனால் அவன் தன்னுடைய ஸ்தாபனத்தை அப்படியே பற்றிக் கொண்டிருந்தால், அவன் விசுவாசத்துரோக முத்திரையை எடுத்துக்கொண்டான், அது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது. முரணாக! கத்தோலிக்கரும், பிராடெஸ்டெண்டுகளும் ஒரே மாதிரியாக இருக்கிறார்கள், வேதம், "அவள் ஒரு வேசி; அவர்கள் வேசிகளாய், அவளுடைய குமாரத்திகளாயிருந்தனர்" என்று கூறியுள்ளது. இப்பொழுது அது தெளிவாக உள்ளதா? சரி.

28. ஆகையால் பரிசுத்த...கைகளை வைக்குதலின் மூலம் பரிசுத்த ஆவி இன்னமும் அருளப்படுகிறதா? சீஷர்கள் இதைச் செய்தனர், பேதுரு, பவுல் மற்றும் பலர், அது இன்னமும் கூடுமா? பவுல் அதை இந்தவிதமாகவே பெற்றுக்கொண்டான்.

93 ஆம், அருமையான சகோதரனே, சகோதரியே, அந்தக் குறிப்பை எழுதியவர் யாராயிருந்தாலும் சரி. பரிசுத்த ஆவியானது முற்றிலுமாகக் கைகளை வைக்குதலின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

94 இப்பொழுது, அநேக ஜனங்கள் என்னை...நான் ஒரு பெந்தேகோஸ்தேக்காரன் என்று கூறிக்கொண்டு, நான் ஒரு

பெந்தேகோஸ்தேக்காரன் என்று முத்திரையிடப்பட்டிருக்கிறேன். நான் ஒருபோதும் ஒரு பெந்தேகோஸ்தே ஸ்தாபனத்தைச் சேர்ந்தவனல்ல. நான் எல்லா ஸ்தாபனங்களிலிருந்தும் முற்றிலுமாக விடுதலையாயிருக்கிறேன், தேவனுடைய ஒத்தாசையினால் நான் அந்த வழியிலேயே இருக்க முனைகிறேன், ஏனென்றால் நான் அந்தப் பிளவில் நின்று, "நாங்கள் சகோதரர்கள்! இங்கே வாருங்கள், நாம் ஒன்றாக வழக்காடுவோம்" என்று கூறுகிறேன்.

95 நான் முதலில் அங்கே தேவனுடைய கிருபையினால் துவங்கினபோது...இங்குள்ள ஜனங்களாகிய நீங்களும், இங்கே அமர்ந்திருக்கும் என்னுடைய செயலாளர்களும் மற்றவர்களும் அறிவீர்கள், இன்றைக்கு உலகத்தில் உள்ள பத்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுடன் என்னால் தொடர்பு கொள்ள முடியும். என்னே ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்க முடியும்! பார்த்தீர்களா? அது உண்மை. ஆனால் எனக்கு ஒரு ஸ்தாபனம் வேண்டாம், அது வேதாகமத்திற்கு விரோதமானது. ஸ்தாபனத்தில் உள்ள ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று என்னால் முடிந்தளவு முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். அதுதான் காரியம். ஜனங்களிடத்தில் கர்த்தர் எனக்கு என்ன செல்வாக்கைக் கொடுத்திருக்கிறார், நான் அதை ஏதோ ஒரு ஸ்தாபனத்தின் மேல் வைப்பதற்கு பதிலாக நிச்சயமாகவே அவருடைய மகிமைக்காக அதை உபயோகிப்பேன். இயேசு கிறிஸ்துவிற்கு சொந்தமாயிருக்கிற அவர்மேல் நான்மேல் அதை வைப்பேன். எந்த ஸ்தாபனமும் உங்களை இரட்சிக்க முடியாது; அதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தமே தேவைப்படுகிறது.

ஆனால் இப்பொழுதோ, கரங்களை வைக்கும்போது, இப்பொழுது, நான் வேறுபடப் போகிறேன்...

96 இப்பொழுது, அருமையான பெந்தேகோஸ்தே ஜனங்களே, இப்பொழுது என்னோடு கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள். ஆனால் இப்பொழுது நீங்கள், "நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள சற்று தாமதிப்போம்" என்று கூறுகிற ஒரு இடத்திற்கு நீங்கள் வரும்போது, பெந்தேகோஸ்தேவில் என்னே ஒரு வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது!

97 நான் இதை...உங்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் கூறவில்லை. பெந்தேகோஸ்தே ஜனங்கள்தான் களத்தில் எனக்குள்ள மிகப் பெரிய ஆதரவு, ஏனென்றால் அவர்கள் தெய்வீக சுகமளித்தலின் செய்தியையும், தேவனுடைய வல்லமையையும் விசுவாசிக்கின்றனர். மீதமுள்ளவர்கள் அதைப் பார்த்து முகத்தைச் சுளிக்கின்றனர்.

98 ஆனால் சபையிலிருந்து வெளியே வரும் தனிப்பட்ட நபர்கள், நித்திய ஜீவனுக்கென்று முன்குறிக்கப்பட்டவர்கள், அவர்கள் வருவார்கள். அவ்வளவுதான். ஆனால், முன்குறிக்கப்படாதவர்கள் வர முடியாது; தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார், "அவர்கள்

ஆக்கினைத்தீர்ப்புக்கென்று முன்குறிக்கப்பட்டிருந்தனர்" என்றார். ஒருவரும் கெட்டுப்போக வேண்டும் என்று அவர் விரும்புகிறதில்லை, ஆனால், தேவனாயிருக்கிறபடியால், அவர்கள் அதைக் கண்டனம் செய்வார்கள் என்பதை அவர் கண்டார். எனவே அவ்வளவுதான்—அவ்வளவுதான், அவர் அதை முன் கூட்டியேக் கண்டார். தேவனுடைய முன்னறிவினால்தான் அந்தக் காரியங்களைக் காண்பதுதான். சபையானது இந்நாள் வரைக்கும் சரியாக இருக்கும் இடத்திலேயே இருக்கும் என்று அவர் முன்னுரைத்தார். தேவன் அதை ஆதியிலிருந்து அறிந்திருந்தார். உலகத் தோற்றத்திற்கு முன்னரே, சபையானது இன்றைக்கு உள்ளவிதமாகவே இருக்கும் என்று அவர் அறிந்திருந்தார். உலகத்தோற்றத்திற்கு முன்னரே நான் இன்றிரவு இந்தப் பிரசங்க பீடத்தில் நிற்பேன் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர் தேவனாயிருக்கிறார்; அவர் துவக்கத்திலிருந்து முடிவுவரை அறிந்திருக்கிறார்.

99 இப்பொழுது, இப்பொழுது, பெந்தேகோஸ்தே ஜனங்கள் போதித்துள்ளனர்...இப்பொழுது, அநேகமாக நான் இதன் பேரில் ஏராளமான எதிர்ப்பைச் சந்திக்க நேரிடலாம், ஆனால் நான் வார்த்தைக்கு வர வேண்டுமானால், நான் நேர்மையாயிருக்க வேண்டும். "காத்திருக்கும் கூட்டம்" என்ற அப்படிப்பட்ட ஒரு காரியமேக் கிடையாது. நீங்கள் தவறாயிருந்து வருகிறீர்கள். காத்திருங்கள் என்பது "ஜெபம்" என்று அர்த்தமல்ல. *காத்திருங்கள்* என்றால் "காத்திருங்கள்" என்று பொருள். பரமேறுதலுக்குப் பிறகு, இயேசு கிறிஸ்துவுக்குப் பிறகு...சிலுவையிலறைதல், பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரித்தல். பாவநிவிர்த்தியின் நாளுக்குப் பிறகு, உயிர்த்தெழுதல்...பாவநிவிர்த்தியின் நாள், அவர் கொல்லப்பட்டார், அதன்பின்னர் பரமேறுதலுக்கு நாற்பது நாட்கள் உள்ளன, அதன்பின்னர் பெந்தெகொஸ்தேயாகும். *பெந்தேகோஸ்தே* என்ற வார்த்தை "ஐம்பது" என்று பொருள்படுகிறது, பாவநிவாரண பலியின் ஐம்பது நாட்களுக்குப் பிறகு அது ஐம்பது நாட்களைக் குறிக்கிறது.

100 அதன்பின்னர் பாவநிவிர்த்தி பலி செலுத்தப்பட்ட பிறகு, ஒவ்வொரு காரியமும் பரிபூரணமாக, எழுத்தின்படி, புவியியல் ரீதியாக, தேவன் கூறினபடியே ஒவ்வொரு காரியமும் வரவேண்டியதாயிருந்தது. பெந்தெகொஸ்தேயினர், அது ஒரு யூபிலி நேரமாயிருந்தது, அப்பொழுது அவர்கள் அறுப்பின் முதற் கனிகளைக் கொண்டு வந்து ஒரு யூபிலியை உடையவர்களாயிருந்தனர்.

101 இப்பொழுது, சபையின்—முதல் கனிகள், பரிசுத்த ஆவி சபை, பெந்தெகொஸ்தே நாளன்று இயேசுவானவர் வந்து முதல் பலனைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் இந்தச் சபை இரண்டாயிரம் ஆண்டுகள் நீடித்தது. அது பெந்தேகோஸ்தே காலத்திற்கு பத்து

நாட்களுக்கு முன்னர்; அது சுத்திகரிக்கப்பட்ட பிறகு, பலி கொல்லப்பட்ட பிறகு, இயேசு கிறிஸ்துவின் பரமேறுதலுக்குப் பிறகு நாற்பது நாட்கள் இருந்தது. அவர், "நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரை எருசலேமுக்குச் சென்று காத்திருங்கள்" என்றார். அப்போஸ்தலர் 1...

102 அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில், "பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்கள் ஒருமனப்பட்டு, ஒரு இடத்தில் கூடினர். அப்பொழுது திடீரென்று பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பினது. அவர்கள் யாவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே, வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

103 அதன்பின்னர் மதசம்பந்தமான உலகம், வெளிப்புறத்தில், பெரிய வைதீக சபைகள், அங்கு வந்து அந்த ஜனங்கள் தள்ளாடுவதையும், குடித்து வெறித்த ஜனங்களைப் போல் நடந்து கொள்வதையும் கண்டனர். அவர்கள் வந்து அவர்களைப் பார்த்து நகைத்து, அவர்களைப் பரிகசித்து, "இந்தக் கலிலேயர் கூட்டத்தைப் பாருங்கள்! அவர்கள் எல்லோரும் குடித்து வெறித்திருக்கிறார்கள்!" என்றனர். தவறான புரிந்துகொள்ளுதலைக் காண்கிறீர்களா?

104 என்னுடைய கத்தோலிக்க சிநேகிதியும், ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியாளும் அவர்களோடு இருந்தாள். பரிசுத்த ஆவியைப் பெற்று, அந்த நிலையில் இல்லாமல் தேவன் அவளைப் பரலோகத்திற்கு வர அனுமதிக்க மாட்டார் என்றால், சகோதரியே, உன்னால் அதைவிடக் குறைவாக அங்குச் செல்ல முடியும் என்று நினைக்கிறாயா? இல்லை. எனவே நாம் நம்முடைய பெருமையிலிருந்து இறங்குவோம், நாம் இறங்குவோமாக.

105 உலகம் என்ன கூறுகிறது என்பதற்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டாம். தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்று பாருங்கள்! இது தேவனுடைய வார்த்தையாயுள்ளது. நாம் அதை *இந்தத்* திட்டத்தின்படியே கட்ட வேண்டும், ஏனென்றால் அவர் பேதுருவிடம், "இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார். மற்ற யாவும் சம்பவிக்கும். பாதாளத்தின் வாசல் அதற்கு எதிராக இருக்கும் என்று அது காண்பித்தது, ஆனால் அது மேற்கொள்ளாது. ஜனங்கள் அதை நிறுத்த முடியும் என்று நினைக்கிறார்களா? நீங்கள் சூரியனை வேகமாக நிறுத்த முடியும். அது உண்மை. உங்களால் அதை நிறுத்த முடியாது. அது தொடர்ந்து செல்லத் தேவன் நியமித்திருக்கிறார்.

106 இங்கே நான் முதலில் மனமாற்றமடைந்தபோது, அங்கே பின்னால் இருந்த என் *ஏழைத்* தாயார் கூட நான் பைத்தியம் பிடித்துவிட்டதாக எண்ணினாள். என்னுடைய மாமியார், "அவன்

பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பப்பட வேண்டும்" என்றாள். நகரத்தின் பிரசங்கிமார்களோ, "அவன் சீக்கிரத்தில் எரிந்துவிடுவான்" என்றனர். நான் நீண்ட காலமாக எரிந்து கொண்டிருக்கிறேன். அது ஆவிக்குரிய எரிதல், எல்லா நேரத்திலும் சிறந்தது. ஏன்? அது எரிந்து போக முடியாது, அது தேவனே! அது எரிந்து போவதற்கு பதிலாக இப்பொழுது உலகம் முழுவதும் பரவியுள்ளது.

107 நான் இங்கே ஓஹையோ நதியில் ஞானஸ்நானம் கொடுத்தபோது, அவர் அதே காரியத்தையே கூறினார், உங்களில் அநேகர் இருபத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஓஹையோ நதிக்கரையில் நின்று கொண்டிருந்தீர்கள். அந்த ஒளி, தூதனே, நாங்கள் இருக்கிற இடத்திற்கு நேராக இறங்கி வந்து, "இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டதுபோல, உன்னுடைய செய்தி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் கொண்டு வரும்" என்று கூறினார். அது அதைச் செய்துவிட்டது. அது...அவர் இன்னும் வரவில்லை, ஆனால் அது என்ன செய்யப்பட்டுள்ளது என்று பாருங்கள், அது உலகம் முழுவதும் பரவிவிட்டது. பார்த்தீர்களா? இன்றைக்கு, சற்று சிந்தித்துப் பாருங்கள், அந்த—அந்த முயற்சியானது, உண்மையாகவே இலட்சக்கணக்கானவர்களைக் கொண்டது.

108 கத்தோலிக்க *ஞாயிறு வருகையாளர்* பத்திரிக்கை கூட அதைக் குறித்து கூறியுள்ளது, எத்தனையோ இலட்சக்கணக்கானோர் சுற்றிலுமாய் வந்திருந்தனர், அந்த முயற்சியைக் குறித்துமே.

109 மற்றவர்கள் அதைக் கேட்டு, அவர்கள் "அது சத்தியம்! நான் இப்பொழுதே இந்த உலகத்தின் காரியங்களை விற்றுப்போட்டு, உண்மையான சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க ஆயத்தமாயிருக்கிறேன்" என்று கூறுகிறார்கள்.

110 அந்தக் காரணத்தினால்தான் அவர்கள் நம்மை "முழு சுவிசேஷம்" என்று அழைக்கிறார்கள். அவர்கள் முழு சுவிசேஷத்தைக் குறித்து பரிகசிக்கின்றனர். ஆனால், சகோதரனே, நான் எதிலும் ஒரு பாதியை விரும்பவில்லை, நான்...அது எனக்கு முழுமையாய் இருக்க வேண்டும். அதனுடைய பாகம் நல்லதாயிருந்தால், மற்ற பாகம் நல்லதாயிருக்கும். முழு சுவிசேஷம்!

111 இப்பொழுது, கவனியுங்கள், பரிசுத்த ஆவியானவர் அங்கே திரும்பி வந்தார். பெந்தேகோஸ்தே ஜனங்கள் காத்திருந்தனர், "அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கம் உண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீட்டை நிரப்பினது."

112 அதற்குப் பிறகு அவர்கள் ஒரு முறை கூடக் காத்திருக்க வேண்டியதாயிருந்ததில்லை. பேதுரு இந்த வார்த்தைகளைப் புறஜாதிகளிடத்தில் கூறினபோது, அவர்கள் ஞானஸ்நானம்

பண்ணப்படுவதற்கு முன்பே, பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் இறங்கினார். அது சரியா? “இப்பொழுது...” அப்போஸ்தலர் 10:49...

> *ஆனால் இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள்... மேலும் பரிசுத்தஆவியானவர் இறங்கினார்.*
>
> *அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள...கேட்கும்போது,*
>
> *பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப்பொழுது பேதுரு:*
>
> துவக்கத்தில் நமக்கு நடந்தது போலப் *பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் காண்கையில் எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா?*
>
> *அவன் தங்கி, ஞானஸ்நா-...அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கட்டளையிட்டான்!...*

113 அது உண்மை; காத்திருக்க வேண்டாம், தாமதிக்க வேண்டாம். அப்போஸ்தல முறைப்படி, தேவனுக்கு எந்த ஒழுங்கு முறையும் இல்லை; இருதயம் பசியாயிருக்கும்போது, நீங்கள் எதற்காக வாஞ்சித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதை அவர் உங்களுக்குத் தருவார். நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற விரும்பினால், அது இப்பொழுதே உங்கள்மேல் இறங்கக்கூடும்.

114 பேதுரு, அவன் பிரசங்கிக்கச் சென்றபோது, பேதுரு இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை உடையவனாயிருந்தான். இன்னும் சில நிமிடங்களில் அதற்குரிய கேள்வியை நான் பெற்றுக் கொள்ள வேண்டும். அவன் இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை உடையவனாயிருந்தான். அவன் அதைக் கொர்நேலியுவின் வீட்டாருக்குத் திறந்து கொடுத்தான். அவன் அதைச் சமாரியர்களுக்கு திறந்து கொடுத்தான், அவன் அதை இங்கே திறந்து கொடுத்தான்; ஆனால் பிலிப்பு அங்குச் சென்று, அவர்களுக்குப் பிரசங்கித்து, அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள், பேதுரு வந்து அவர்கள்மேல் கைகளை வைத்தான். இப்போது, அவன் அங்கே இருக்கும் அந்த மாயவித்தை காரனுக்காக ஏதோ செய்தான்... அவர்கள் மாயவித்தைக்காரனாகிய சீமோனைக் கொண்டிருந்தார்கள், “நான் என் கைகளை யார் மேல் வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறும்படியாக அந்த வரத்தை எனக்குத் தரும்படி, நான் உனக்குக் கொஞ்சம் பணம் தருகிறேன்” என்று கூறினான். அது சரியா? ஏதோ ஒன்று சம்பவித்தது! (இந்தப் பேராயர்களில் சிலர் தங்களுடைய கழுத்துப் பட்டையைப் பின்புறமாகத் திருப்பிக்

கொண்டு, சுற்றி வந்து அவர்கள்மேல் கைகளை வைத்து, "நான் உங்களுக்கு அப்போஸ்தல ஆசீர்வாதங்களை அளிக்கிறேன்" என்று கூறுவது போல் அல்ல.) பேதுரு அவர்கள்மேல் கைகளை வைத்தபோது ஏதோ ஒன்று சம்பவித்தது; அவர்கள் இன்னமும் அதைச் செய்யும்போது.

115 கைகளை வைக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் இறங்கும்போது, அவர்கள் இவ்விதமாக வண்டுகளைப் போல் விழுவதை நான் கண்டிருக்கிறேன். ஆம், அதுவே கைகளை வைக்கும் அப்போஸ்தல உபதேசமாகும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் அதிலிருந்து சற்று வித்தியாசப்பட்டிருந்தால், நாளை இரவு எனக்கு ஒரு குறிப்பை எழுதுங்கள். சரி.

29. உலக மக்களில் மூன்றில் இரண்டு பங்குப் பேர்...சுவிசேஷத்தை, சுவிசேஷ வார்த்தையை இன்னும் கேட்கவில்லை என்றால், எவ்வளவு...

உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறேன். இது மையினால் எழுதப்பட்டது, நான் இங்கே வியர்த்துக்கொண்டிருந்ததால், மை அதில் கசிந்து விட்டது. நாம் பார்ப்போம்.

உலக மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இன்னும் சுவிசேஷத்தைக் கேட்கவில்லை என்றால், அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் சுவிசேஷத்தைக் கேட்காத நிலையில், நம்முடைய கர்த்தர் இப்போது எப்படி வர முடியும்?

சரி, அது முற்றிலும் உண்மை. நான் என்ன நினைக்கிறேன் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன்.

116 இங்கே அண்மையில், சூடான் ஊழியத்தின் தலைவரான வேத பண்டிதர் ரீட்ஹெட், மகத்தான முழு...மகத்தான அப்போஸ்தல... இல்லை, நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறேன். உலகிலேயே மிகப்பெரிய அடிப்படை ஊழியம், சூடான் ஊழியம். தன்னிடம் எத்தனை பட்டங்கள் இருக்கின்றன என்பதே தெரியாத அளவுக்குப் பல பட்டங்களைக் கொண்டிருந்த வேத பண்டிதர் ரீட்ஹெட், சுமார் ஒரு வருடம் ஆறு மாதங்களுக்கு முன்பு, அங்கே மேலே உள்ள என் வீட்டிற்கு வந்தார். என்னுடைய வீட்டில் நின்றார், அவரும் இந்த ஹைமன் ஆப்பிள்மேன், இந்தப் பாப்டிஸ்டு போதகர் பரிசுத்த ஆவியைப் பெற்று மெக்சிகோவில் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறார். அவர் வீட்டிற்கு வந்தார். அவர், "சகோதரன் பிரான்ஹாம்," என்று கூறி, "நீர் பெந்தேகோஸ்தேயினருடன் தொடர்பு கொள்கிறீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "ஆம், ஐயா" என்றேன்.

மேலும் அவர், "நான் வேத பண்டிதர் ரீட்ஹெட்" என்றார்.

நான், “உங்களை அறிந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் உள்ளே வருவீர்களா?” என்று கேட்டேன்.

அதற்கு அவர், “சரி, ஐயா” என்றார்.

117 அவர் அமர்ந்து, “நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன்” என்றார். “நீங்கள் பாப்டிஸ்டு சபையில் நியமிக்கப்பட்டிருந்தீர்கள் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்” என்றார்.

118 அதற்கு நான், “அது உண்மை” என்றேன். நான், “நான் அதிலிருந்து வெளியே வந்துவிட்டேன்,” என்று கூறி, “என்னால் அதைச் சகிக்க முடியவில்லை. நான்—நான் வேதம் என்ன கூறுகிறதோ அதைப் பிரசங்கிக்க வேண்டும் என்று விசுவாசிக்கிறேன், பாப்டிஸ்டு சபை என்ன கூறுகிறதோ அது அல்ல. பாப்டிஸ்டு சபைக்கு விரோதமாக எனக்கு ஒன்றுமில்லை, அவர்கள் மற்ற சபைகளைப் போன்றே நல்லவர்கள்” என்றேன். மேலும் நான், “நான் விடுதலையாக வேண்டும் என்பதற்காகவே நான் அதிலிருந்து வெளியே வந்துள்ளேன்” என்றேன்.

அவர், “சரி, நிச்சயமாகவே, நாங்கள் பாப்டிஸ்டுகள் என்பதை நீர் அறிவீர்” என்றார்.

அதற்கு நான், “ஆம், ஐயா” என்றேன்.

119 அவர், “நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்தப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து என்ன?” என்று கேட்டார். மேலும், “அவர்கள் நாற்காலிகளை உதைத்து தள்ளிவிட்டு, சத்தமிட்டு, தொடர்ந்து பேசுவதை நான் உள்ளே சென்று பார்த்திருக்கிறேன்” என்றார்.

120 நான், “நானும் கூட அவை எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன்” என்றேன். ஆனால் நான், “சகோதரனே, அவை அனைத்திற்கும் பின்னால் உண்மையான பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் அசலான காரியம் உள்ளது” என்றேன்.

121 அவர், “சகோதரன் பிரான்ஹாம், நான் அதைப் பெற்றுக்கொள்ளலாமா?” என்று கேட்டார். அவர், “எனக்கு அநேக கௌரவங்கள் உண்டு!” என்றார். அவர், “நான் ஒரு வேத பண்டிதர், நான் *இது*, நான் என்னுடைய பி. எச். டி., பட்டத்தைப் பெற்றுள்ளேன், நான் என்னுடைய இளங்கலை பட்டத்தைப் பெற்றுள்ளேன், நான் எல்லா தேசங்களிலிருந்தும் ஒவ்வொரு விதமான ஒவ்வொரு பட்டங்களையும், கௌரவப் பட்டங்களையும் பெற்றுள்ளேன், அதைப் போன்ற காரியங்களையும்,” என்று கூறி, “இயேசு கிறிஸ்து எங்கே?” என்று கேட்டார்.

122 நான், “சரி, சகோதரனே, அவர் இங்கே அறையில் இருக்கிறார்” என்றேன்.

123 அவர், “அமெரிக்காவில் சமீபத்தில் கல்வி பயின்ற ஒரு தீவிரமான முகம்மதியனிடம் நான் நின்று பேசினேன் என்று கூறினார், அப்பொழுது நான், ‘உங்களுடைய பழைய மரித்துப்போன தீர்க்கதரிசியை கைவிட்டு, உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள்’ என்றேன். அவர், ‘அருமையான ஐயா, உங்களுடைய உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு என்னுடைய முகமது செய்ய முடிந்ததைக் காட்டிலும் அதிகமாக எனக்கு என்ன செய்ய முடியும்?’ என்று கேட்டார். அவர்கள் ‘இருவருமே வேதாகமங்களை எழுதினர், நாங்கள் அதை விசுவாசிக்கிறோம்’ என்றார். ‘இருவருமே மரித்துப் போயினர்.’ மேலும், ‘இரண்டு பேருமே எங்களுக்கு மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையை வாக்களித்துள்ளனர், நாங்கள் அதை விசுவாசிக்கிறோம்’” என்று கூறினார்.

124 அவர், “‘ஓ, ஆனால், நீங்கள் பாருங்கள்’, ‘கிறிஸ்தவர்களாகிய எங்களுக்குச் சந்தோஷம் உண்டு’” என்றார்.

125 “‘நாங்களும் அவ்வாறே செய்கிறோம்’ என்றார். ‘உங்களால் முடிந்தளவு உளவியலை என்னால் அளிக்க முடியும்’ என்றார்.” அது உண்மை. “அவர், ‘சரி, பாருங்கள், எங்களுடைய முகமது...உன்னுடைய கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததாக நீர் உரிமை கோரினாயே’” என்றார்.

126 வேத பண்டிதர் ரீட்ஹெட், “‘ஏன், அவர் செய்தாரே!’” என்றார்.

127 “‘அதை நிரூபியுங்கள்!’ என்றார்,” ‘அதை நிரூபியுங்கள்!’ என்றார். ‘இதை நிரூபிக்க உங்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் கிடைத்துள்ளன, ஆனால் உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் மட்டுமே இதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்’ என்றார். அவர், ‘எங்களுடைய முகம்மது மரித்தோரிலிருந்து எழும்பட்டும், இன்னும் இரண்டு நாட்களில் முழு உலகமும் அதைக் குறித்து அறிந்து கொள்ளும்’ என்று கூறினார்.” அவர் சொல்வது சரிதான். “அவர், ‘எங்கள் முகம்மது மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையைத் தவிர வேறெதையும் எங்களுக்கு வாக்களிக்கவில்லை’ என்று கூறினார். அவர், ‘உங்களுடைய கர்த்தராகிய இயேசு உங்களுக்கும், போதகர்களாகிய உங்களுக்கும், அவர் செய்த காரியங்களை நீங்களும் கூடச் செய்வீர்கள் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்’ என்றார். ‘போதகர்களாகிய நீங்கள் இப்பொழுது அதைத் தோற்றுவிப்பதை நாங்கள் காணட்டும்,’ என்றும், ‘அவர் மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார் என்று நாங்கள் விசுவாசிப்போம்’” என்றும் கூறினார்.

128 அவர், “சகோதரன் பிரான்ஹாம், நான் என்னுடைய பாதத்தை அந்த விதமாக மண்ணில் உரசிவிட்டுப் பேச்சை மாற்றிவிட்டேன்” என்றார். அந்த எல்லாப் பட்டங்களோடும்! ஏன்? அந்தப் பட்டங்களில் தேவன் எங்கே இருக்கிறார்? தேவன்

ஒரு பிஎச்.டி. பட்டம், டி.டி, எல்.டி பட்டங்கள் போன்றவற்றினால் அறியப்படுவதில்லை.

129 தேவன் எளிமையான விசுவாசத்தினால், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் அறியப்படுகிறார். அதுதான் ஒரே வழி. உங்களுக்குள் இருக்கும் தேவன், அவர் "ஒரு தேவனுடைய குமாரனை" கொண்டு வரும் வரையில், உங்களுடைய சுபாவத்தை மாற்றுகிறார். அதேக் காரியம், எல்லாவற்றையும் உண்டாக்கின சிருஷ்டிகராகிய தேவன், தம்முடைய வார்த்தையினால் உரைத்து உலகத்தை உண்டாக்கினார், அதே ஆவி உங்களுக்குள் உள்ளது, நீங்கள் தேவன் கூறுகிற ஒவ்வொரு காரியத்தையும் விசுவாசிக்கிறீர்கள். கூடாத காரியம் என்று ஒன்றுமில்லை; நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள்.

130 நீங்கள் ஒரு சிறிய கோட்பாட்டிற்காகப் பின்வாங்கி நின்று, "என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. தேவன் *இதைச்* செய்வார் என்று என்னால் நம்ப முடியவில்லை. என்னால் நம்ப முடியவில்லை" என்று சொல்லமாட்டீர்கள். நீங்கள் உங்களுடைய அவிசுவாசத்தினால் தேவனை மட்டுப்படுத்துகிறீர்களே! அதுதான்.

131 எனவே வேத பண்டிதர் ரீட்ஹெட் அங்கு நின்று கொண்டு, "சகோதரன் பிரான்ஹாம், ஒரு மனிதன் உண்மையாகவே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியுமா?" என்று கேட்டார்.

132 நான், "ஆம், ஐயா, வேத பண்டிதர் ரீட்..., உங்களால் முடியும்" என்றேன்.

133 அவர், "தேவன் என் இருதயத்தை அறிந்திருந்தால்; நான் உங்களை விசுவாசிக்கிறேன் என்பதை அறிந்து; இப்பொழுதே ஆவியின் ஏவுதலின் கீழ், நான் உங்களை...நான் கூறிக்கொண்டிருக்கிறேன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "நீங்கள் அவ்வாறு இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்!" என்றேன்.

அவர், "நான் அதை எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும்?" என்று கேட்டார்.

நான், "முழங்கால் படியுங்கள்" என்றேன்.

134 அவர் அங்கே பழைய காபி மேசையண்டை முழங்காற்படியிட்டார். நான் இங்கிருந்து தான் எடுத்தேன். இங்கே சற்று முன்னர் அதைச் சரிசெய்த அந்த மனிதன் அங்கே பின்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அங்கே அமர்ந்திருக்கையில், அவர் முழங்காற்படியிட்டபோது, அந்தக் கண்ணாடியை அதனுடைய உச்சியில் உடைத்துவிட்டார். அவர், "தேவனே, பாவமுள்ள என் ஆத்துமாவின் மேல் இரக்கமாயிரும்" என்றார். நான் அவர்மீது கைகளை வைத்தேன், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அங்கே அவர்மேல் வந்தது. அது உண்மை.

135 அவர் அந்தப் பாப்டிஸ்ட் சபையை இப்பொழுது எல்லா இடங்களிலும், அங்கே சுற்றிலுமுள்ள யாவருக்கும் அனல் மூட்டினார். இதோ அது உள்ளது. ஆம், ஐயா.

136 சுவிசேஷம் முடியாது...இயேசுவானவர் வர முடியாது...

137 கவனியுங்கள்! நாம் உலகம் முழுவதிலும் துண்டுப்பிரதிகளை அனுப்பியிருக்கிறோம். துண்டுப்பிரதிகள் அனுப்பப்பட்டாலொழிய, யாரோ ஒருவர் அங்கே வேத சாஸ்திரத்தோடு வந்து கொண்டிருந்தாலொழிய, நீங்கள் எந்தச் சிறு மூலைக்கும் செல்ல முடியாது. நீங்கள் இன்றைக்கு அயல்நாடுகளுக்குச் சென்று, உங்களை ஒரு "மிஷினரி" என்று அழைத்துக் கொண்டு, அவர்கள் உங்களைப் பார்த்து சிரிப்பதைக் கவனிக்கிறீர்கள். இந்தியாவுக்குள் சென்று, "நான் ஒரு மிஷனரி" என்று கூறுங்கள்.

138 "சரி, நீர் எங்களுக்கு என்ன போதிக்கப் போகிறீர்?" அவர்கள் வேதத்தைக் குறித்து அதிகம் அறிந்திருக்கிறார்கள்...அதைக் குறித்து இங்கே அமெரிக்காவில் உள்ள அவர்களுடைய ஆசிரியர்களில் சிலர் அறிந்திருப்பதைக் காட்டிலும், அங்குள்ள அவர்களுடைய பிள்ளைகள் சிலர் அதை அதிகமாக அறிந்திருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, அது ஒரு கிழக்கத்திய புத்தகம். மேலும், நினைவிருக்கட்டும், அமெரிக்கா தோன்றுவதற்கு நூற்றுக்கணக்கான, நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் சுவிசேஷத்தை உடையவர்களாயிருந்தனர். பரிசுத்த தோமா, அவன் பிரசங்கித்த மகத்தான சபை, இன்றைக்கும் இந்தியாவில் நிலைத்து நிற்கிறது. அவர்களுக்கு உங்களுடைய போதனை எதுவும் தேவையில்லை, அவர்கள் அதைக் குறித்த எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்கள். அவர்கள், "நீர் எங்களுக்கு என்ன போதிக்கப் போகிறீர்?" என்று கேட்டனர்.

"பாருங்கள், நாங்கள் அமெரிக்க மிஷனரிமார்கள்."

139 "நீங்கள் எங்களுக்கு என்ன கற்றுத் தரப் போகிறீர்கள், எப்படி மது குடிக்க வேண்டும் என்றா? அதைத்தான் நீங்கள் உங்கள் சபைகளில் செய்கிறீர்களே! சிகரெட்டுகளை புகைப்பதையா? எங்களுடைய மனைவிகளை எப்படி விவாகரத்து செய்வது போன்றவற்றை எங்களுக்குக் கற்பிக்கப்போகிறீர்களா?" மேலும், "நீர் அதைச் செய்யப் போகிறீர்களேயானால், எங்களுக்கு அது வேண்டாம்" என்றனர். மேலும், "நீங்கள் ஏதோ ஒரு புதிய வேத சாஸ்திரத்தோடு அல்லது மற்ற ஏதோ ஒன்றைக் கொண்டு இங்கு வருவீர்கள், நீங்கள் வார்த்தையின் சிலவற்றை எங்களுக்குக் கற்பிக்க முயற்சிக்கப் போகிறீர்கள், ஆனால் அதைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததை விட எங்களுக்கு அதிகமாகத் தெரியும்" என்பார்கள். அது உண்மை. அவர், "ஆனால் வார்த்தை கூறுகிறது இன்னதென்று நிரூபிக்க நீங்கள் வந்தால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்வோம்" என்றார். ஆமென்! அங்குதான் காரியம். அந்தக் காரியத்திற்காகத்தான் அவர்கள் வாஞ்சித்துக் கொண்டிருக்கிறார்கள்.

140 என்னுடைய வார்த்தையைக் குறித்துக் கொள்ளுங்கள், அதை உங்களுடைய வேதாகமத்தின் பக்கங்களில் எழுதிக் கொள்ளுங்கள், ஏனென்றால் அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாகும், "நினைவில் கொள்ளுங்கள், நாங்கள் இந்தியாவில் தரையிறங்கும்போது, பல்லாயிரக்கணக்கானோர் இரட்சிக்கப்படுவதைக் குறித்து நீங்கள் கேள்விப்படப் போகிறீர்கள்." பரிசுத்த ஆவியானவர் அதைக் கூறியிருக்கிறார். நான் அதை இங்கே என்னுடைய வேதாகமத்தில் எழுதி வைத்துள்ளேன். அது இங்கே பல்லாயிரக்கணக்கான வேதாகமங்களில் எழுதப்பட்டுள்ளது, அந்தச் சிறு பையனின் உயிர்த்தெழுதல், அவர் கூறிய ஒரு தரிசனம் போல. "அவர்களில் மூன்று இலட்சம் பேர் அங்கே இருக்கிறார்கள்." அது சரியல்லவா என்று நீங்கள் பாருங்கள்! எப்படி சுவிசேஷம் ஒரே இரவில் பிரசங்கிக்கப்படப் போகிறது. அவள் அப்படியே இடத்திலிருந்து இடத்திற்குப் பெருக்கிச் செல்வாள்.

141 ஆப்பிரிக்காவில், ஒரே ஒரு பீட அழைப்பின் மூலம் அந்த முப்பதாயிரம் பேர்கள் தேவனைப் பெற்றுக் கொண்டனர், நான், "உங்களுடைய கரங்களை உயர்த்தி பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்றேன். நான், "அமெரிக்க மிஷனரி யாராவது வந்து உங்களுக்குச் சபைகளிலுள்ள பாஷைகளைக் கற்றுக் கொடுக்கும் வரை காத்திருக்க வேண்டாம்" என்று கூறினேன். தாய்மார்கள் பலகைகளின்மேல் துணிகளைத் துவைத்து, ஒரு மிஷனரியை அங்கே அனுப்பி, அங்கே ஒரு மதபோதகரை அனுப்பி, ஒரு பெரிய ஆடம்பரக் காரில் வலம் வர வைத்து, அந்த நாட்டின் வளங்களை அனுபவித்து வாழ்வதும்; சரி, சில துண்டுப் பிரசுரங்களைக் கொடுத்துவிட்டுத் திரும்பி வருவதும்தான். அவர்கள் அதை விரும்பவில்லை; அது அதை நிரூபித்துள்ளது.

142 ஒரு சில இரவுகளுக்கு முன்னர் அங்குள்ள யூத மருத்துவமனையில் நான் இங்கே போதகர்களுடனும், மருத்துவர்களுடனும் நடந்த ஒரு கூட்டத்தில், தெய்வீக சுகமளித்தலின் பொருளின் பேரில் கூறினேன்; நான், "நீங்கள் என்னை ஒரு பரிசுத்த உருளை என்று அழைத்தீர்கள், நான் உங்களிடத்தில் கர்த்தருடைய தூதனைக் குறித்து சொன்னபோது... நான் ஒரு தீயக் கனவு கண்டேன் என்று நீங்கள் கூறினீர்கள்" என்றேன். மேலும் நான், "எங்களுடைய சொந்த சபை ஆயிரக்கணக்கில் டாலர்களை செலவு செய்து, மிஷனரிகளை ஆப்பிரிக்காவிற்கு அனுப்புகிறது; நான் அங்குச் சென்றபோது, அவர்கள் சிறு மண் விக்கிரகங்களைக் கொண்டு வந்து, மண்ணான விக்கிரகத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்ள முயற்சித்து, அவர்கள் தங்களை 'கிறிஸ்தவர்கள்' என்று அழைத்துக் கொள்கின்றனர்" என்று கூறினேன். மேலும் நான், "நம்முடைய இலட்சக்கணக்கான டாலர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான மிஷனரிமார்கள் கடந்த நூற்று ஐம்பது ஆண்டுகளில் செய்திருக்கிறதைக் காட்டிலும்

நீங்கள் 'மதவெறித்தனம்' என்று அழைக்கும் இந்த ஐந்து நிமிட நேரத்தில் கிறிஸ்துவுக்கு அதிகமான ஆத்துமாக்களை ஆதாயம் செய்துவிட்டீர்கள்" என்று கூறினேன். அவர்கள் வாயை மூடிக்கொண்டனர், அவ்வளவுதான்! அது அங்கே கிடந்தது. நான் உங்களிடம், அந்த மனிதர்களிடம் கூறினேன், நான், "நீங்கள் கல்வி கற்க முயற்சிக்காதீர்கள், இந்தச் சுவிசேஷத்தை எடுத்துக்கொண்டு அப்பாலுள்ள பூர்வீக தேசத்திற்கு செல்ல வேண்டும் அங்கே வியாதிகள் இருப்பதினால் வெள்ளையனால் கூடச் செல்ல முடியாது" என்று கூறினேன்.

143 மேலும் என்னிடம், டர்பன் செய்தித்தாளிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்ட பதிவுகள் உள்ளன, "அந்த ஒரு வயோதிக மனிதனால் கூட, வலது கை மற்றும் இடது கை எது என்று கூட அறிய முடியவில்லை, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று, ஒரு வாரத்திற்கு சராசரியாக ஆயிரம் பேர்கள் வீதம் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார்" என்று கூறப்பட்டிருந்தது. அந்தவிதமாகத்தான் சுவிசேஷம் போய்க் கொண்டிருக்கிறது, இன்னும் சிறிது நேரத்தில், அது உலகம் முழுவதிலும் பரப்ப ஏறக்குறைய ஆறு மாதங்கள் மாத்திரமே தேவைப்படுகிறது. சரி.

30. கிறிஸ்தவ—கிறிஸ்தவ விஞ்ஞானத்தைக் குறித்து நீங்கள் விளக்கிக் கூறுவீர்களா?

144 சரி. நான்...இங்கே...என் சகோதரனோ அல்லது சகோதரியோ யார் கேள்வி கேட்டாலும், நான் உங்களுடைய மார்க்கத்தைக் குறித்து பேசமாட்டேன். கிறிஸ்தவ விஞ்ஞானம் என்பது உளவியல். (தெய்வீக சுகமளித்தல் தேவனுடைய வல்லமையாயிருக்கிறது!) கிறிஸ்தவ விஞ்ஞானம் மனதின் வல்லமையைக் கொண்டுள்ளது; அது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை மறுக்கிறது. கிறிஸ்தவ விஞ்ஞானம்...ஓ, நான் திருமதி எடியின் புத்தகங்களை அங்கே வைத்துள்ளேன், அவைகள் எல்லாவற்றையும் படித்தேன். பார்த்தீர்களா? அது உண்மை, கிறிஸ்தவ விஞ்ஞானம் இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை மறுதலித்து, அவரை ஒரு "தீர்க்கதரிசி" என்று குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்து ஒரு மனிதனாயிருக்கவில்லை; அவர் தேவனாயிருந்தார்! அவர் தெய்வீகத்தன்மை கொண்டவராயிருந்தார்! அது பொருளின் மேல் உள்ள சிந்தனை என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

145 எனக்கு என்னுடைய கரத்திலோ அல்லது என்னுடைய வயிற்றிலோ ஒரு தசைப்பிடிப்பு இருந்தால், அல்லது...அல்லது என் தலையில் வலி இருந்தால், அது வலிக்கிறது என்பதை அறிந்துகொள்ள எனக்குப் போதிய அறிவு உண்டு, அது வலிக்கிறது என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேனா என்பதல்ல. ஆனால் தேவனுடைய வல்லமை அதை எடுத்துப்போட முடியும் என்பதை நான் அறிவேன், என்னுடைய...அதைக் குறித்து நான் சிந்திப்பதல்ல. பார்த்தீர்களா? எனவே, கிறிஸ்தவ விஞ்ஞானம், என்னிடத்தில்

கேட்கப்பட்டிருந்த மற்ற பாடத்தோடு நான் இதைக் கூறுவேன், அது நவீன நாளின் தத்துவங்களில் ஒன்றாகும், ஒரு ஆழமான, இருண்ட தவறு. அது உண்மை. இதை எழுதின நண்பரே, உங்களுடைய உணர்வுகளைப் புண்படுத்தவில்லை, ஆனால் நான் உத்தமமாக இருக்க வேண்டும். ஏனென்றால் இதை எழுதிய நீங்களும், நானும் ஒரு நாள் இயேசு கிறிஸ்துவின் சந்நிதியில் கணக்கொப்புவிக்க ஒன்றாக நிற்போம், நான் கூறுவதற்கு நான் பதில் கூற வேண்டும். இப்பொழுது, நான் அறிந்திருந்தாலொழிய நான் பதில் கூறமாட்டேன். சரி.

31. இப்பொழுது: **நாங்கள்...நாங்கள் இங்கிருந்து வெகு தொலைவில் வசிக்கும்போது...நாங்கள் கூடாரத்தில் கலந்துகொள்ள முடியாத அளவுக்கு வெகு தொலைவில் வசிக்கிறோம். சபைகள் தாய் சபையையோ, அல்லது கத்தோலிக்கத்தையோ சார்ந்திருப்பதால், நாங்கள் எங்கே ஒன்றுகூடிப் பங்கேற்க வேண்டும் எனப் பரிந்துரைக்கிறீர்கள்?**

146 என்னுடைய அருமையான சகோதரனோ அல்லது சகோதரியோ, இதை எழுதியவர் யாராயிருந்தாலும், எந்தச் சபையில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் உங்களுக்குக் கூறமாட்டேன். ஆனால் நான் என்ன செய்வேன், இதை, என் சகோதரன், சகோதரி, நான்...நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றிருக்கவில்லையென்றால், பாருங்கள், சரி, நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று, அதன்பின்னர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுள்ள மற்ற ஜனங்களுள்ள ஏதோ ஒரு சபைக்குச் செல்லுங்கள். நீங்கள்...அந்தவிதமான ஜனங்களோடு உங்களை ஒன்று சேர்த்துக் கொள்ளுங்கள்!

147 நான் இங்கே அண்மையில் ஒரு மனிதனைக் கண்டேன், அதாவது அவர் பிறந்த பத்து ஆண்டுகளுக்குப் பிறகு...இல்லை, பிறக்காமல், நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டிக்கொள்கிறேன், பத்து வருடங்களாக அவர் எந்தக் காட்சியையும் கண்டிருந்தார். அவர் ஒரு பெரிய சபையைச் சேர்ந்தவர், அவர் மிஸ்ஸொரியில் உள்ள கென்னட்டில் வசித்து வந்தார். அவர்...அவர் அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி, அவர் குருடாகிவிட்டார். அந்த மனிதன் மேடையின் மேல் வந்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவர் யார் என்றும், அவரோடு என்ன கோளாறு இருந்தது என்றும், அவன் எவ்வளவு காலமாகக் குருடாயிருந்தார் என்றும், அவர் செய்திருந்த சில அசுத்தமான செயல்களைக் குறித்தும் அவரிடத்தில் கூறினார். அவர், "தேவன் என்னை அங்கே வாழ வைத்தால், நான் அதைச் சரிப்படுத்துவேன்" என்றார். அவர் அதைக் கூறியபோது, அவருடைய கண்கள் திறக்கப்பட்டன; அதே வேதாகமத்தையே அவர் வாசித்தார், அவர் அதிலிருந்து ஒவ்வொரு அதிகாரமாக வாசித்தார்.

148 அவர் தன்னுடைய சபைக்குத் திரும்பி வந்து துதித்துக்

கொண்டிருந்தார். போதகர் அவரிடம், "அது எப்படியும் நடந்திருக்கும். ஏன், நீ சும்மா உணர்ச்சிவசப்பட்டாய், அதில் ஒன்றுமில்லை. அந்த விஷயங்களில் ஒன்றுமில்லை, அது சாத்தானுடையது!" என்று கூறினார்.

149 பிசாசு சுகப்படுத்தக்கூடிய ஒரு வேதவாக்கியத்தை எனக்குக் காண்பிக்கும்படி எவருக்கும் நான் சவாலிடுகிறேன். பிசாசு எங்கே சுகப்படுத்த முடியும் என்பதை நீங்கள் எனக்குக் காண்பித்தால், பிசாசுதான் உங்களுடைய தகப்பன் என்பதை நான் நிரூபிப்பேன்; அது உண்மை, நீங்கள் அதைச் செய்தால். அது தேவனுடைய வார்த்தைகளில் இல்லை. அதை நிரூபிக்க முடியாது. நீங்கள்...நீங்கள் அதை முயற்சிக்க விரும்பினால், நீங்கள் வரவேற்கப்படுகிறீர்கள். ஆனால் அது பேராயர்களாலும் மற்ற எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது, சகோதரனே, எனவே அதைக் கூறாதீர்கள்.

150 பாருங்கள்! அதே மனிதன் தன்னுடைய இருதயத்தில் அதை நம்ப முடிந்தது. மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர் என்னுடைய ஆராதனைகளில் இருந்தார், அவர் முதலில் குருடாயிருந்ததைப் போலவே. அங்குதான் காரியம்.

151 எனவே அந்தக் கொள்கைகளை விட்டு விலகியிருங்கள்! விசுவாசிக்கிற ஒருவரோடு உங்களை ஒன்று கூட்டி, உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். வேதம், "அவிசுவாசிகள் மத்தியில் உங்களைப் பிணைத்துக்கொள்ளாதீர்கள்" என்று கூறியுள்ளது. "நீங்கள் வேறு பிரித்துக் கொள்ளுங்கள்" என்று தேவன் கூறுகிறார். வெளியே வாருங்கள்! வேதம், "அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு வந்து...அவர்களுடைய அசுத்தமான காரியங்களைத் தொடாதிருங்கள், அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொள்வேன். சபையின் மத்தியில் நிற்கிற கர்த்தர் நானே" என்று கூறியுள்ளது. அது உண்மை. வெளியே வாருங்கள்! அப்படிப்பட்டவர்களோடு தொடர்பு கொள்ளாதீர்கள்!

152 ஆனால்...உங்களை ஏதோ ஒரு சபையின் மத்தியில், ஒரு நல்ல சபைக்கு மத்தியில் இணைத்துக் கொள்ளுங்கள். மெதோடிஸ்டு, பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியன், காம்ப்பெல்லைட், யாராயிருந்தாலும் சரி, அது...செய்யாது. அங்கே அசலான உண்மையான விசுவாசிகள், சபைக் கோட்பாடு என்ன கூறுகிறது என்பதைக் குறித்து கவலை கொள்வதில்லை, அவர்கள் தங்களுடைய சகோதர சகோதரிகளைச் சந்தித்து, ஒன்று சேர்ந்து தேவனை ஆராதிக்க அங்குச் செல்கிறார்கள். சரி.

32. நேற்று இரவு நீங்கள், வெளிப்படுத்தின விசேஷம் 7-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, "எந்தவொரு மனிதனாலும் எண்ண முடியாத திரளான கூட்டத்தினர்; ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும், தேசத்திலிருந்தும் வந்தவர்கள்" என்று

பேசினீர்கள். "அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி" என்று நீங்கள் கூறுவதை நான் சரியாகப் புரிந்துகொண்டேனா? ஆம், நீங்கள் என்னைப் புரிந்து கொண்டீர்கள். அவர்கள் மணவாட்டியாயிருக்கிறார்கள்.

153 இப்பொழுது நீங்கள் கவனிப்பீர்களேயானால், சரியாக வெளிப்படுத்தின விசேஷம் 7-ல் அவன் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரைக் கண்டான். இப்பொழுது, என் சகோதரனே, நான் இதைக் குறித்து உன்மேல் குற்றஞ்சாட்டவில்லை, ஆனால் அந்த நூறு...ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் மணவாட்டியாயிருப்பார்கள் என்று விசுவாசிக்கிற ஒருவன் வழக்கமாகவே ஒரு யெகோவா சாட்சியாக இருக்கிறான். அது ஒரு பிழையாயிற்றே! யோவான் அவர்கள் ஒவ்வொருவரையும் அறிந்திருந்தபடியால், அவர்களைப் பெயர் சொல்லி அழைத்தான். அவர்கள் ஒவ்வொருவரும் யூதர்களாயிருந்தனர். அவன், "காத் கோத்திரத்தார் பன்னீராயிரம், செபுலோன் கோத்திரத்தார் பன்னீராயிரம், பென்யமீன் கோத்திரத்தார் பன்னீராயிரம், யூதா கோத்திரத்தார் பன்னீராயிரம்" என்றான். அது சரியா? இஸ்ரவேலின் கோத்திரங்கள் பன்னிரண்டு, பன்னிரண்டை பன்னிரண்டால் பெருக்கினால்...இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் உள்ளனர். அது சரியா? அவன், "எல்லோரும், இஸ்ரவேல் புத்திரர்" என்றான். யோவான் அவர்களை அடையாளம் கண்டு கொண்டான்.

154 அதன்பின்னர் அவன் *இந்தப்* பக்கம் நோக்கிப் பார்த்தான், அவன், "ஏன், எந்த மனிதனும் எண்ணக்கூடாத திரளான ஜனக்கூட்டம் இங்கே நின்று, எல்லா கோத்திரங்களையும், பாஷைக்காரரையும், தேசங்களையும், வெள்ளை அங்கிகளோடும், தங்களுடைய கைகளில்...குருத்தோலைகளோடும், அசைத்து, சத்தமிட்டு, ஓசன்னாவைப் பாடி, ராஜாவுக்கு..." என்றான். அதற்கு அவன், "அவர்கள் யார்?" என்று கேட்டான்.

155 அவர், "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வெளிவந்து, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்திலே தங்களுடைய அங்கிகளைத் தோய்த்தவர்கள். அவர்கள் தேவனுக்கு முன்பாக இருக்கிறார்கள், அவர்கள் ஆட்டுக்குட்டியானவரை அவருடைய ஆலயத்தில் அவரோடு சேவிப்பார்கள். இரவும் பகலும், அவர்கள் அவரை விட்டு விலகுவதில்லை" என்று கூறினார். அங்கே மணவாட்டி, பாருங்கள், மனைவி, புறஜாதி மணவாட்டி.

156 நினைவிருக்கட்டும், மணவாட்டி ஒரு புறஜாதி. அவர், "அவர் புறஜாதிகளிலிருந்து ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்வார்" (என்னத்திற்காக?) "நாமத்தினிமித்தம்" என்றார்.

157 இப்பொழுது, உலகத்தில் அநேக வாலிபப் பெண்மணிகள் இருக்கிறார்கள். ஆனால் நான் ஒரு பெண்மணியை மணந்து கொண்டேன், அவள் மேடா ப்ராய், அவள் இப்பொழுது திருமதி

வில்லியம் பிரான்ஹாம். அவள்...அவள் இனிமேல் ஒரு பிராய் அல்ல; அவள் இப்பொழுது ஒரு பிரான்ஹாமாக இருக்கிறாள். பார்த்தீர்களா?

158 அந்தவிதமாகத்தான் அது உள்ளது, நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, ஒரு மணவாட்டியாக மாறுகிறீர்கள், மணவாட்டியின் அங்கத்தினர்.

33. வாடிகன் நகரத்தின் மேல் உள்ள லத்தீன் வார்த்தைகள் என்ன? அவைகள் அறுநூற்று அறுபத்தாறுடன் எப்படிக் கூட்டுகின்றன என்றும், அவைகள் என்ன பொருட்படுத்துகின்றன என்றும் நாங்கள் அறிய விரும்புகிறோம்.

159 பாருங்கள், அது முடிவடையவில்லை...லத்தீன்—லத்தீன் வார்த்தைகள் வாடிகன் நகரத்தில் இல்லை; அது போப்பின் சிங்காசனத்தின் மேல் உள்ளது, அங்கு அவர் தன்னுடைய சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். அங்கே, "**விக்காரிவ்ஸ் ஃபிலி டெய்**" என்று எழுதப்பட்டுள்ளது. நீங்கள் விரும்பினால், காலையில், நான் அதை எழுதி, எல்லாவற்றையும், ஒரு துண்டு காகிதத்தில் கொண்டு வருவேன். நீங்கள் அதை விரும்பினால், ஏன், நான் அதைக் காலையில் உங்களிடம் கொண்டு வருவேன். நீங்கள் அதை ரோம எழுத்துக்களில், **விக்காரிவ்ஸ் ஃபிலி டெய்** என்று எழுதக்கூடிய இடத்தில், அந்த வார்த்தையின் பொருள் "தேவகுமாரனுக்குப் பதிலாக" என்பதாகும்; அவர் தேவகுமாரனின் வாரிசு ஆவார்.

160 கத்தோலிக்க சபையானது, "பேதுருவே முதல் போப்; அவன் இயேசு கிறிஸ்துவின் வாரிசானவன்" என்று நம்புகிறது. அது ஒரு பிழை! சரி. அதன்பின்னர் அவர்கள், "அவரைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு போப்புமே; இப்பொழுது இருக்கிற போப்பாண்டவர் இயேசு கிறிஸ்துவின் வாரிசு" என்று உரிமை கோருகிறார்கள். அதில், "*இயேசு கிறிஸ்துவின் ஒரு வாரிசு*, '**விக்காரிவ்ஸ் ஃபிலி டெய்**,'" என்று அங்கே எழுதப்பட்டுள்ளது. ரோம எழுத்துக்களை எடுத்து, அதை அப்படியே எழுதுங்கள் (பத்திற்கு X, ஐந்துக்கு V, அது போன்று), நீங்கள் "**விக்காரிவ்ஸ் ஃபிலி டெய்**," என்று உச்சரித்து, ஒரு கோடு வரைந்தால், நீங்கள் அறுநூற்று அறுபத்தாறு என்ற எண்களைப் பெற்றுள்ளீர்கள். அதை எழுதிக் கண்டுபிடியுங்கள்.

161 இப்பொழுது, நான் கத்தோலிக்க சபையில் *எங்களுடைய விசுவாசத்தின் உண்மைகள்* என்று அழைக்கப்படுகிற புத்தகத்தை வைத்துள்ளேன், ஏனென்றால் என்னுடைய ஜனங்கள் அயர்லாந்து கத்தோலிக்கர்களாயிருந்தனர். எனவே நான் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நான் அறிவேன். பார்த்தீர்களா?

162 அது முற்றிலும் சத்தியமாயிருக்கிறது, அது உண்மை, அதாவது அங்கே...வேதம், "அவன் ஒரு சபையில் அல்லது ஒரு—ஒரு இடத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பான், அல்லது ரோமாபுரியில் ஏழு மலைகளின் மேல் அமைக்கப்பட்டுள்ள ஒரு சபைக்கு, அவனுடைய

வல்லமை உலகம் முழுவதற்கும் செல்லும். அவன் அந்திக்கிறிஸ்து என்று அழைக்கப்படுகிறான்" என்று கூறியுள்ளது.

163 அந்தச் சபையிலிருந்து சிறு சபைகள் தோன்றின, அவைகள் அதற்குப் பிறகு பிறந்தன, "அவள் ஒரு வேசியாயிருந்தாள், அவளைப் பின்பற்றின அவர்கள் வேசிகளாயிருந்தனர்" என்று கூறியுள்ளது. அது உண்மை. அங்குதான் காரியம். ஏனென்றால் அவர்கள் ஒரே காரியத்தில் ஸ்தாபனம் உண்டாக்கிக்கொண்டு, தங்களுடைய கோட்பாடுகளையும், உபதேசங்களையும் உடையவர்களாயிருந்தனர். அவளைப் போல வல்லமையுள்ளவளாய் இல்லை, ஆனால் அவர்களுக்கு இன்னமும் வல்லமை உண்டு. *மிருகம்* என்றால் "வல்லமை" என்று பொருள். அங்குதான் காரியம். எனவே அவர்கள் பெற்றுள்ளனர், கத்தோலிக்கர்கள் மிகப்பெரிய வல்லமையை பெற்றுள்ளனர். மெத்தோடிஸ்டுகள், அதன்பின்னர் பிரஸ்பிடேரியன்கள், அதன்பின்னர் லூத்தரன்கள், அதன்பின்னர் பாப்டிஸ்டுகள், அதன்பின்னர், இன்னும் கீழே உள்ளனர். அவர்கள் சிறிய, ஸ்தாபனமாக்கப்பட்ட வல்லமைகள், "என் சபையே! என் சபையே! என் சபையே! என் சபை!"

164 ஆனால் உண்மையான விசுவாசி அதைக் குறித்து ஒன்றுமே கூறுவதில்லை. அது "என் கிறிஸ்துவே! என் கிறிஸ்துவே! என் கிறிஸ்துவே!" அதுதான் வித்தியாசம். உங்களுக்கு எப்படித் தெரியும்? பரிசுத்த ஆவியானவர் அடையாளங்களோடும், அற்புதங்களோடும் சாட்சி கொடுக்கிறார்.

165 இங்கே ஒரு சிறு காரியம், ஒரு விதமான சிறிய பழைய நினைவு. நான் இதைப் படிக்க வெறுக்கிறேன், ஆனால் யாரோ ஒருவர் இதை இங்கே பதிவிட்டுள்ளார்:

34. ஏன் இந்தக் கூடாரம் தொடர்ந்து செல்லவில்லை என்பதற்கான காரணத்தை நீங்கள் கேட்டீர்கள். காரணம், உதவிக்காரர்கள் சிலர் அந்நிய பாஷையின் வரத்தையும், சுகமளித்தலையும் மறுக்கின்றனர். அது உண்மை என்பதை நாம் யாவரும் அறிவோம்.

166 அவர் யாரென்பதை எனக்குத் தெரியப்படுத்துங்கள், நான் இந்தப் பிரச்சாரத்தில் இருக்கும்போது—அது துரிதமாக நீக்கப்படும்.

35. ஒரு கிறிஸ்தவன், "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி" என்ற நாமத்திற்குப் பதிலாக, இயேசு கிறிஸ்துவின் (நாமம்) நாமத்தில் பாதங்களைக் கழுவுதலையும் ஞானஸ்நானத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமா என்பதைத் தயவுசெய்து விளக்கவும். தயவுசெய்து.

167 சரி. இங்குள்ள ஏறக்குறைய மூன்று பேர் அதேக் காரியத்தைக் கேட்டனர்.

168 பாதங்களைக் கழுவுதல், பாருங்கள், நான் அதன் பேரில் ஆரம்பிக்கலாம். சரி, இப்பொழுது நீங்கள் வித்தியாசப்படலாம், அது பரவாயில்லை. நான் ஒரு சிலவற்றை, சற்று நேரம் வாசிக்கட்டும். அல்லது நீங்கள் அதை வாசிக்க விரும்பினால், பரிசுத்த யோவான் 13-ம் அதிகாரத்தைச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நான் இங்கே உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இயேசு கிறிஸ்து தாமே என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள், அதன்பின்னர் நான் உங்களை ஏற்பாட்டில் எடுத்து, அது இன்னமும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்பதை உங்களுக்குக் காண்பிப்பேன். 2-ம் வசனத்திலிருந்து துவங்குவோம்.

சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்;

தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து; (அவர் ஆவியிலிருந்து வெளியே வந்து, மாம்சத்திற்குள்ளாகி, ஆவிக்குள்ளாகத் திரும்பினார். புரிகிறதா?)

போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,

பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.

அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்.

பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார். (ஓ, அதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா! சரி.)

அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூட கழுவவேண்டும் என்றான்.

இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்,... முழுவதும்...நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.

தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.

அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?

நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.

ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.

நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

169 இரண்டாம் தீமோத்தேயுவில், பவுல் சபைக்கு எழுதுகையில், "பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவும் வரைக்கும் விதவையானவள் சபைக்குள் கொண்டுவரப்பட வேண்டாம்" என்று கூறினான். அது உண்மை. வேதாகம நாட்கள் முழுவதிலும் பாதக் கழுவுதல் கடைபிடிக்கப்பட்டு வந்தது. தேவனுடைய ஒத்தாசையினால், நான் என்னுடைய சரியான சிந்தையை வைத்துக் கொள்வேனேயானால், தேவன் எனக்கு உதவி செய்வாரேயானால், நான் அதைச் சாகும் வரையிலும் கடைபிடிப்பேன். அது உண்மை. அது முற்றிலும் இயேசு கிறிஸ்துவின் கட்டளையாயிற்றே!

இப்பொழுது, இங்கே ஒரு உறுத்துகிற கேள்வி இருக்கப்போகிறது.

36. ஒரு நபர் ஏன் "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்" நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு பதிலாக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும்?

எனக்கு இரண்டு அல்லது மூன்று உள்ளன. இதோ ஒன்று இங்கே உள்ளது:

37. சகோதரன் பில், நேற்றிரவு நீங்கள் பேசிக்கொண்டிருந்த போலி ஞானஸ்நானம் தண்ணீரா அல்லது ஆவியா? அது தண்ணீர் என்றால், நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைச் சொன்னீர்கள்; அப்படியிருக்க, மத்தேயு 28:19-ல் ஏன் "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி" என்று சொல்லப்பட்டிருக்கிறது? தயவுசெய்து விளக்குங்கள்.

170 இப்பொழுது, இவைகள்கள் ஒருவிதமான உறுத்துகின்றவைகள், ஆனால் அதே காரியம், இங்கே எங்கோ எனக்கு மற்றொன்று உள்ளது என்று நான் நினைக்கிறேன். ஓ, அது ஏறக்குறைய மூன்று இடங்கள். நான் அதைப் எடுக்க முயற்சிப்பேன். நாம் பார்ப்போம். ஒரு சில நிமிடங்கள் நீங்கள்—நீங்கள் என்னோடு பொறுத்துக் கொள்வீர்களா? சரி. இப்பொழுது, நாம் இப்பொழுது துவங்கி, இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்போம். அவைகளில் சிலவற்றை நாம் ஒருகால் இப்பொழுது பார்த்துவிட்டு, ஒருவேளை அவைகளை (மீதமுள்ளவைகளையும்) நாளைப் பார்க்கலாம்; வேறு எதுவும் இல்லையென்றால், ஞாயிறு பள்ளியிலோ அல்லது கொஞ்ச நேரத்திலோ பார்க்கலாம். ஆனால் இந்த ஜனங்கள் ஒருவேளை...இதைக் கேட்டுக்கொண்டிருக்கலாம், நாளை ஞானஸ்நானம். இப்பொழுது, நீங்கள் எந்த விதமாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தாலும், அது எனக்கு ஒரு பொருட்டல்ல. ஆனால் நான் உங்களுக்கு வேதாகமத்தின் அப்போஸ்தல உபதேசத்தைக் கூற விரும்புகிறேன். பார்த்தீர்களா?

171 இப்பொழுது, கத்தோலிக்க சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, அது கள்ள இராப்போஜனத்தோடு வெளிவந்து, "நீங்கள் பரிசுத்த நற்கருணையைப் பெற்றுக் கொள்ளும்போது, அதாவது அங்கே பரிசுத்த ஐக்கியம் என்று பொருள்படும், நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறீர்கள்" என்று கூறுகிறது என்பதை நாம் கண்டறிந்தோம். அது பரிசுத்த ஆவியானவர் அல்ல; அது ஒரு அப்பம்.

172 புராட்டஸ்டென்ட் சபையானது கைகுலுக்கி, தங்களுடைய பெயர்களைப் புத்தகத்தில் பதிவு செய்கின்றனர், அதைத்தான் அவர்கள் "அதைப் பெற்றுக் கொள்ளுதல்" என்று அழைக்கின்றனர்.

173 இப்பொழுது, ஆனால் அதைப் பெற்றுக் கொள்வதற்கான உண்மையான வழி ஆவியின் அபிஷேகமாயிருந்தது.

174 மேலும், இப்பொழுது, கத்தோலிக்க சபையானது போதனையைப் பிறப்பித்தது. லூத்தர் அதைக் கொண்டிருந்தார், மெத்தோடிஸ்டு சபை அதைக் கொண்டுள்ளது, எபிஸ்கோபலியன்கள் அதைக் கடைபிடிக்கின்றனர், மற்ற சபைகளில் அநேகர் அதைக் கடைபிடிக்கின்றனர், அதுதான் விசுவாசப் போதனை. கத்தோலிக்க சபையின் பாரம்பரியங்கள் அநேகம் இன்னமும் பிராடெஸ்டெண்டு சபையில் தொங்கிக் கொண்டிருக்கின்றன; அது வேதாகமத்தின்படி, அதனோடு அவளைச் சரியாக உருவாக்குகிறது.

175 ஆனால், வேதாகமத்தின் எல்லாப் பக்கங்களிலும், “பிதா, குமாரன், பரிசுத்த ஆவி” என்ற பெயரில் ஒரு நபர் கூட ஒருபோதும் ஞானஸ்நானம் பெற்றதில்லை. ஆதி கத்தோலிக்க சபை காலம்வரைக்கும், “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்” நாமத்தினால் ஒரு நபரும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டதேயில்லை. அது வேதாகமத்தில் எங்குமே இல்லையே! அதில், “பிதா, குமாரன், பரிசுத்த ஆவி” என்ற பெயரில் ஒருவர் ஞானஸ்நானம் பெற்றதாக யாராவது ஒரு துணுக்கைக் கண்டுபிடித்து எனக்குச் சொல்லி, காட்ட முடிந்தால், தயவுசெய்து காட்டுங்கள், ஏனெனில், கடந்த இருபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக நான் அதை மீண்டும் மீண்டும், திரும்பத் திரும்ப, திரும்பத் திரும்ப ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். அது ஒரு பிழையாயிற்றே! அது ஒரு கத்தோலிக்க கோட்பாடு, ஒரு வேதாகம கட்டளை அல்ல.

176 இப்பொழுது ஏன் என்று நாம் கண்டறிவோம், அருமையான சகோதரனே, உங்களுடைய கேள்விக்கு நாம் போகிறோம். பரிசுத்த யோவான்...நான் மத்தேயு 28:19-ஐ குறிப்பிடுகிறேன். சரி, நாம் திரும்பிச் செல்வோம். நீங்கள் என்னோடு சேர்ந்து உங்களுடைய வேதாகமத்தை திருப்புங்கள், அப்பொழுது நீங்கள் என்னோடு வாசிக்க முடியும். இந்த இடத்தில்தான் அது பேசப்பட்டுள்ளது. வேதாகமத்தில் ஒரு இடத்தில்...

177 இயேசு, “இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் எந்த வார்த்தையும் நிலைவரப்படும்” என்று கூறவில்லையா?

178 வேதாகமத்தில், “யூதாஸ்காரியோத்து சென்று தூக்குப்போட்டுத் தற்கொலை செய்துகொண்டான்” என்றும், “நீங்களும் போய் அவ்வாறே செய்யுங்கள்” என்றும் கூறப்பட்டுள்ளதாக என்னால் எடுத்துக்கொள்ள முடியும்.

179 இயேசு, “மனுஷகுமாரன்” என்று தம்மைப் பற்றிச் சொன்ன இடத்திற்கு உங்களை அழைத்துச் செல்ல முடியும், “இப்பொழுது பரலோகத்திலிருக்கிறவர் மறுபடியும் வந்து” இங்கே பூமியின் மேல் நிற்கிறார். மேலும், “இப்பொழுது பரலோகத்தில் இருக்கிற மனுஷகுமாரன்” என்று கூறி, இங்கே பூமியின் மேல் நின்று கொண்டிருக்கிறார்.

180 நீங்கள் தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள்ள அவரை அறிந்து கொள்ள வேண்டும். உங்களால் முடியாது... “அது தனக்குத்தானே முரண்படுகிறது” என்று நீங்கள் கூறுவதில் வியப்பொன்றுமில்லை. அது குழப்பமாக இருக்கிறது; ஏனென்றால் தேவன் அதை இந்த வேத பண்டிதர்களிடமிருந்து மறைக்க அந்தவிதமாக அதை எழுதினார் என்று கூறினார். ஜனங்கள் பீடத்தண்டை தாழ்மையாக இருக்கட்டும், அப்பொழுது தேவன் அதை உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

181 இப்பொழுது இங்கே வேத வாக்கியம், மத்தேயு 28:19,

வேதாகமத்தில் ஒரு இடத்தில் மாத்திரமே இந்தப் பட்டப்பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,

182 இப்பொழுது, நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிற விதம், "பிதாவின் நாமத்தில், குமாரனின் நாமத்தில், பரிசுத்த ஆவியின் நாமத்தில்." அது வேதத்தில் கூட இல்லையே! ஆனால் அது இங்கே, "சகல ஜாதிகளையும் சீஷராக்கி, நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து" என்று உள்ளதே! இப்பொழுது உங்களுடைய வேதாகமத்தைப் பார்த்து, அது "*நாமங்களில்*" என்றா அல்லது "நாமத்தில்" என்று கூறப்பட்டுள்ளதா என்று பாருங்கள்.

183 இப்பொழுது நீங்கள்...இப்பொழுது அண்மையில் ஒரு கூட்டத்தில், ஒரு நபர், "வேதாகமத்தில் ஒரு முரண்பாடு உள்ளது!" என்று கூறினார். மேலும், "நீங்கள் அதை எனக்கு விளக்கிக் கூறினால் நலமாயிருக்கும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசு ஏன் ஜனங்களிடத்தில் கூறினார், பேதுரு திரும்பி, அப்போஸ்தலர் 2:38-ல் அவர்களுக்கு 'இயேசு கிறிஸ்துவின்' நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தானா?" என்று கேட்டார். "அது தனக்கு முரண்படவில்லையென்றால், நான் ஒரு முரண்பாட்டையும் காணவில்லை!" என்றார்.

நான், "நீங்கள் தேவனை சரியாகத் தேடாத காரணத்தால்" என்றேன்.

184 அவர், "சகோதரன் பிரான்ஹாம், நான் *இந்த* விதமாக அல்லது *அந்த* விதமாக ஞானஸ்நானம் கொடுத்தால் அது ஏதாவது வித்தியாசத்தை உண்டாக்குகிறதா?" என்றார். அது நிச்சயமாகவே செய்கிறது, நான் அதை வேதத்தின் மூலம் நிரூபிப்பேன்.

185 என்னவாகும்—என்னவாகும் மோசே...தேவன் மோசேயிடம், அந்த முட்செடியின் அருகில் வா என்றார், "மோசே, உன்னுடைய பாதரட்சைகளைக் கழற்று, நீ பரிசுத்த பூமியில் இருக்கிறாய்" என்றார்.

186 அவன், "இப்பொழுது கர்த்தாவே, நான் பயபக்தியுள்ள மனிதன். என்னுடைய பாதரட்சகளைக் கழற்ற சற்று கடினமாக இருப்பதால், நான் என்னுடைய தொப்பியைக் கழற்றிவிடுவேன்" என்று கூறியிருந்தால் என்னவாகும். அவர் ஒருபோதும் "தொப்பி" என்று கூறவேயில்லை. அவர் "பாதரட்சை!" என்றார். வேதம் கூறுவது சத்தியமாயிருக்கிறது. இப்பொழுது...

187 இங்கே, இது பத்து நாட்கள் ஆகும், இது பரமேறுதலாயிருந்தது. இயேசுவானவர் மேலே எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவர் தம்முடைய சீஷர்களுக்கு உலகமெங்கும் போய், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து

என்று கட்டளையிட்டார். பத்து நாட்கள் கழித்து...அவர்கள் எருசலேமுக்குச் சென்று, மேலறையில் பரிசுத்த ஆவியானவர் வரும்வரை காத்திருந்தனர். அதன்பின்னர் அவர்கள் பிரசங்கிக்க ஆரம்பித்தபோது...அவர்கள், "இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டனர்.

188 பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றான்.

189 அதன்பின்னர் அவன் கொர்நேலியுவின் வீட்டிற்குச் சென்று, "மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினான்.

190 அவன் அங்குச் சென்று, ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்த சிலர் இருப்பதைக் கண்டான், "நீங்கள் மறுபடியும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும்!" என்று கூறினான்.

191 சமாரியாவுக்குச் சென்று, "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" என்றான்.

192 ஒரு முறை கூட ஒரு நபரைக் குறித்த பட்டப்பெயர்கள் அழைக்கப்படவில்லை. ஒருபோதும் இல்லை! "இப்பொழுது, அப்படியானால் ஒரு முரண்பாடு உள்ளது" என்று நீங்கள் கூறலாம். இல்லை, அதுவல்ல. இப்பொழுது பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள், அவர் அதை உங்களுக்கு வெளிப்படுத்துவதைக் கவனியுங்கள். உங்களுடைய இருதயத்தைத் திறவுங்கள்.

193 இப்போது, பாரபட்சம் கொள்ளாதீர்கள். அப்படிச் செய்தால், தேவனால் உங்களுடன் பேச முடியாது. ஆனால் நீங்கள் பாரபட்சம் கொள்ளாமலிருந்தால், "சகோதரன் பிரான்ஹாம், நான் உண்மையாகவே சத்தியத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறுங்கள்.

194 இயேசு சீஷர்களிடத்தில், "போய் *இதைச்* செய்யுங்கள்" என்று கூறினபோது, அவர்கள் போய் *இங்கே* வித்தியாசமான ஏதோ ஒரு காரியத்தைச் செய்திருந்தால், ஆயினும், தேவன் வேதாகமம் முழுவதிலும் அதை ஆசீர்வதித்தால். இப்பொழுது, இயேசு அவர்களிடம் செய்யக் கூடாது என்று கூறினதை அவர்கள் செய்தார்களா? அவர்கள் அவ்வாறு செய்திருந்தால், அவர்கள் கீழ்ப்படியாமற்போனார்கள், தேவன் கீழ்படியாமைக்கு ஒருபோதும் கனம் கொடுக்கமாட்டார். அவர் விரும்பியிருந்தால், அவர் ஏவாளை கனப்படுத்தியிருப்பார், ஆதியிலேயே அந்த முழு காரியத்தையும் நிறுத்தியிருப்பார். தேவன் எந்தக் காரியத்தையாவது கூறும்போது, அவர் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்ள வேண்டும்; அவர் இராஜாதிபத்தியம் படைத்தவர். அப்படியானால் பேதுரு ஒரு தவறு செய்துவிட்டான்...

195 “ஓ”, “அப்படித்தான் அப்போஸ்தலர்களும் கூறினர்” என்றார். ஒரு நபர், “அப்படித்தான் அப்போஸ்தலர்களும் கூறினர். இயேசு கூறினதையே நான் செய்யப் போகிறேன்” என்றார்.

196 பாருங்கள், இயேசு செய்ய வேண்டாம் என்று சொன்னதை அப்போஸ்தலர்கள் செய்திருந்தால், பிறகு என்ன? இந்த வேதாகமத்தை எழுதின அப்போஸ்தலர்கள்...பவுல் இவைகளையெல்லாம் எழுதினான் மேலும் பவுல்தான் அவர்களை மீண்டும் ஞானஸ்நானம் பெறச் செய்தான். இந்தப் புதிய ஏற்பாட்டின் மிகப் பெரிய பாகத்தைப் பவுல் எழுதினால், அப்படியானால் நீங்கள் எந்தவிதமான ஒரு வேதாகமத்தை எழுதி வாசிக்க முயற்சித்துக்கொண்டிருக்கிறீர்கள்?

197 நாம் இதை அப்படியே செய்வோம். உண்மையான விவேகமுள்ளவர்களிடத்தில் கேட்டு, வார்த்தை என்ன கூறுகிறது என்று பாருங்கள். இப்பொழுது, இது கல்விக்காக, நீங்கள் தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்வதற்காகவே.

198 இப்பொழுது, இயேசு “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்” நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கும்படி கூறின பிறகு, பேதுரு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்திருந்தால், இயேசு கூறினதற்கு முரணாக அவன் செய்துவிட்டான் என்பதாகுமே. அது உண்மையா? இப்பொழுது, அங்கே ஏதோ ஒன்று இருக்க வேண்டும். இப்பொழுது நாம் அதைக் கண்டறிந்து, பரிசுத்த ஆவியானவர் நமக்குக் காண்பிக்கும்படி வேண்டிக் கொள்வோம். இப்பொழுது, முதலாவதாக, இப்பொழுது நாம் மத்தேயு 28:19-ஐ எடுத்துக் கொள்வோம்—எடுத்துக் கொள்வோம்.

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,*

199 உங்களுடைய வேதாகமத்தை நோக்கிப் பார்த்து, அது “பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் *நாமங்களில்*” என்று கூறப்பட்டுள்ளதா என்று பாருங்கள். அது கூறுகிறதா? இல்லை ஐயா. அது, “பிதாவின் *நாமத்தில்,* குமாரனின் *நாமத்தில்,* பரிசுத்த ஆவியின் *நாமத்தில்*” என்று கூறப்பட்டுள்ளதா? அதில், “அந்த நாமத்தில்!” என்று எழுதப்பட்டிருந்தது. அது சரியா? பாருங்கள், “நாமம்” ஒருமையில் இருந்தது. அது சரியா? பாருங்கள், அவர்கள் எந்த நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்பினார், பிதாவின் நாமத்தினாலா, அல்லது குமாரனின் நாமத்தினாலா அல்லது பரிசுத்த ஆவியின் நாமத்தினாலா? அவர், “நாமத்தில்!” என்றார். பாருங்கள், வெளிப்படையாகக் கூறினால், அவைகளில் ஒன்றில் ஒரு பெயரும் இல்லை.

200 இங்கு எத்தனை பிதாக்கள் உள்ளனர்? உங்களுடைய கரத்தை—உங்களுடைய கரத்தை நாங்கள் காணட்டும். சரி. உங்களில் யார்

"பிதா" என்று பெயரிடப்பட்டிருக்கிறீர்கள்? *பிதா* என்பது ஒரு நாமமல்ல; *பிதா* என்பது ஒரு "பட்டம்." இங்கு எத்தனை குமாரர்கள் உள்ளனர்? நிச்சயமாகவே, ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு ஆணும், அவர்கள் குமாரர்களாயிருக்கிறார்கள். பாருங்கள், உங்களில் யார் "குமாரன்" என்று பெயரிடப்பட்டிருக்கிறீர்கள்? அது ஒரு பெயரல்ல; அது ஒரு பட்டப்பெயர். அது சரியா? அது ஒரு பெயரல்ல; அது ஒரு பட்டப்பெயர். பாருங்கள், உங்களில் யார் "மனிதன்" என்று பெயரிடப்பட்டிருக்கிறீர்கள்? எத்தனை மனிதர்கள் இங்கே இருக்கிறார்கள்? நீங்கள் எல்லோருமே. பாருங்கள், உங்களில் யார் "மனிதன்" என்று பெயரிடப்பட்டிருக்கிறீர்கள்? அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது; அந்தவிதமாகத்தான் நீங்கள் இருக்கிறீர்கள். பரிசுத்த ஆவி என்பது ஒரு நாமமல்ல; அது என்னவாயுள்ளது. நான் ஒரு மனிதன். எனவே பிதா, குமாரன் அல்லது பரிசுத்த ஆவி என்பது "நாமம்" அல்ல; அவைகள் ஒரே நாமத்திற்குச் செல்லும் மூன்று *பட்டங்கள்*.

201 இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள். என்ன...இங்கே பாருங்கள்! நான் இதை ஒரு குழந்தை அடிப்படையில் எடுத்துக் கொள்வேன். நீங்கள் ஒரு—ஒரு கதைப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருப்பதைப் போல, அதில் "ஜானும் மேரியும் அதன்பின்னர் சந்தோஷமாக வாழ்ந்தனர்" என்று எழுதப்பட்டிருந்ததாகச் சொன்னால். அப்பொழுது நீங்கள், "ஜானும் மேரியும் யார்?" என்று யோசிக்கிறீர்கள். ஜானும் மேரியும் யாரென்பதை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஒரே வழி, கதையின் தொடக்கத்திற்குத் திரும்பிச் சென்று, வாசித்து, அதனூடாகச் செல்ல வேண்டும். அது சரியா??

202 பாருங்கள், இயேசு இங்கே, "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று கூறியிருந்தால், பிதா என்பது நாமமல்ல, குமாரன் என்பது நாமமல்ல, பரிசுத்த ஆவி என்பது நாமமல்ல, என்ன, யார் இந்த நபர்? அவர் யாரென்பதை நாம் அறிந்துகொள்ள விரும்புகிறோம். இப்பொழுது, செய்ய வேண்டிய மிகச் சிறந்த காரியம்...அது மத்தேயுவின் கடைசி அதிகாரம், கடைசி வசனம். நாம் மத்தேயு 1-ம் அதிகாரம், முதல் வசனங்களுக்குத் திரும்பி, துவங்குவோம், இந்தப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி யார் என்று கண்டறியலாம். இப்பொழுது, நான் இதை அங்குள்ள பிள்ளைகளுக்காகச் செய்ய விரும்புகிறேன், எனவே அவர்களும் அதைப் புரிந்து கொள்வார்கள்.

203 முதலாவது காரியம், இது உங்களுடைய "திரித்துவத்தின்" பேரில் உங்களைத் தெளிவுபடுத்திவிடும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. இப்பொழுது, முதலாவதாக, வேதாகமத்தில் ஒரு இடத்திலும் *திரித்துவம்* என்றுமே குறிப்பிடப்படவில்லை. நீங்கள் அதைக் கண்டுபிடித்து அதை எனக்குக் காண்பியுங்கள். அப்படிப்பட்ட ஒரு காரியமே கிடையாது. அது கத்தோலிக்கத் தவறாகும், பிராடெஸ்டெண்டுகளாகிய நீங்கள் அதற்குத் தலைவணங்குகிறீர்கள்.

கவனியுங்கள். இப்பொழுது, *இது* என்ன? *இது* யார்? என்று நான் கூறினேன். பிதா. *இது* யார்? குமாரன். *இது* யார்? [சபையோர், "பரிசுத்த ஆவி" என்கின்றனர்.—ஆசி.] இப்பொழுது, பிதா யாருடைய பிதாவாயிருக்கிறார்? குமாரன். அது சரியா? இப்பொழுது, *இவர்* இயேசுவின் பிதாவாயிருக்கிறார். இப்பொழுது அவைகளை குழப்ப வேண்டாம். *இது* இங்கே பிதா, *இது* குமாரன், *இது* பரிசுத்த ஆவி. அது சரியா? இப்பொழுது, ஜனங்கள், "மூன்று வெவ்வேறு நபர்கள், மூன்று வித்தியாசமான தேவர்கள், மூன்று வெவ்வேறு தனித்தனி நபர்கள்" என்று கூறுகிறார்கள். யூதர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதில் வியப்பொன்றுமில்லையே! சரி.

204 மத்தேயு 1-ம் அதிகாரம், இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றோடு துவங்குகிறது, "ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான், ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்" என்று என்று தொடங்கி, 18-வது வசனம் வரும் வரை அவ்வாறே தொடர்கிறது.

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின்...

205 இதோ அது 18-ம் வசனம்.

> *இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின்...*(உங்களுடைய வேதாகமத்தோடு என்னைப் பின்தொடருங்கள்)...இந்த மனிதனாகிய *இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவள்...* (பிதாவாகிய தேவனாலா?) *கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.*

நான் அதைச் சரியாக வாசித்தேனா? அது என்ன கூறுகிறது? [சபையோர், "பரிசுத்த ஆவி" என்கின்றனர்.—ஆசி.] யாருடைய ஒரு பிள்ளையோடு காணப்படுதல்? ["பரிசுத்த ஆவியானவர்."] *இந்த* மனிதன் அவருடைய பிதா என்று யாரோ ஒருவர் கூறினார் என்று நான் நினைத்தேனா? *இந்த* மனிதன் அவருடைய பிதா என்று வேதம் கூறியுள்ளது.

...அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்.

206 இப்பொழுது நீங்கள் எந்தவிதமான ஒரு குழந்தையைப் பெற்றிருக்கிறீர்கள்? தேவன் அவருடைய பிதாவாயிருக்கிறார் என்று இயேசு தெளிவாகக் கூறினார். அது சரியா? தேவன் அவருடைய பிதாவாயிருக்கிறார்! அப்படியானால் பரிசுத்த ஆவிக்கும் அதற்கும் என்ன சம்மந்தம்? பரிசுத்த ஆவியை அவருடைய பிதா என்று வேதம் கூறியிருந்தால், தேவன் அவருடைய பிதா என்று இயேசு கூறினார்; தேவன் அவருடைய பிதா என்று நீங்கள் கூறினீர்கள், இப்பொழுது இங்கே, வேதம் கூறுகிறது. மூன்று, இரண்டு வித்தியாசமான ஜனங்கள் இருந்தால், தேவனுக்கு அதனோடு எந்தச்

சம்மந்தமும் கிடையாது. பரிசுத்த ஆவியானவரே அவருடைய பிதாவாயிருக்கிறார்.

207 இப்பொழுது நாம் இன்னும் சற்று மேற்கொண்டு வாசிப்போம்.

> *அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான்.*
>
> *அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது.* (பிதாவாகிய தேவன் அல்ல; பரிசுத்த ஆவியாகிய தேவனே!)

208 உங்களுடைய திரித்துவக் கொள்கையானது எங்கே செல்லும் என்று புரிகிறதா? அது இயேசுவை ஒரு முறைதவறிப் பிறந்த பிள்ளையாக்கும். நிச்சயமாக. அது ஒரு பிழை! அதற்கான வேதவாக்கியமே கிடையாது. இப்பொழுது, பிதாவாகிய தேவனும் பரிசுத்த ஆவியாகிய தேவனும் ஒரே நபர், அல்லது இயேசுவுக்கு இரண்டு வெவ்வேறு தந்தைகள் இருந்தனர் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். அது சரியா? நிச்சயமாகவே, அது சரிதான். வேதம், "பரிசுத்த ஆவி அவருடைய பிதா" என்று கூறியுள்ளது. வேதம், "தேவன் அவருடைய பிதாவாயிருந்தார்" என்று கூறியுள்ளது. இப்பொழுது, எது அவருடைய பிதா? பரிசுத்த ஆவியானவரும் தேவனும் ஒரே ஆவியாயிருக்கிறார்; அது அதே காரியம் தான்.

> *தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது.*
>
> *...ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி...ஒரு குழந்தையைப் பெறுவாள்; அவர்கள்...*(இந்த ஒருவர்)
>
> *...அவருக்கு* ***இயேசு*** *என்று பேரிடுவார்கள்: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.*
>
> *நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது...*
>
> *அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள், இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.*

209 இப்பொழுது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி யார்? பேதுரு தவறு செய்தானா? இயேசு அவனிடம் கூறினதை அவன் செய்தான். அது மூன்று பட்டங்கள்.

210 நான் ஒரு ஊழியக்காரன், நான் ஒரு தகப்பன், நான் ஒரு "சங்கை" என்று அவர்கள் இதை ஒரு பட்டப்பெயராக அழைக்கிறார்கள், ஆனால் அவைகளில் ஒன்றும் என்னுடைய பெயர் அல்ல. என்னுடைய பெயர் வில்லியம் பிரான்ஹாம்.

211 அவர் *பிதாவாயிருந்தார்,* அவரே *குமாரனாயிருந்தார்,* அவரே பரிசுத்த ஆவியாய் *இருந்தார்.* நண்பனே, நீங்கள் மூன்று தேவர்களை உருவாக்க முயற்சிக்கிறீர்கள்; அது தவறு; அது தவறாகும்.

212 திரித்துவக்காரர் மூன்று யுகங்களோடு கலந்துள்ளனர். பிதாவாகிய தேவன் இஸ்ரவேல் புத்திரர் மேல் அக்கினி ஸ்தம்பத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஆவியாய் இருந்தார். அது சரியா? தேவன் அங்கிருந்தார். அப்பொழுது தேவன் மாம்சமாகி, தம்முடைய குமாரனுக்குள் நம் மத்தியில் வாசம் செய்தார். (அது சரியா?) இப்பொழுது பரிசுத்த ஆவியினால் அவர் மனிதனுடைய இருதயத்திற்குள்ளாக வரும் அளவிற்கு அவர் தம்மை தாழ்த்திக்கொண்டிருக்கிறார்.

213 தேவன் ஒரு மூன்றடி விதியைப் போன்றவர், இல்லை, ஒரு மூன்றடி விதியைப் போன்றவர், ஆம். முதல் பன்னிரண்டு அங்குலங்கள் பிதாவாகிய தேவனாயிருந்தது; இரண்டாவது பன்னிரண்டு அங்குலங்கள், தேவன், குமாரன், அதே தேவன்; மூன்றாவது பன்னிரண்டு அங்குலங்கள் தேவன், பரிசுத்த ஆவியானவர், அதே தேவன். இயேசு கூறினார்...

214 நீங்களோ, "சரி, நாங்கள் எங்களுக்குள் பரிசுத்த ஆவியைப் பெற்றுள்ளோம்" என்று கூறலாம். அது உண்மை.

215 ஆனால் இயேசு, "இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது. நீங்கள் என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான்..." என்று கூறினார். "நான்" என்பது ஒரு தனிப்பட்ட பிரதிபெயர். "உலகத்தின் முடிவுபரியந்தம் நான் உங்களோடும், உங்களுக்குள்ளும் இருப்பேன்." அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் எங்கே இருக்கிறார்? "நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன்; நான் மறுபடியும் வந்து உங்களுடன் கூட இருப்பேன்" என்றார். அதுதான் இது.

216 நீங்கள் பாருங்கள், நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொண்டீர்கள், நண்பனே. அது மூன்று யுகங்களிலும் ஒரே தேவன். பிதாத்துவம், குமாரத்துவம், பரிசுத்த ஆவியின் யுகம், அதே தேவன். அவர், "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" என்று கூறியபோது, அது இயேசு கிறிஸ்துவாயிருந்தது. அந்தக் காரணத்தினால்தான் அவன் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தான்.

217 இப்பொழுது பாருங்கள், நாம் இங்கே ஞானஸ்நானங்களைக் குறித்துப் பார்ப்போம். முதன்முறையாகப் புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் குறிப்பிடப்பட்டது, யோவான் ஸ்நானகனைப்

பற்றியது. அது சரியா? நான் *இதை* இங்கே வைப்பேன். நீங்கள் பாருங்கள், நீங்கள் ஞானஸ்நானத்தை சரிபடுத்தப்படுவதற்கு முன்னர் நீங்கள் உங்களுடைய தேவத்துவம் சரிப்படுத்தப்பட வேண்டும். *அதுதான்* யோவான் ஸ்நானன், முதல் ஞானஸ்நானம்.

218 இரண்டாம் முறை ஞானஸ்நானம் பேசப்பட்டது, அப்போஸ்தலர் 2:38, புதிய சபையில் அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர். இரண்டாவது இடம் கொர்நேலியுவினுடைய வீட்டார், அல்லது இல்லை...நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறேன், சமாரியர்களே, அப்போஸ்தலர் 7:48 மற்றும் 49. அப்போஸ்தலர் 10:49-ல் கொர்நேலியுவின் வீட்டில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அடுத்த முறை ஞானஸ்நானத்தைக் குறித்து பேசப்பட்டபோது, எந்தப் பெயர்களையும் அல்லது பட்டங்களையும் அழைப்பது அப்போஸ்தலர் 19:5-ல் இருந்தது.

219 இப்பொழுது, அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டபோது, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், அப்போஸ்தலர் 2:38-ல் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர். அது சரியா? அதை எழுதி வைத்துக் கொள்ளுங்கள், அதைக் குறித்துப் பாருங்கள்.

220 அடுத்ததாக, இரண்டு நாட்களுக்குப் பிறகு, பிலிப்பு சென்று சமாரியர்களுக்குப் பிரசங்கிக்கத் துவங்கினான்; அவர்களுக்குப் பிரசங்கித்து, வியாதியஸ்தரை சுகப்படுத்த, அங்கே ஒரு பெரிய கூட்டத்தை நடத்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். பேதுரு போய் அவர்கள்மேல் கைகளை வைத்தான்; அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர்.

221 ஒரு சில நாட்களுக்குப் பிறகு, பேதுரு பசியாயிருந்து, வீட்டின் மேல் ஏறிச் சென்று, ஒரு தரிசனத்தைக் கண்டான். தேவன் அவனைக் கொர்நேலியுவின் வீட்டிற்கு அனுப்பினார். மேலும், "பேதுரு இந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மேல் இறங்கினார்," அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசத் துவங்கி, அவர்கள் முதல் இடத்தில் செய்து விதமாகவே செய்தனர். பேதுரு, "அவர்கள் இன்னும் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை" என்றான். எனவே அவர்கள் ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று அவன் கட்டளையிட்டான்.

222 வேதத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர். பவுல்... அதாவது யோவானின் சீஷர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை, அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம் பெற்றார்கள். நாம்

முதலாம் கொரிந்தியருக்குத் திருப்புவோம்...நான் பொருட்படுத்திக் கூறுவது, நாம் அப்போஸ்தலர் 19-ம் அதிகாரத்திற்கு ஒரு நிமிடம் திருப்புவோம். நண்பர்களே, நீங்கள் காணும்படியாக இதை ஒரு நிமிடம் வாசித்துப் பாருங்கள், அதுவல்ல—இதுவல்ல...அவை இல்லை...வேதவாக்கியம் தாமே முரண்படுகிறதில்லை. இங்கே பாருங்கள்:

> *அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு:*
>
> *நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்தஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்: பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள்.*
>
> *அப்பொழுது அவன்:* அப்படியானால் நீங்கள் *எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான்.* ஓ, அவர்கள், நாங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் என்றனர். எப்படி? என்று கேட்டான். *யோவானிடத்தில், என்றார்கள்.*
>
> அப்பொழுது அவன்: யோவான்...வருகிறவராகிய *அவரில் விசுவாசிகளாயிருக்கவேண்டும் என்று... மனந்திரும்புதலுக்கு ஏற்ற* ஞானஸ்நானத்தை மாத்திரமே கொடுத்தானே என்றான். *அதாவது* கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் *பேரில்.*
>
> *அதைக் கேட்டபோது அவர்கள் இயேசு* கிறிஸ்துவின் *நாமத்தினாலே* மீண்டும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டனர்.
>
> *...பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.*

223 மகத்தான பரிசுத்த பவுல்...

224 கவனியுங்கள்! இயேசு கிறிஸ்துவுக்கு ஞானஸ்நானம் கொடுத்த அதே மனிதனான யோவான் ஸ்நானகனால் நீங்கள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால் என்னவாயிருக்கும்? ஒரு பரிசுத்த மனிதன், அங்கே இயேசு, "ஸ்திரீயினிடத்தில் பிறந்த யோவான் ஸ்நானனைப் போலப் பெரியவன் ஒருவனும் இருந்ததில்லை" என்று கூறினார். அவன் எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் முதன்மையானவன். அவர் இயேசுவை தண்ணீருக்குள் வழி நடத்திச் சென்று, அவருக்கு யோர்தானில் ஞானஸ்நானம் கொடுத்தான். சகோதரனே, நான் அவனால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருந்தால், நான் அதைக் குறித்து நன்றாக உணருவேன். அது சரியா?

225 ஆனால் பவுல் திரும்பி, “அது இப்பொழுது கிரியை செய்யாது!” என்று கூறுகிறான். “நீங்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டும்” என்றான்.

226 “ஓ, பவுல் இருந்தபோதிலும், நாங்கள் முழுக்கு ஞானஸ்நானம்பண்ணப்பட்டிருக்கிறோம்! நாங்கள் யோர்தான் நதியில் யோவானால் முழுக்கு ஞானஸ்நானம்பண்ணப்பட்டிருந்தோம்,” என்றனர்.

227 அவன், “அது இப்பொழுது கிரியை செய்யாது. நீங்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெற வேண்டும்” என்றான்.

“எப்படி?”

228 “யோவான் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானங் கொடுத்தான். இது பாவமன்னிப்புக்கானதாயிருக்கிறது, வானத்தின் கீழாக மனுஷர்களுக்குள்ளே வேறெந்த நாமமும் கொடுக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் நாமம் மாத்திரமே” என்றான். அவர்கள் மீண்டும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது.

229 வேதாகமத்திலோ அல்லது முதல் அறுநூறு ஆண்டுகளுக்கான முழு சரித்திரத்திலோ ஒரு இடத்திலும் இல்லை, கடைசி அப்போஸ்தலனின் மரணத்திற்குப் பிறகு, அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்ததைத் தவிர வேறு வழியில் எப்போதாவது ஞானஸ்நானம் கொடுத்தார்களா.

230 நீங்கள் விரும்பும் எந்தக் கத்தோலிக்க பாதிரியாரையும் போய்க் கேளுங்கள், அதை மாற்றினது யார் என்று கேட்டு, அவர்கள் உங்களுக்கு என்ன கூறுகிறார்கள் என்று பாருங்கள். கத்தோலிக்க போதனையை எடுத்துக்கொண்டு அதைப் படியுங்கள்; “நிச்சயமாகவே, ப்ராடெஸ்டெண்டுகளில் சிலர் இரட்சிக்கப்படுவார்கள், ஏனென்றால் அவர்கள் நம்முடைய ஞானஸ்நானத்திற்கு தலை வணங்குகிறார்கள்” என்று கூறுகின்றனர். அவர்கள் அதை மாற்றினர். அதைச் செய்ய அவர்களுக்கு வல்லமையும், அதிகாரமும் உண்டு என்று அவர்கள் கூறுகிறார்கள், நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள்! அதைத்தான் அவர்கள் கூறுகிறார்கள், அதைத்தான் அவர்கள் உரிமை கோருகின்றனர், அதற்குத்தான் புராட்டஸ்டென்ட் சபை தலைவணங்குகிறது. ஆனால் வேதப்பிரகாரமாக, அதைக் குறித்து வேதவாக்கியத்தின் ஒரு துளி கூட இல்லை.

அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருந்தது!

231 இப்பொழுது கவனியுங்கள், இப்பொழுது துரிதமாக, எனவே நாம் சரியாக...இந்தக் கேள்விகளின் பேரில் நான் உங்களை நீண்ட நேரம் நிறுத்தி வைக்க விரும்பவில்லை. பாருங்கள், இயேசு தம்முடைய சீஷர்களோடு மறுரூப மலையிலிருந்து இறங்கி வந்த

நாளில், அவர், “மனுஷன் என்னை யார் என்று சொல்லுகிறான், அவர்கள் என்ன கூறுகிறார்கள்?” என்று கேட்டார்.

232 “சிலர் உம்மை ‘யோவான் ஸ்நானன்’ என்றும், சிலர் உம்மை ‘எலியா’ என்றும், சிலர் உம்மை ‘தீர்க்கதரிசி’ என்றும் கூறுகிறார்கள்.”

அவர், “ஆனால் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?” என்று கேட்டார்.

233 பேதுரு, “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து!” என்றான்.

234 அவர், “யோனாவின் குமாரனாகிய சீமோனே—சீமோனே, நீ பாக்கியவான்;” என்றார், “மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. நீங்கள் இதை ஏதோ ஒரு சபையில் ஒருபோதும் கற்றுக் கொள்ளவில்லை, நீங்கள் இதை ஏதோ ஒரு வேதாகம கருத்தரங்கில் ஒருபோதும் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால் என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” என்றார்.

235 இப்பொழுது, கத்தோலிக்க சபையோ, “அது பேதுருவாக இருந்தது. அவர்கள் அங்கே ஒரு பாறையை வைத்திருந்தனர், அது இன்னமும் வாடிகன் நகரத்தின் கீழ் உள்ளது” என்று கூறுகிறது. அது எருசலேமில், இல்லை பாலஸ்தீனாவில் இருந்தது. அது பாறை என்று அவர்கள் கூறினர்.

236 ப்ராடெஸ்டென்ட் சபையோ, “அவர்கள் பேதுருவின் மேல் சபையைக் கட்டினார்கள்” என்று கூறுகிறது. அப்படித்தான் இருக்குமானால், ஒரு சில நாட்களுக்குப் பிறகு அது பின்வாங்கிப் போய்விடும். அது அதுவல்ல.

237 சபையானது தேவனுடைய தெய்வீக வெளிப்பாட்டின் மேல் கட்டப்பட்டது. “பேதுருவே, மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தியுள்ளார். இந்தக் கல்லின் மேல், தேவனுடைய வார்த்தையின் ஆவிக்குரிய வெளிப்பாடு, நான் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.”

238 அங்குதான் நான் கூறுகிறேன், லூத்தர், மெத்தோடிஸ்டு, நீங்கள் யாராயிருந்தாலும், பெந்தேகோஸ்தேயினர், நீங்கள் என்னவாயிருந்தாலும், அது ஒரு சிறு வித்தியாசத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை; தேவனுடைய சபையானது ஆவியின் ஏவுதலின் வல்லமையில் தொடர்ந்து முன்னேறிச் செல்லும்போது, அது தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருக்கும். எந்த ஸ்தாபனமும் அதைத் தடுத்து நிறுத்துவதில்லை, உலகத்தில் எந்தக் காரியமும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது. “இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள்

அதை மேற்கொள்வதில்லை." ஆவிக்குரிய, வெளிப்படுத்தப்பட்ட சத்தியம்!

239 இப்பொழுது அடுத்ததைக் கவனியுங்கள், அவர், "நீ சீமோன், நான் உனக்குத் தருவேன்" என்று கூறுகிறார், ஏனென்றால் அவன் ஆவிக்குரிய, வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை உடையவனாயிருந்தான். அந்தக் காரணத்தினால்தான் அவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்திருந்தான். அவன் ஒரு ஆவிக்குரிய வெளிப்பாட்டை உடையவனாயிருந்தான். இன்றிரவு அதைத்தான் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், பரிசுத்த ஆவியானவர் அதை நமக்குத் திறந்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

240 அவர், "நீ சீமோன், பரலோக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். நீங்கள் இந்தப் பூமியில் கட்டுகிறது எதுவோ, நான் அதைப் பரலோகத்தில் கட்டுவேன். நீ இந்தப் பூமியில் கட்டவிழ்ப்பது எதுவோ, நான் அதைப் பரலோகத்திலும் கட்டவிழ்ப்பேன்" என்றார். அவர் அதைக் கூறினாரா? பரிசுத்த மத்தேயு 16-ம் அதிகாரத்தில், "பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அதை நான் பரலோகத்திலும் கட்டுவேன். நீ பூமியில் கட்டவிழ்ப்பது எதுவோ, நான் பரலோகத்திலும் கட்டவிழ்ப்பேன். "பரலோக இராஜ்ஜியத்தின்" திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்" (என்ன?) பரலோக இராஜ்ஜியம் என்றால் என்ன? பரிசுத்த ஆவியானவரே! வேதம், "பரலோக இராஜ்யம் உங்களுக்குள்ளே..." என்று கூறியுள்ளது. நான், "தேவனுடைய இராஜ்ஜியத்தை" குறிப்பிடுகிறேன், என்னை மன்னிக்கவும். "ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது."

241 இப்பொழுது அவர், "இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்ஜியம் வல்லமையோடு வருவதை காணும் வரை மரணத்தைக் காணமாட்டார்கள்" என்றார். ஒரு சில நாட்கள் கழித்து, பெந்தேகோஸ்தே. பார்த்தீர்களா? "இங்கே சிலர் நிற்கிறார்கள்," அதே கேள்-...அவர் அதைக் கூறிக் கொண்டிருந்தார். "உங்களில் சிலர் இங்கே நிற்கிறீர்கள்," அவர் மறுரூபமானார், "தேவனுடைய இராஜ்யம் வல்லமையோடு வருவதை நீங்கள் காணும் வரை மரணத்தைக் காணமாட்டீர்கள்" என்று கூறினார்.

242 வேதம், "ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது" என்று கூறியுள்ளது. இயேசுவானவர் மரித்தோரிலிருந்து எழுந்தபோது, அவர் தம்முடைய பக்கவாட்டில் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள், சபைக்குக் கொடுக்கப்பட்ட இராஜ்ஜியத்திற்கான திறவுகோல்கள் அல்ல. இப்பொழுது, பேதுரு திறவுகோல்களை உடையவனாயிருந்தான். இயேசு தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்வார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? சகோதரனே, அவர் அவ்வாறு செய்யவில்லையென்றால், அவர் தேவனாய்

இருக்கவில்லையே! அவ்வளவுதான். இப்பொழுது, அவர், “பேதுருவே, நான் உனக்கு இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை கொடுப்பேன்,” வேறு வார்த்தைகளில் கூறினால், “பரிசுத்த ஆவியானவரிடம் கொடுப்பேன். பூமியிலே நீ கட்டுகிறது எதுவோ, நான் பரலோகத்திலும் கட்டுவேன்” என்றார்.

243 இப்பொழுது அவர்கள் என்ன ஒரு பிழை செய்துவிட்டனர் என்று பாருங்கள். புறப்பட்டுச் சென்று பாவங்களை மன்னிக்கிறார்கள், அது போன்ற காரியங்கள். என்னே ஒரு பிழை! நாம் பார்ப்போம். அவர்கள் திறவுகோல்களை அவனிடம் வைத்தனர். இப்பொழுது, அவர் தம்முடைய முகத்தை நேராக பெந்தே-...இல்லை நேராக எருசலேமுக்கு வைத்திருக்கிறார்.

244 அவர் சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, பூமியில் நாற்பது நாட்கள் மனுஷர் மத்தியில் இருந்தார், பரலோகத்திற்கு ஏறினார். தேவனுடைய இராஜ்யம் அவர்கள்மேல் வருவதை அவர்கள் காணும் வரை காத்திருக்கும்படி அவர்களிடம் கூறி, இந்த நேரத்தில் பிதாவானவர் அவர்களுக்கு ஒரு ஆவிக்குரிய ரூபத்தில் இராஜ்ஜியத்தை திரும்ப அளிப்பார். அவர்கள் எருசலேம் நகரத்திற்குச் சென்று, அங்கே பத்து பகலும் இரவும் காத்திருந்தனர், திடீரென்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகம், தேவனுடைய இராஜ்ஜியம், அவர்கள்மேல் வல்லமையோடு வந்தது. அது சரியா?

245 இப்பொழுது கவனியுங்கள்! பேதுரு, படிப்பறியாதவன், தன்னுடைய சொந்தப் பெயரைக் கூடக் கையொப்பமிட இயலவில்லை (ஒரு போப்பாண்டவரா? ஆம், ஒரு போப்பாண்டவர்), ஒரு சிறிய பெட்டியின் மேல் நின்று கொண்டு பிரசங்கிக்கத் துவங்கினான். அவன், “யூதர்களே, எருசலேமில் வாசம்பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே, தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது. ‘கடைசிநாட்களில்’ ‘நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள், என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். அல்லாமலும் உயர வானத்திலே அற்புதங்களையும், தாழ பூமியிலே இரத்தம், அக்கினி, புகைக்காடாகிய அதிசயங்களையும் காட்டுவேன்’” என்று தேவன் கூறுகிறார். அவன் சென்று தாவீதைக் குறித்துப் பேசினான். இந்த விமர்சகர்கள் அங்கு நின்றபோது...

246 அப்பொழுது, “மனிதனே, சகோதரரே, இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டனர்.

247 “ஓ, பேதுருவே, ஜாக்கிரதையாயிரு, இப்பொழுது உன்னிடம் திறவுகோல்களை தொங்கிக் கொண்டிருக்கின்றன.” அது சரியா? முதல் சுவிசேஷ செய்தி!

248 இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர், “பேதுரு, நான் அந்தத் திறவுகோலை உன்னிடம் தருகிறேன். நீ எதைக் கட்டுகிறாயோ, நான் அதைக் கட்டுவேன்; நீ கட்டவிழ்ப்பது எதுவோ நான் அதைக் கட்டவிழ்ப்பேன் என்றார். இப்பொழுது, நீ என்ன செய்தாலும், நான் அதைப் பரலோகத்தில் அடையாளங்கண்டு கொள்வேன்” என்றார். அவர் தம்முடைய வார்த்தையின் ஒரு மனிதனாயிருந்தால், அவர் தம்முடைய வார்த்தையைக் காத்துக்கொள்வார்!

249 இங்கே அவன் நின்று கொண்டிருக்கிறான், பரிசுத்த ஆவியானவர் முதன் முறையாக இறங்கினார், பேதுருவிடம், “இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்கப்பட்டது.

250 “கவனமாக இரு, நீ முதல் முறையாக இராஜ்ஜியத்திற்குள் திறவுகோலை நுழைத்துக் கொண்டிருக்கிறாய். ஒரு சில நாட்களுக்கு முன்பு, பத்து நாட்களுக்கு முன்பு, இயேசு உன்னிடம், ‘நீ போய் ஜனங்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடு.’ நீ என்ன செய்யப் போகிறாய்? ஆனால் நீ ஒரு ஆவிக்குரிய வெளிப்பாட்டைக் கொண்டிருப்பதால், அவர் உனக்குத் திறவுகோல்களைத் தந்தருளினார்! ‘என் சபை கட்டப்படும், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை’” என்றார்.

251 உங்களுடைய பிரமாணங்களையும், கோட்பாடுகளையும், நீங்கள் விரும்புகிற யாவற்றையும் ஏற்றுக்கொள்ளுங்கள், ஆனால் அது மிகவும் பரிதபிக்கப்படத் தக்க முறையில் தோல்வியடையும் (அது அவ்வாறே இருந்து வருகிறது), ஆனால் ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை தொடர்ந்து நித்தியத்திற்குள்ளாக அசைவாடும். ஒரு கதிரியக்கக் கீற்று போல, அவள் முடிவின்றி நகர்ந்து செல்கிறாள், கவனியுங்கள்.

252 “பேதுரு, நீ திறவுகோல்களை வைத்திருக்கிறாய். நீ இங்கே என்ன செய்தாலும், தேவன் அதைப் பரலோகத்தில் அடையாளங்கண்டு கொள்ள வேண்டும்.” அது சரியா? “பேதுருவே, நீ என்ன சொல்லுகிறாய்? நாங்கள் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?”

253 பேதுரு கூறினான்...“*மரியே வாழ்க*” என்று கூறப் போகாதீர்கள், ஒரு *நோன்பு* செய்தல் என்ற, அப்படிப்பட்ட ஒரு காரியமே இல்லை. சபைப் புத்தகத்தில் உங்களுடையப் பெயரைப் பதிவு செய்து, உங்கள்மேல் கொஞ்சம் தண்ணீரைத் தெளிக்கும்படி, நீங்கள் வந்து கரங்களைக் குலுக்கிக் கொள்ளாதீர்கள்; அப்படிப்பட்ட ஒரு காரியம்

இல்லை. அந்தக் கத்தோலிக்க கோட்பாட்டிற்கு புராட்டஸ்டென்ட் சபை பணிந்து கொண்டிருக்கிறது.

254 அவன், "நீங்கள் எல்லோரும் போங்கள்...சில நாட்களுக்கு முன்பு இயேசு என்னிடம், நீங்கள் எல்லோரும் போய், 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவி' என்ற நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொன்னார்" என்று சொல்லவில்லை. ஆவிக்குரிய வெளிப்பாட்டைப் பெற்றுள்ள ஒரு மனிதன், அதைக் கூறமாட்டான்.

255 அவன், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் உங்களுடைய பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது" என்றான். அதுதான். அப்பொழுது அந்தத் திறவுகோல் உள்ளே நுழைக்கப்பட்டது, அது பூட்டப்பட்டது, அது பரலோகத்தில் பூட்டப்பட்டது!

256 அந்தக் காரணத்தினால்தான் பவுல் யோவானுடைய சீஷர்களிடத்தில், "பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள, நீங்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மறுபடியும் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும்" என்று கூறினான்.

257 நீங்கள் அதை முன்பு அறிந்திருக்கவில்லை, நீங்கள் அதை இப்பொழுது அறிந்திருக்கிறீர்கள்! ஹூ! அது சரிதான். அது உங்களைப் பொறுத்தது. அது உண்மை. ஆனால் ஒரு திரித்துவ, திரித்துவ ஞானஸ்நானம் சபையில், புதிய ஏற்பாட்டில் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை; கத்தோலிக்க சபையில் மாத்திரமே உள்ளது, பிராடெஸ்டெண்டு சபையோ அதற்குத் தலை வணங்குகிறது. கவனியுங்கள்! அதற்காக அநேக ஜனங்கள் உங்களோடு முரண்படுவார்கள். ஆனால், சகோதரனே, நீங்கள் உங்களுடையத் தெரிந்துகொள்ளுதலைச் செய்ய வேண்டும்.

258 இப்பொழுது நீங்கள், "சகோதரன் பிரான்ஹாம், நான் 'பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்' நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டேன். நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன்" என்று கூறலாம்.

259 உங்களுடைய வார்த்தையை நான் சந்தேகிக்கவில்லை. உம்முடைய வார்த்தையைச் சந்தேகிக்க எனக்கு எந்தக் காரணமும் இல்லை; நான் அதை நம்புகிறேன். அவர்கள் ஞானஸ்நானம் பண்ணப்படுவதற்கு முன்பே தேவன் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அருளினார் என்று நான் நம்புகிறேன்; ஆனால் என்ன செய்ய வேண்டுமென்று பேதுரு அவர்களிடம் கூறியபோது, அவர்கள் சென்று அதைச் செய்தனர். அது உண்மை. இப்பொழுது

என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள், அது உண்மை; வெளிச்சம் கொண்டு வரப்படும்போது, நீங்கள் ஒளியில் நடக்க மறுத்தால், நீங்கள் இருளுக்குத் திரும்புகிறீர்கள். சரியே! ஆமென்! சரி. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தைக்கு "அப்படியே ஆகட்டும்" என்று கூச்சலிட்டதற்காக நான் மன்னிப்புக் கேட்க விரும்பவில்லை. இல்லை ஐயா. நான் மீண்டும் "ஆமென்" என்று கூச்சலிடுவேன். அது உண்மை. ஆம், ஐயா.

சகோதரன் பிரான்ஹாம், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஏன் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்? "பிதா, குமாரன், பரிசுத்த ஆவி" என்பதற்கு பதிலாக நீங்கள் ஏன் அதைச் செய்கிறீர்கள்? ஏனென்றால் வேதம் அதைப் போதிக்கிறது! அது தெளிவாக இருக்கிறதா?

சகோதரன் பிரான்ஹாம், நீங்கள் ஏன் பாதங்களைக் கழுவுகிறீர்கள்? ஏனென்றால் வேதம் அதைப் போதிக்கிறது. நான் முழு சுவிசேஷத்தை விசுவாசிக்கிறேன். சரி, இப்பொழுது.

நீங்கள் கூறின போலி ஞானஸ்நானம் என்ன? அதுதான். சரியாக அதுதான். எங்குமே இல்லை...ஏற்பாட்டைத் திரும்பிப் படித்து ஒரு நபர்...எங்கே என்று கண்டறியுங்கள்...

260 இப்பொழுது அருமையான ஜனங்களாகிய உங்களுக்கு, நான் உங்களுடைய உணர்வைப் புண்படுத்தவில்லை, நான் அதைச் செய்ய விரும்பவில்லை. நீங்கள் பணிவுடன் இருங்கள் என்றும்... இந்தக் காரியத்தை நேருக்கு நேர் பார்த்து, அது எப்படி இருக்கிறது என்று தெரிந்துகொள்ளுங்கள் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். வேதாகமத்தின்படி அதை நோக்கிப் பாருங்கள், உங்களுடைய சபையிலோ அல்லது ஏதோ ஒரு முட்டாள்தனமான காரியத்திலோ அல்ல, யாரோ ஒருவர் தங்களுடைய தலையில் இறுமாப்புற்று செய்துள்ள ஏதோ ஒரு முட்டாள்தனமான காரியம், ஆனால் தேவனுடைய வார்த்தையை நோக்கிப் பாருங்கள். நிச்சயமாக!

261 புதிய ஏற்பாடு காலத்திலிருந்து இதுவரை காணப்படாத அற்புத அடையாளங்களும் காரியங்களும் நிறைந்த, இப்படிப்பட்ட ஊழியத்தை சர்வ வல்லமையுள்ள தேவன், எனக்குக் கொடுத்துவிட்டு, என்னை இதுபோலத் தவறான வழியில் நடக்க விடுவார் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை! சகோதரனே, நான் வெளிநாடுகளிலிருந்து திரும்பி வரும்போது, நான் என்னுடைய நேரத்தின் பெரும்பகுதியை தெய்வீக சுகமளித்தல் மற்றும் அற்புதங்களின் பேரில் செலவழிக்காமல் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதிலேயே செலவிட்டுக் கொண்டிருக்கிறேன். அது முற்றிலும் உண்மை. உண்மையாகவே. இப்பொழுது நாம் பார்ப்போம்.

38. நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள அந்நிய பாஷைகளில் பேச வேண்டும் என்று இந்தச் சபை போதிக்கிறதா?

262 இல்லை ஐயா. இல்லை, நாங்கள் செய்வதில்லை. அந்நிய பாஷைகளில் பேசுதல் பரிசுத்த ஆவியின் வரம், பாருங்கள், பரிசுத்த ஆவி அல்ல. அது ஒரு வரம். இந்த மரம் ஒன்பது விதமான கனிகளைக் கொடுக்கிறது. அது சரியா?

263 நீங்கள் ஒரு ஆப்பிள் மரத்தில் ஆப்பிள் பழங்களை நோக்கிப் பார்த்தால், அது ஒரு ஆப்பிள் மரம் என்று கூறுகிறீர்கள். ஒரு மரத்தைப் பாருங்கள், அதில் பேரிக்காய்கள் உள்ளன, அது ஒரு பேரிக்காய் மரம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதில் காட்டத்தி மரப்பட்டை இருந்தாலும், அதில் பேரிக்காய் இருந்தாலும் பரவாயில்லை, அது என்னவாயிருக்கும்? அதனுடைய ஜீவன் பேரிக்காய் மரத்தின் ஜீவனாயிருக்கிறது. அது சரியா?

264 இப்பொழுது, இந்தத் தேவனுடைய மரம் ஒன்பது ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிறது. அது சரியா? சரி. எல்லாமே வித்தியாசமாயுள்ளது...“ஒருவருக்கு போதக...அறிவு, ஞானம், புரிந்துகொள்ளுதல், அந்நிய பாஷைகளில் பேசுதல், அந்நிய பாஷைகளுக்கு அர்த்தம் உரைத்தல்,” இந்தத் தேவனுடைய விருட்சத்தில் ஒன்பது வித்தியாசமான ஆவிக்குரிய வரங்கள் வளருகின்றன. அது சரியா? பாருங்கள், இப்பொழுது, அந்நிய பாஷைகளில் பேசுதல் மாத்திரமல்ல, அங்கே மற்றவைகளும் கூட இருக்கிறது.

265 இப்பொழுது, நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசினாலும், பரிசுத்த ஆவியைப் பெறாமல் இருக்கலாம். இப்பொழுது, அதை நினைவில் கொள்ளுங்கள். நான் சரியாக... சூனியக்காரரும், மந்திரவாதிகளும் அந்நிய பாஷையில் பேசுவதை நான் கண்டிருக்கிறேன், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை. உங்களுக்குத் தெரியும், அவர்கள் சத்தமிட்டுக் கொண்டும், குதித்துக்கொண்டும் வருவதை நான் கண்டிருக்கிறேன், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கவில்லை. அண்மையில் அரிசோனாவிலுள்ள டக்ளஸ் என்ற இடத்திலிருந்து அங்கே உயரே உள்ள சோள நடனத்தில்...நான் நின்று கொண்டிருந்தேன். அவர்கள் அங்கே ஆடும் அந்தச் சோள நடனத்தைப் பார்த்திருக்கிறேன், அப்போது அந்த மந்திரவாதி வெளியே வந்து பயங்கரமாகக் கூச்சலிட்டு, ஒவ்வொரு காரியத்தையும் செய்து கொண்டே, அவன்மீது மண்ணைத் தூக்கி எறிந்தான். அது அவன் இரட்சிக்கப்பட்டான் என்பதை பொருட்படுத்தவில்லை. அந்த மனிதன் ஒரு—ஒரு மந்திரவாதி.

266 நான் இந்தியாவில்...ஆப்பிரிக்காவில் நின்றபோது, மந்திரவாதிகள் தங்கள் மாயவித்தைகளால் என்னை அப்படி அணுகிச் சவால் விடுவதையும், மனித மண்டையோட்டிலிருந்து இரத்தத்தைக் குடிப்பதையும் கூடப் பார்த்திருக்கிறேன். அது உண்மை. நீங்கள் அதை எதிர்கொள்ளும்போது, நீங்கள் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்வது

நல்லது. ஆனால் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வல்லமை அந்த மனிதனை அவன் அசைய முடியாத அளவிற்கு கட்டியிருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆகையால் அதன்பின்னர், அவனுடைய கண்கள் அந்தவிதமாகக் அசையாமல் நின்று போக, அவர்கள் அவனைக் கொண்டு சென்றனர். ஆம், ஐயா.

267 சகோதரனே, தேவன் உண்மையானவர்! அது உண்மை. ஆனால் தேவன் ஆவியாயிருக்கிறார், அந்நிய பாஷைகளில் பேசுவதோடு, அல்லது *இது, அது,* அல்லது *மற்றது* மாத்திரமல்ல. நான் கூறுகிற எந்த மனிதனும்...அதுதான் இங்கே சபையில் உள்ள தொல்லை. பாருங்கள், நீங்கள்...பெந்தெகொஸ்தேயினர் அந்த ஒரு காரியத்தின் பேரில் காட்டுத்தனமாகச் சென்றனர். அவர்கள் ஜனங்களண்டை... அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு பதிலாக, அவர்களைப் பீடத்தண்டை கொண்டு வந்து, அவர்களின் முதுகில் அடிக்கத் தொடங்கி, "சொல்லுங்கள்! சொல்லுங்கள்! சொல்லுங்கள்!" என்று கத்தினார்கள். அவர்கள் அந்நிய பாஷைகளில் அல்ல, குழப்பமடையும் வரைக்கும் ஒரு வார்த்தையைத் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

268 ஒரு உண்மையான பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவியினால் பிறந்திருந்தால், அவன் ஒரு தேவபக்தியுள்ள ஜீவியம் ஜீவிப்பான். அந்த மனிதர்களில் சிலர் பயங்கரமான ஜீவியங்களை வாழ்ந்து கொண்டிருந்தனர், அதை நீங்கள் அறிவீர்கள், அவர்களுடைய கனிகள் அவர்கள் அப்படியிருக்கவில்லை என்பதை நிரூபித்தன. இயேசு, "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்றார். ஆவியின் கனி அந்நிய பாஷைகளில் பேசுவதல்ல, அது ஒரு ஆவியின் வரம்.

269 பேதுரு ஒருபோதும், "நீங்கள் மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியைப் பெறுவீர்கள்" என்று கூறவேயில்லை. இந்த அந்நிய பாஷைகளையும் ஜனங்கள் பேசுவதை அவர்கள் கேட்டபோது, அவன், "பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்றான். அது அவர்கள் பெற்றுக் கொள்ளும் பரிசுத்த ஆவியின் வரங்களில் ஒன்றாகும். ஆமென். சரி. விரைந்து செல்ல வேண்டும்.

39. எனக்கு இரண்டு பையன்கள் உள்ளனர் (ஒன்று, இரண்டு வயது; ஒன்று, ஐந்து வயது), அவர்கள் தெளிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முழுக்கு ஞானஸ்நானம்பண்ணப்பட வேண்டுமா?

270 சரி இப்பொழுது சகோதரியோ அல்லது சகோதரனோ, நீங்கள் யாராயிருந்தாலும், அது உங்களைப் பொறுத்தது. எனக்கு ஒரு சிறு பெண் இருக்கிறாள்...என்னுடைய சிறு பையன், பில்லி பால், பதினாறு வயதாயிருந்தான், நான் அவனுக்கு இங்கே கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தேன்.

என்னுடைய சிறு பெண் எட்டு வயதுடையவளாயிருந்தாள். அவள் என்னிடத்தில் வந்து, என்னுடைய மடியில் அமர்ந்து, அவள், "அப்பா, நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்க விரும்புகிறேன், நான்—நான் ஞானஸ்நானம் பண்ணப்பட விரும்புகிறேன்" என்றாள். நான் அந்தச் சிறு பெண்ணுக்கு எட்டு வயதில் ஞானஸ்நானம் கொடுத்தேன். அந்தச் சிறு பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற விரும்பினால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். அவர்கள் அப்படியில்லையென்றால், ஏன், அவர்கள்... அப்படியே தொடர்ந்து செல்லுங்கள், கர்த்தர் என்னக் கூறினாரோ, அது உங்களைப் பொறுத்ததாயுள்ளது.

40. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுள்ளவர்கள் மாத்திரமே சபையின் எடுத்துக்கொள்ளப்படுதலில் இருப்பார்களா, அல்லது எல்லா விசுவாசிகளும் சுட்டிக்காட்டப்படுவார்களா?

271 நாம்...அதை நியாயப்படுத்த நமக்கு நேரமில்லை. ஆனால், சகோதரனே, பரிசுத்த ஆவி மணவாட்டி மாத்திரமே எடுத்துக் கொள்ளப்படுதலில் இருப்பாள். பார்த்தீர்களா? வேதம்...?... மற்றவை இழக்கப்படாது.

272 பாருங்கள்! பூமியை யார் நியாயந்தீர்க்கப் போகிறது? பரிசுத்தவான்கள். தானியேல், "நான் அவரைக் கண்டேன், அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம் மட்டும் வந்தார், மேலும்—மேலும் அவர் ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடு வந்தார்" என்றான். அது சரியா? எடுத்துக் கொள்ளப்படுதல், சபையானது போய்விட்டிருந்தது. அதன்பின்னர் அவர்கள் இறங்கி வந்தனர், நியாயத்தீர்ப்பு நிர்ணயிக்கப்பட்டது.

273 அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. அது சரியா? மற்றொரு புத்தகம் திறக்கப்பட்டது, அது ஜீவ புஸ்தகம், பரிசுத்த ஆவியைப் பெறாத பரிசுத்தமாக்கப்பட்ட விசுவாசி.

274 மணவாளனை சந்திக்க பத்து கன்னிகைகள் சென்றனர் என்று இயேசு போதிக்கவில்லையா? அவர்களில் ஐந்து பேர்...இல்லை அவர்கள் எல்லோருமே கன்னியர், சுத்தமான, பரிசுத்தமானவர்கள். அவர்கள், *இவர்கள்,* பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளாமல் உறங்கச் சென்றனர்; *இவர்கள்* பரிசுத்த ஆவியைப் பெற்று தங்கள் தீவட்டிகளில் எண்ணெயைப் பெற்றிருந்தனர். மணவாளன் வந்தபோது, அந்தச் சத்தம் உண்டாகி, சத்தமிட்டு, அவர்கள், "ஓ, நாங்கள் உள்ளே போவோம். உங்களுடைய எண்ணெயை எங்களுக்குக் கொடுங்கள்!" என்றனர்.

275 அவர், "வாங்கிக் கொள்கிறவர்களிடத்தில் போய், ஜெபித்து, அதை இப்போதே வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார். ஆனால் அவர்களால் முடியவில்லை. அவர்கள் போய்விட்டிருந்தபோது, கன்னிகைகள் கலியாண விருந்திற்குச் சென்றார்கள், அவர்கள்

புறம்பான இருளில் தள்ளப்பட்டார்கள், அங்கே அவர்களுக்கு அழுகையும் புலம்பலும் பற்கடிப்பும் உண்டாயிருந்தது. நேற்றிரவு, பன்னிரண்டாம் அதிகாரத்தில், அதாவது முந்தைய இரவுக்கு முந்தைய இரவில், தேவனில் விசுவாசம் வைத்து இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொண்ட ஸ்திரீயின் வித்தின் *மீதியானவர்களுடன்* யுத்தம் செய்யும்படி, சிவப்பு வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து தண்ணீரைப் ஊற்றினது என்று வெளிப்படுத்தின விசேஷம் போதிக்கவில்லையா?

276 ஸ்திரீகளாகிய உங்களுக்கு, நீங்கள் ஒரு மாதிரியை முன்வைக்கும்போது. அது ஒரு அருமையான பண்டமாயுள்ளது, அதேவிதமான பொருட்கள் அதில் உள்ளன, ஆனால் நீங்கள் *இந்த* விதமாக எடுத்து, நீங்கள் அதை வெட்டிக்கொள்ளப்போகும் விதமாகவே உங்களுடைய மாதிரியைப் பொருத்த வேண்டும். அதன்பின்னர் நீங்கள் அதை வெட்டுகிறீர்கள். அது உங்களைப் பொறுத்தது. ஆனால் நீங்கள் உங்களுடைய ஆடையை உண்டாக்குவதற்காக, நீங்கள் வெட்டிக்கொள்ளும் பொருட்களையே எடுத்துக்கொள்கிறீர்கள், மீதமுள்ளவை உபயோகிக்கப்படுகின்றன. அது மற்றவைகளைப் போன்றே ஒரு நல்ல பொருளாகவே உள்ளது, ஆனால் நீங்கள் *அதைத்* தெரிந்து கொள்ளுதலின் மூலம் தெரிந்து கொண்டீர்கள். அது சரியா? அதனுடைய மற்றவைகளைப் போலவே பரிசுத்தமாயும், அவ்வளவு நல்லதாயும், மற்றவைகளைப் போலவே விலையுயர்ந்ததாயுமுள்ளது, ஆனால் அதுவே உங்களுடைய விருப்பமாயிருந்தது.

277 நாம் தெரிந்து கொள்ளப்படுதலின் மூலம் எடுத்துக் கொள்ளப்படுதலில் சென்று கொண்டிருக்கிறோம் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறாரே! வேதமோ, "மரணமடைந்த மற்றவர்கள் ஆயிரவருடங்கள் முடியுமளவும் உயிரடையவில்லை" என்று கூறியுள்ளது. அது சரியா? எனவே மாத்திரம்...நீங்கள் இழக்கப்படமாட்டீர்கள், ஆனால் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட மணவாட்டி எடுத்துக் கொள்ளப்படுதலில் செல்வாள். மீதமுள்ளவர்கள் நியாயத்தீர்ப்பின் வழியாக வருவார்கள்; அவர்கள் அவ்வாறு வரவில்லை.

41. நீங்கள் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டுமானால், இயேசு ஏன் மத்தேயு 28-ல், "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுங்கள்" என்று கூறுகிறார்? அதைத்தான் நான் சற்று முன்பு விளக்கி முடித்தேன்.

278 சரி, நீங்கள் களைப்படைந்து கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் அவ்வாறு இருப்பதை நான் அறிவேன்.

42. ஆனால், "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்" அபிஷேகத்திற்கு தேவன் மதிப்பளிக்கவில்லையா? இந்த நாமத்தில், இந்த நாமங்களில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, பரிசுத்த ஆவியைப்

பெற்றிருக்கிற ஜனங்கள் இருக்கவில்லையா? பிதாவை மகிமைப்படுத்த இயேசு வந்தாரா? இந்த ஞானஸ்நானம் அங்கீகரிக்கப்படாதா?

279 ஆம், இயேசு பிதாவை மகிமைப்படுத்தவே வந்தார். பரிசுத்த யோவான் 14-ம் அதிகாரத்தில் பாருங்கள். நான் ஏறக்குறைய... நான்...நீங்கள் இன்னும் மூன்று நாட்கள் காத்திருந்தால், நாம் அதை முடித்துவிடுவோம் என்று, நான் நினைக்கிறேன். பாருங்கள், அதன்பின்னர் நாளை நாம் சில புதியவைகளைப் பெறுவோம், அதன்பின்னர், ஏனென்றால் நான் உண்மையாகவே இன்றிரவிலிருந்து சிலவற்றை திரும்பப் பெறுவேன் என்று நான் நம்புகிறேன். கவனியுங்கள், இது சபைதான். நாம் போய்க் கொண்டிருக்கிறோம்.

280 பாருங்கள், இயேசு பிதாவை வெளிப்படுத்த வந்தார். பாருங்கள், ஆதியிலே தேவன் தம்முடைய சொந்த சாயலில் மனிதனை உண்டாக்கினார். அது சரியா? பாருங்கள், தேவன் என்றால் என்ன? ஒரு ஆவி. பரிசுத்த யோவான் 4-ம் அதிகாரம், இயேசு கிணற்றண்டையிலே அந்த ஸ்திரீயினிடத்தில் பேசுகிறார், அவர், "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும்" என்றார். அது சரியா? தேவன் தம்முடைய சொந்த சாயலில் மனிதனை உண்டாக்கினார் என்றால், அப்பொழுது அவர் எந்தவிதமான ஒரு மனிதனை உண்டாக்கினார்? ஒரு ஆவிக்குரிய மனிதன்.

281 ஆதியாகமம் 2-ம் அதிகாரத்தில் நிலத்தைப் பண்படுத்த ஒரு மனிதனும் இருக்கவில்லை, தேவன் பூமியின் மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கினார்; அவருடைய சாயலில் அல்ல, ஆனால் மிருக ஜீவனின் சாயலில். அவர் இங்கே இந்த மிருக மனிதனுக்குள் மனித ஆவியை வைத்தார், அவன் ஒரு ஜீவனுள்ள ஆத்துமாவானான். இப்பொழுது, அதுதான் மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வித்தியாசம்.

மிருகம் மோட்டார் வாகனங்களை உருவாக்குகிறதில்லை, அது தன்னுடைய ஜீவனத்திற்கு உதவியாக அது போன்ற காரியங்களைச் செய்வதில்லை. அவன் ஒரு மிருகம், ஊமையான முரடன். அவனுக்கு ஒரு ஆத்துமா கிடையாது. அவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவனால் பேச முடியாது, பேச முடியாது. அவன் ஒரு ஊமையான முரடன்.

ஆனால் ஒரு மனிதன் ஒரு மிருகத்தைப் போன்று மாம்சத்தில் இருக்கிறான், ஆனால் அவன் தனக்குள் ஒரு தேவனுடைய ஆத்துமாவை உடையவனாயிருக்கிறான், அது அவனை அழிவில்லாதவனாக்குகிறது. அவனால் உருவாக்க முடியும்... .அவனால் என்ன செய்ய முடியும் என்று பாருங்கள்! அவன்

ஏறக்குறைய தேவனுக்கு சமமானவனாயிருக்கிறான், ஏனென்றால் அவன் விழுந்துபோன நிலைமையிலும் கூட ஒரு தேவனுடைய குமாரனாக இருக்கிறான். அவன் அற்புதமானவன்! அவனை நோக்கிப் பாருங்கள்! பார்த்தீர்களா? அதுதான் இது.

282 அப்பொழுது மனிதன் மாம்சத்தில் விழுந்தபோது...தேவன் தம்மைத் தவிர வேறொரு தனிப்பட்ட நபரை அனுப்பினால், அவர் அநீதியுள்ளவராயிருந்திருப்பார். தேவன் அதை நியாயமான முறையில் செய்ய முடிந்த ஒரே வழி மனிதனுடைய ஸ்தானத்தை தாமே எடுத்துக்கொள்வதேயாகும்.

283 சகோதரன் நெவிலை *இந்த* ஸ்திரீக்காக நான் மரிக்கும்படி செய்திருந்தால் என்னவாகும்? நான் *இந்த* ஸ்திரீயை இங்கே *இந்த* ஸ்திரீக்காக மரிக்கும்படி செய்திருந்தால், அது நான் உங்கள்மேல் ஆளுகை செய்திருந்தால் என்னவாகும்? நான் நீதியுள்ளவனாயிருந்து அதைச் செய்ய முடியாது. நான் மரணத்தை அறிவித்து, நீங்கள் வாழ வேண்டும் என்று விரும்பினால், உங்களை நீதிமான்களாக்க நான் உங்களுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

284 அப்பொழுது தேவன், ஆவியின் சாயலில் இருந்த தேவன்... அதாவது, சாயலற்றவராக இருந்தார். வேதம், "தேவன் ரூபமில்லாதவர்" என்று கூறியுள்ளது. சரி. அதன்பின்னர் தேவன் ரூபம் எடுக்க வேண்டியதாயிருந்தது, அவர் ஒரு கன்னிகையின் மீது நிழலிட்டு, அவளுக்குள் ஒரு இரத்த அணுவைச் சிருஷ்டித்தார், பாலுணர்வு அல்லது அதனோடு எந்தச் சம்பந்தமும் இல்லாமல், ஒரு இரத்த அணுவைச் சிருஷ்டிக்க, அது தேவனுடைய குமாரனாக வளர்ந்தது. தேவன் இறங்கி வந்து, அவருடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் வாசம் செய்து, அவரைப் பூமியின் மேல் தேவனாக்கினார்.

285 பரிசுத்த யோவான்...தோமா, "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்" என்றான்.

286 அதற்கு அவர், "இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா?" என்று கேட்டார். அவர், "'பிதாவை எங்களுக்குக் காண்பியும்' என்று நீ ஏன் சொல்லுகிறாய்?" என்று கேட்டார். ஏன், அவர், "நீங்கள் என்னைக் காணும்போது, நீங்கள் பிதாவைக் காண்கிறீர்கள். நானும் என் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். என் பிதா எனக்குள் வாசமாயிருக்கிறார்" என்றார்.

287 அண்மையில் இங்கே ஒரு பெண்மணி, நான் அங்குப் பேசிக்கொண்டிருந்தபோது, குதித்தெழுந்து, "ஓ, சகோதரன் பிரான்ஹாம்," "நீங்கள் என்ன பொருட்படுத்திக் கூறுகிறீர்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள், நிச்சயமாக அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள்" என்றாள். மேலும்,

“நீரும் உங்கள் மனைவியும் கூட ஒன்றாக இருக்கிறீர்கள். அந்தவிதமான ஒன்றாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள்” என்றாள்.

288 அதற்கு நான், “நான் உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறேன்,” என்று கூறி, “அவர்கள் அவ்வாறு இல்லை” என்றேன். நான், “நீங்கள் என்னைக் காண்கிறீர்களா?” என்று கேட்டேன்.

அதற்கு அவள், “நிச்சயமாக” என்றாள்.

நான், “நீங்கள் என் மனைவியைக் காண்கிறீர்களா?” என்று கேட்டேன்.

அதற்கு அவள், “இல்லை” என்றாள்.

289 நான், “அங்கே! அப்படியானால் நானும் என் மனைவியும் இருப்பதைக் காட்டிலும் அவர்கள் ஒரு வித்தியாசமான நிலையில் இருக்கிறார்கள்” என்றேன். புரிகிறதா? அதற்கு நான், “அது உண்மை” என்றேன்.

290 இயேசு, “நீங்கள் பிதாவைக் காணாமல் என்னைக் காண முடியாது” என்றார். நிச்சயமாக முடியாது! அது மூன்றடி விதியின் இரண்டாம் பாகம், அதே விதி. அது தேவன். இயேசு கிறிஸ்து ஒன்று தேவனாயிருந்திருக்க வேண்டும், அல்லது உலகத்தில் எப்போதும் பெற்றிருந்த மிகப்பெரிய வஞ்சகனாயிருந்திருக்க வேண்டும்.

291 கவனியுங்கள்! அண்மையில் ஒரு ஸ்திரீ என்னிடத்தில், “நான் உங்களுக்கு நிரூபித்துக் காட்டுவேன்” என்று கூறினாள், ஒரு கிறிஸ்தவ விஞ்ஞானப் பெண்மணி. இப்பொழுது, கிறிஸ்தவ விஞ்ஞான நண்பரே, ஒரு நிமிடம் பயபக்தியாயிருங்கள், பாருங்கள். அவர்கள், “அவர் ஒரு மனிதனேயன்றி வேறொன்றுமில்லை என்பதை நான் உங்களுக்கு நிரூபிப்பேன்” என்றனர். மேலும், “நீங்கள் இயேசுவின் பேரில் அதிக தற்பெருமையாகப் பேசுகிறீர்கள்” என்றனர்.

292 நான், “நான் இரவும் பகலும் பெருமையடித்துக் கொண்டிருந்தாலும், அவரைக் குறித்து போதுமானதை பேச முடிக்க முடியாது” என்றேன். நான், “வியப்பொன்றுமில்லை...” என்றேன்.

293 ஏன், ஏசாயா அவருடைய பெயரைச் சூட்ட முயன்றான், அவன், “அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், சமாதானப் பிரபு, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா” என்றான். அது அனைத்துமே! “அவர் அல்பா, ஓமெகா, ஆதியும் அந்தமுமாயிருக்கிறார், தாவீதின் வேரும் சந்ததியுமானவர், பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம்; பிதா, குமாரன், பரிசுத்த ஆவி.” “தேவத்துவத்தின் பரிபூரணம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கும்” என்று வேதம் கூறியுள்ளது. தேவனுடைய பரிபூரணம் அவருக்குள் இருந்தது!

294 அவள், “லாசருவை எழுப்ப, அவர் லாசருவுக்காக ஜெபிக்கச் சென்றபோது, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்று கூறி,

“அவர் வெறுமென ஒரு மனிதன் என்பதை நான் உங்களுக்கு நிரூபிப்பேன்” என்றாள்.

295 நான், “நீங்கள் அதைச் செய்வதை நாங்கள் காணட்டும்!” என்றேன்.

296 “‘அவர் அழுதார்’ என்று வேதம் கூறியுள்ளது. அவர் ஒரு மனிதனாயிருந்தார் என்பதை அது நிரூபிக்கிறது, அவரால் அழ முடிந்தது” என்றாள்.

297 நான், “நிச்சயமாகவே, அழுது கொண்டிருந்தது குமாரன் தான்” என்றேன்.

298 அவர் ஒரு தேவ-மனிதனாயிருந்தார். அவரும் என்னையும் உங்களையும் போன்றே ஒரு திரித்துவ ஜீவியமாயிருந்தார்; நாம் ஆத்துமா, சரீரம், ஆவியாய் இருக்கிறோம். அவர் தேவனுடைய தெய்வீகத்தன்மையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்; அந்தவிதமாகத்தான் அவர் இருந்தார். அவரே தெய்வீகத்தன்மை கொண்டவராயிருந்தார்! அவருடைய சொந்தப் பிள்ளைகளே அவருடைய இரத்தத்திற்காகக் கதறிக் கொண்டிருக்கையில்...அவரால் எப்படி அங்கே எதையும் செய்ய முடிந்தது? அது வேறு ஏதாவதொன்றாக இருந்திருக்குமானால்... அது அவருடைய சொந்தப் பிள்ளைகளே அவருடைய இரத்தத்திற்காகக் கதறினதாயிருந்தது; அவர் அவர்களுக்காக அழுததில் வியப்பொன்றுமில்லை. எப்படியொரு மனிதன்... அவருடைய சொந்த பிள்ளைகள் அவருடைய இரத்தத்திற்காக அழுது கொண்டிருக்க, அவரால் எப்படி உணர முடிந்தது? ஒன்று அவர்களை ஆக்கினைக்குட்படுத்தி என்றென்றைக்குமாய் நரகத்தில் தள்ளியிருக்க வேண்டும் அல்லது ஜீவனை கொடுத்திருக்க வேண்டும்; தேவன் தம்முடைய பிள்ளைகளுக்காகத் தம்முடைய ஜீவனை அளித்திருந்தார்! தெய்வீகத்தன்மை அவருக்குள் வாசம் செய்தது! அந்தவிதமாகத்தான் அவர் இருந்தார்.

299 அந்த ஸ்திரீ, “பாருங்கள்,” என்று கூறி, “சங்கை பிரான்ஹாமே, நான் உங்களுக்கு நிரூபிப்பேன்! அவர் அழுதபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார் என்பதை அது நிரூபித்தது” என்றாள்.

300 நான், “பெண்மணியே, அவர் ஒரு ஜெப-... இருந்தபோது இல்லை அவர் அழுதுகொண்டிருந்தபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார், அது உண்மை. அவர் அழுதுகொண்டிருந்தபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார், ஆனால் அவர் தம்முடைய சிறிய பலவீனமான சரீரத்தை நிமிர்த்தியபோது, மரித்து நான்கு நாட்களாகியிருந்த ஒரு மனிதனை நோக்கி, ‘லாசருவே, வெளியே வா!’ என்றார். ஒரு மனிதன் மரித்து நான்கு நாட்களாக, அழுகிப்போய், தோல் புழுக்கள் அவனுக்குள் ஊர்ந்து சென்றன, அழிவு தன்னுடைய எஜமானையும், ஆத்துமா தன்னுடைய சிருஷ்டிகரையும் அறிந்திருந்தது, மரித்து நான்கு நாட்களாகியிருந்த

ஒரு மனிதன் எழுந்து நின்று மீண்டும் ஜீவித்தான்! அது ஒரு மனிதனைப் பார்க்கிலும் மேலானதாயிருந்தது!" என்றேன்.

301 அவர் அன்றிரவு மலையிலிருந்து இறங்கி வந்தபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார், பசியோடு, புசிக்க ஏதோ ஒரு காரியத்திற்காக ஒரு மரத்தின் மேல் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் அந்த அத்திமரத்தில் புசிக்க ஏதாவதொன்றை அங்கே தேடி கொண்டிருந்தபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார். ஆனால் அவர் ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையுங்கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்தபோது, அவர் ஒரு மனிதனைப் பார்க்கிலும் மேலானவராயிருந்தார்! அது அங்கே தேவனாயிருந்தது! ஒரே சிருஷ்டிகர் சமைத்த மீனை எடுத்து, அதைப் பிட்க, அது சமைத்த மீனாகவே இருந்தது, சுட்ட அப்பத்தை எடுத்து; அதைப் பிட்டார், அவர் எத்தகைய அணுவை உதறிவிட்டார்? அல்லேலூயா! அவர் தேவனாயிருந்தார், அணுக்கள் மற்றுமுள்ள காரியங்களைச் சிருஷ்டித்தவராயிற்றே! அது ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானதாயிருந்தது!

302 அவர் அன்றிரவு அங்கே அந்தப் படகில் இருந்தபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார், நாள் முழுவதும் பிரசங்கித்து, வியாதியஸ்தரை சுகப்படுத்தி, பத்தாயிரம் சமுத்திர பிசாசுகள் அவரை மூழ்கடித்துவிடுவதாக ஆணையிட்டுக் கூறுமளவிற்கு மிகவும் களைப்புற்றிருந்தான். அந்தச் சிறு பழைய படகு, ஒரு புட்டி மூடியைப் போல அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருக்க, பேரலைகள் அங்குமிங்கும் சீறிப் பாய்ந்தோட, அவரோ, அலைகள் அவரை எழுப்பாதவரை மிகுந்த களைப்புடன் படுத்திருந்தார். பிசாசுகள் கெர்ச்சித்துக்கொண்டிருந்தன, "அவர் நித்திரையாயிருக்கையில் நாம் அவரை இப்பொழுது பிடித்துவிடுவோம்" என்றன. ஆனால் அவர் விழித்தெழுந்தபோது, அங்கே விழித்தெழுந்தார், அவர் ஒரு மனிதனாயிருந்தார், அவர் மிகவும் களைப்புற்றிருந்தார். ஆனால் அவர் தம்முடைய பாதத்தைப் படகின் கயிற்றின் மீது வைத்து, வெளியே நோக்கிப் பார்த்து, "இரையாதே அமைதலாயிரு!" என்றார், காற்றும் அலைகளும் அவருக்குக் கீழ்ப்படிந்தன. அது ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானதாயிருந்தது! அது தேவன், வானங்களை உண்டாக்கின சிருஷ்டிகர்.

303 "காற்றுகளும், அலைகளும் அவருக்குக் கீழ்ப்படிகிற மனுஷன் என்ன விதமானவர்!" என்று அப்போஸ்தலன் கூறியதில் வியப்பொன்றுமில்லை.

304 அது ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானதாயிருந்தது. அது தேவனாயிருந்தது. அவர் பாவத்தைப் போக்க, ஒரு பலியாகச் சிலுவையில் அறையப்பட்டபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார். அவர் தம்முடைய கரங்களில் அடிக்கப்பட்ட ஆணிகளையுடைய ஒரு மனிதனாயிருந்தார். அவர் தம்முடைய தலைக்கு மேல் முட்களைக் கொண்ட ஒரு மனிதனாயிருந்தார். அவர் பரியாசம் செய்கின்ற

போர்வீரர்களால் முகத்தில் துப்பின ஒரு மனிதனாயிருந்தார். அவர் நொறுக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, காயப்பட்ட ஒரு மனிதனாயிருந்தார். அவர் ஒரு மனிதனாயிருந்தார்! அவர், "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூப்பிட்டபோது, அவர் ஒரு மனிதனாயிருந்தார். அவர் உதவிக்காகக் கதறிக்கொண்டிருந்த ஒரு மனிதனாயிருந்தார். ஆனால் ஈஸ்டர் காலையிலே மரணத்தின் முத்திரைகள் கல்லறையில் உடைக்கப்பட்டபோது, அது ஒரு மனிதனைக் காட்டிலும் மேலானதாயிருந்தது! அவர் தேவனாயிருந்தார் என்பதை அவர் நிரூபித்தார்.

ஜீவிக்கும்போது, அவர் என்னை நேசித்தார்;
மரிக்கும்போது, அவர் என்னை இரட்சித்தார்;
அடக்கம் பண்ணப்பட்டபோது, அவர் என் பாவங்களைத் தொலைதூரம் கொண்டு சென்றார்;
உயிர்த்தெழுந்தபோது, அவர் என்றென்றைக்குமாய் இலவசமாய் நீதிமானாக்கினார்:
என்றோ ஒரு நாள் அவர் வருகிறார்—ஓ, ஒரு மகிமையான நாள்!

ஓ, பிளவுண்ட கற்பாறைகளுக்கும், இருள் சூழ்ந்த வானங்களுக்கும் இடையில்,
என் இரட்சகர் தன்னுடைய தலையைச் சாய்த்து மரித்தார்;
அந்தத் திரைச்சீலை வழியை வெளிப்படுத்தினது
பரலோகத்தின் சந்தோஷங்களுக்கும் முடிவில்லாத நாளுக்குமே.

305 எடி பெரோனெட் கூச்சலிட்டதில் வியப்பொன்றுமில்லை:

இயேசுவின் நாமத்தின் வல்லமைக்கு எல்லாப் புகழும்!
தேவதூதர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்கட்டும்;
ராஜரீக முடியைக் கொண்டு வாருங்கள்,
எல்லாவற்றிற்கும் கர்த்தராகிய அவருக்கு முடிசூட்டுங்கள்.

306 அந்த மகத்தான நபர் தான் கர்த்தராகிய இயேசு. அவர் யேகோவாவாயிருந்தார், தேவன் மாம்சத்தில் திரைமறைக்கப்பட்டிருந்தார். வேதம், "வார்த்தையினாலும், கிரியையினாலும் நீங்கள் எதைச் செய்தாலும், அவை யாவையும் அவருடைய நாமத்தில் செய்யுங்கள்" என்று கூறியுள்ளது. வேதம், "பரலோகத்திலுள்ள முழு குடும்பமும் 'இயேசு' என்றும், பூமியிலுள்ள முழு குடும்பத்திற்கும் 'இயேசு' என்றும்

பெயரிடப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளது. நாம் அவருடைய நாமத்தில் ஜெபிப்போமாக, அவருடைய நாமத்தில் ஜீவிப்போமாக, அவருடைய நாமத்தில் போதிப்போமாக, அவருடைய நாமத்தில் மரித்து, அவருடைய நாமத்தில் அடக்கம்பண்ணப்பட்டு, அவருடைய நாமத்தில் ஞானஸ்நானம் பெற்று, அவருடைய நாமத்தில் உயிர்த்தெழுந்து, அவருடைய நாமத்தில் பரலோகத்திற்கு செல்வோமாக. அது அவருடைய நாமம், அவருடைய மணவாட்டி "திருமதி இயேசு" என்று பெயரிடப்பட்டுள்ளது. அது அவருடைய நாமத்தினிமித்தமாகப், புறஜாதிகளிலிருந்து ஒரு ஜனத்தைத் தெரிந்தெடுக்கும்.

307 நான் ஒருத்துவக்காரன் அல்ல. இல்லை ஐயா. திரித்துவ ஜனங்களாகிய நீங்கள் அதை உங்களிடத்திலிருந்து அகற்றிக் கொள்ளுங்கள். நான் ஒருத்துவக்காரன் அல்ல. இல்லை ஐயா. நான் ஒருத்துவக்காரனும் அல்ல, திரித்துவக்காரனும் அல்ல. வேதம் கூறுவதை நான் விசுவாசிக்கிறேன். அது சரிதான். ஆமென். வ்யூ! நான் ஒன்றுக்கே அதிக நேரம் எடுத்துக் கொள்கிறேன். அது என்னவாயிருந்தது? நான் அதை வெளியே எடுத்தேனா? அல்லது, நாம் பார்ப்போம், அது என்ன? ஓ, ஆம், அது உண்மை...எப்படியாய் பிதா கிறிஸ்துவுக்குள் இருந்தார். அவர் ஒரு மனிதனாயிருந்தார், அவர் ஒரு தேவ-மனிதனாயிருந்தார்.

43. பெந்தேகோஸ்தே சபை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுக்கிறதில்லையா? அவர்களில் சிலர்.

44. ஒரு நபர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இல்லாமல் மரித்தால், அவன் இழக்கப்படுவானா?

308 இல்லை ஐயா. அவன் ஒரு விசுவாசியாயிருந்தால், அவன் உயிர்த்தெழுதலில், இரண்டாம் உயிர்த்தெழுதலில் வருவான். அவன் ஞானஸ்நானத்தைப் பெற்றிருக்கிறான், அவன் முதலாம் உயிர்த்தெழுதலில் செல்வான். இப்பொழுது, நீங்கள் கிட்டத்தட்ட என்னுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது திருப்திகரமாயிருக்கவில்லையென்றால், அப்பொழுது நீங்கள்—நீங்கள் என்னைக் கேளுங்கள், நான் உங்களுக்கு வேதவாக்கியங்களைத் தருவேன். காரணம், நான் இங்கே இன்னும் இரண்டு அல்லது மூன்றைக் பதில் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன், பிறகு நாம் முடித்துவிடுவோம்.

45. சகோதரன் பில், சூதாட்டத்தைக் குறித்து வேதம் ஏதாவது கூறுகிறதா?

309 ஆம், அது கூறுகிறது, ஆனால் என்னால் இப்போது அதைச் சொல்ல முடியாது. போர்வீரர்கள் அவருடைய வஸ்திரங்களுக்காகச் சூதாடினார்கள் என்பதை நான் அறிவேன், ஆனால் என்னால் கூற முடியாது.

46. முதலாம் கொரிந்தியர் 15:29-ஐ விளக்குவீர்களா?

310 சகோதரன் நெவில், முதலாம் கொரிந்தியர் 15:29-ஐ நீங்கள் விரும்பினால், அதை எனக்காக அங்கே எடுத்துக் கொள்ளுங்கள். நாம் அதைப் பார்ப்போம்.

311 இப்பொழுது, ஒருக்கால் நாளை நான் அதை உங்களுக்காக மீண்டும் கொடுக்க முடியும். அந்த...அந்தக் எழுத்துக்கள், "**விக்காரிவ்ஸ் ஃபிலி டெய்**" என்று எப்படி எழுதப்பட்டுள்ளது. நீங்கள் அதை விரும்புவீர்களானால், எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

47. எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னர் எசேக்கியேல் 38 மற்றும் 39-ல் உள்ள தீர்க்கதரிசனம் நிறைவேறுமா?

312 இல்லை என்றே நான் நினைக்கிறேன். அடுத்தபடியாக நாம் எதிர்நோக்கியிருப்பது சபையின் எடுத்துக்கொள்ளப்படுதலாகும் என்று நான் நினைக்கிறேன். அதன்பின்னர், "கோகும் மாகோகும் தோன்றும்போது" ருஷ்ய சேனைகள் உள்ளே வருகின்றன...

313 பாருங்கள், திரு. போகனான் அவர்கள் இங்கே பொதுப்பணித்துறை நிறுவனத்தில் மேற்பார்வையாளராக இருந்தார், ஒரு அருமையான கிறிஸ்தவ மனிதன். அவர் ஒரு நாள் என்னிடத்தில் பேசினார், அவர், "பில்லி, நான் வாசிக்க முயற்சித்தேன், வெளிப்படுத்தின விசேஷத்தை விளக்கும்படி என்னுடைய போதகரிடம் கேட்க முயற்சித்தேன்" என்றார். மேலும், "நாங்கள் அங்குப் படித்ததும், நாங்கள் எல்லாவற்றையும் குழப்பிவிட்டோம்" என்றார். மேலும், "யோவான் அன்றிரவு ஏதோ ஒன்றை—ஏதோ ஒன்றை புசித்து, ஒரு சொப்பனம் கண்டிருக்க வேண்டும்" என்றார்.

நான், "திரு. போகனான், உங்களுக்கு அவமானம்" என்றேன். நான் கூறினேன்...

அதற்கு அவர், "சரி, அதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது" என்றார்.

314 நான், "எந்த ஜென்மசுபாவமான மனிதனும் அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியினால் அதை வெளிப்படுத்த முடியும்" என்றேன்.

315 அதற்கு அவர், "சரி, இங்கே பார், பில்லி" என்றார். அவர், "மணவாட்டி சீனாய் மலையின் மேல் நின்றுகொண்டிருந்தாள். இதோ மணவாட்டியோடு யுத்தம்—யுத்தம் பண்ணும்படியாக வலுசர்ப்பத்தின் வாயிலிருந்து தண்ணீர் ஊற்றப்பட்டது. மணவாட்டியும் அதே சமயத்தில் பரலோகத்தில் இருந்தாள். அதை நீங்களே கண்டுபிடியுங்கள்!" என்றார்.

316 நான், "திரு. போகனான், நீங்கள் பெற்றுள்ள ஒரே காரியம், நீங்கள் மூன்று வித்தியாசமான காரியங்களைக் கலந்து, அதை 'மணவாட்டி' என்று அழைக்கிறீர்கள். சீனாய் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரோடு நின்ற *இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரை* 'மணவாட்டி' என்று அழைக்கிறீர்கள். அவர்கள் அவ்வாறு

இருக்கவில்லை. நீர் அழைப்பது (யுத்தம் செய்வதற்காகத் தன் வாயிலிருந்து தண்ணீரைப் ஊற்றியவனை) மணவாட்டி அல்லாத *மீதியாயிருக்கிற* ஸ்திரீயினுடைய வித்து; அதுதான் விடப்பட்டிருந்தது. மணவாட்டி *பரலோகத்தில்* இருந்தாள்; *அங்கே* இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்கள்; பெயரளவிலான கிறிஸ்தவர் *இங்கே* துன்புறுத்தலின் வழியாகக் கடந்து செல்கிறார். அது உண்மை" என்றேன்.

317 சகோதரனே, நீங்கள் அதை வைத்திருந்தால், இப்பொழுது படியுங்கள். [சகோதரன் நெவில் முதலாம் கொரிந்தியர் 15:29-ஐ வாசிக்கிறார்—ஆசி.]

> [*மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?*]

318 இப்பொழுது, இப்பொழுது, சகோதரர்களே, மரித்தோருக்காக ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள் என்று விசுவாசிக்கிற ஒரு—ஒரு ஜனம் உண்டு, அதுதான் மார்மோன். நான் அநேக முறை அவர்களுடைய ஆலயங்களுக்குச் சென்றிருக்கிறேன், அவர்கள் மிகவும் அருமையான ஜனங்கள். நீங்கள் இப்பொழுது ஒரு மார்மோனாக இருக்கலாம். நான் உங்களுடைய உணர்வைப் புண்படுத்த முயற்சிக்கவில்லை. ஆனால், என்னுடைய அருமையான நண்பனே, உன்னுடைய தகப்பனுக்காக நீ ஞானஸ்நானம் பெற முடியாது; அந்தச் செயலை அவர் செய்ய வேண்டியதாயிருந்தது. "மரம் எந்த வழியில் சாய்கிறதோ, அந்த விதமாகத்தான் அது விழுகிறது."

பவுல், இங்கே பேசும்போது, "மரித்தோரைக்," குறித்துப் பேசிக்கொண்டிருந்தான், இயேசு கிறிஸ்து, "மரித்தவர்கள் எழுந்திருக்கவில்லையென்றால், மரித்தவர்கள் எழும்பாவிட்டால், நீங்கள் ஏன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்படுகிறீர்கள்?" நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? அப்படியானால் நீங்கள்...அவன், "நாம் புசிப்போம், குடித்து, சந்தோஷமாயிருப்போம், ஏனென்றால் மரித்தோர் உயிரோடெழும்பவில்லையென்றால், நாளை மரிப்போம்" என்றான். ஆனால் அவன் தொடர்ந்து சென்று மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்காகத் தேவனை மகிமைப்படுத்துகிறான். நாம் அவருடைய மரணத்திற்கும், அடக்கத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கென்று ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். அந்தக் காரணத்தினால்தான் நாம் "மரணத்திற்குள்" ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம். சரி.

இப்பொழுது, இந்த ஒன்றிற்குப் பிறகு இது இன்னும் ஒன்று என்று நான் நினைக்கிறேன்.

48. சகோதரன் பில், தயவு செய்து பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை எப்படி பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எனக்குக் கூறுங்கள். ஜெபத்தின் மூலமாகவும், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் மூலமாகவும், குணமாதலை ஏற்றுக்கொள்வது போல அதையும் ஏற்றுக்கொள்வதன் மூலமாகவும் இது நிகழ்கிறதா? நீங்கள் இங்கே எனக்காக ஜெபித்தபோது, சுகமளித்தலுக்கான விசுவாசம் என்பது என்ன என்பதை நான் அறிவேன். நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்காக ஜெபித்து, கரங்களை வைப்பீர்களா? நான் "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்" நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டேன். நீங்கள் அண்மையில் பேசினது போல, நான் இயேசுவின் நாமத்தில் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டுமா என்று தயவு கூர்ந்து எனக்குச் சொல்லுங்கள்.

இப்பொழுது, என்னுடைய அருமையான கிறிஸ்தவ நண்பரே, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கவில்லை. நான் வேதவாக்கியத்தை மாத்திரமே முன்வைக்கிறேன். நாம் பேசிக்கொண்டிருக்கையில், பரிசுத்த ஆவியானவர் எப்படி இப்பொழுது வர முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். பரிசுத்த ஆவி தேவனுடைய ஒரு வரமாயிருக்கிறது. பார்த்தீர்களா? அது தேவனுடைய ஒரு வரம். நாம் பேசிக்கொண்டிருக்கையில் அது வரலாம். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், எப்பொழுது...ஜனங்கள் சரியாகப் போதிக்கப்பட்டிருந்தால்...

இங்குள்ள பழங்காலத்தவர்களில் சிலர், நான் உங்களை ஒன்று கேட்கட்டும், கூடாரத்திலிருந்து வந்துள்ள பழங் காலத்தவர்களே. நான் ஜனங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது கவனித்திருக்கிறீர்கள். ஊழியக்காரர்களாகிய நீங்கள் இதை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். நான் அந்த ஜனங்களுக்கு அந்தத் தண்ணீரண்டை செல்வதற்கு முன்பு, அவர்கள் அந்த ஜீவியத்தை சுத்தப்படுத்தும்படியாகவும், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் காத்துக்கொள்ள கடமைப்பட்டவராயிருக்கிறார் என்று நான் அவர்களை விசுவாசிக்கச் செய்து; அவர்கள் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவுடனே, பரிசுத்த ஆவியானவர் அதைப் பெற்றுக்கொள்ள அங்கே இருந்தார் என்பதை கற்பித்துள்ளேன். அவர்கள் தண்ணீரிலிருந்து மேலே வந்தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். அது உண்மை. நீங்கள் அப்படியே...

319 மேய்ப்பர்களே, உங்கள் ஆடுகளுக்குப் போதியுங்கள், அவைகளை *இங்கே* வேதாகமத்தின்படி கொண்டு வாருங்கள். ஏதோ ஒரு சபையின் அந்தப் பழைய பாடப்புத்தகத்திலிருந்து விலகி, தேவன் போதித்த வேதத்தை இங்கே ஆராய்ந்து பாருங்கள், அப்பொழுது நீங்கள் அந்தத் தொல்லைகளை

உடையவராயிருக்கமாட்டீர்கள்.

320 ஆம், அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு நபர் கைகளை வைப்பதன் மூலம், நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

49. சகோதரர் பில், அது...போதகர் தேவ வார்த்தையை...போதித்துக் கொண்டிருக்கும்போது, ஒருவர் எழுந்து அந்நிய பாஷைகளில் பிரசங்கம் செய்வது முறையற்ற செயலா? இந்த நபருக்கு இங்கே மூன்று கேள்விகள் உள்ளன.

49ஆ. மற்றொன்று: **மேலும், பீட அழைப்பு விடுக்கப்படும்போது, அவ்விதமாகச் செய்வது ஒழுங்கிற்கு புறம்பானதா?**

50. மூன்றாவது, மூன்றாவது ஒன்று: **மேலும், இது முறையற்றதா... சபையில் ஒருவர் எழுந்து நின்று, புனிதமான இருக்கையில் உள்ள ஒரு போதகரை, ஆராதனையின்போது அவர் சொன்ன அல்லது செய்த ஒரு விஷயத்திற்காகக் கண்டிப்பது முறையற்ற செயலா? இந்தக் காரியங்கள் யாவும் கூடாரத்தில் அநேக முறைகள் செய்யப்பட்டிருக்கின்றன.**

321 இப்பொழுது, நான் இதை இப்பொழுது துரிதமாகப் பார்க்கட்டும், இது இப்பொழுது சபையோடு சம்பந்தப்பட்டது. நான்...இப்பொழுது, நம்முடைய வாசல்களில் அந்நியர்களாகிய உங்களுக்கு, நான் இப்பொழுது சபைக்கு ஒரு சிறு அடி கொடுக்க வேண்டும், எனவே நீங்கள்—நீங்கள் விரும்பினால், ஒரு நிமிடம் ஒரு விதமாகப் பொறுத்துப் பாருங்கள்.

322 என் பிள்ளைகளே, கவனியுங்கள்! அந்த வரங்கள் அற்புதமானவை. நான் உங்களை எவ்வளவாய் பாராட்டுகிறேன் என்பதை எவருமே அறியார், நான் உங்களைத் தேவ அன்போடு நேசிக்கிறேன். ஆனால் அந்த வரங்களை நீங்கள் சரியான இடத்தில் உபயோகிக்கவில்லையென்றால், அவைகள் உங்களுக்குத் தீங்கிழைக்கும்.

323 இன்றைக்கு ஜனங்களைப் பாருங்கள், அருமையான மனிதர் களத்தில் இறங்கி, வியாதியஸ்தருக்காக ஜெபித்து, அதற்காகப் பணம் வசூலிக்கின்றனர். அது தவறு. ஒரு மனிதன் சுகமளித்தலுக்கான விசுவாசத்தைப் பெற்றிருந்தால், வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்போது, அவர் பணமில்லாத ஜனங்களுக்காக ஜெபிக்கும் அளவுக்குப் பெருந்தன்மையுள்ளவராயிருக்க வேண்டும். தேவனுக்கு நன்றி! சகோதரனே, நான் அதைக் கூற விரும்புகிறேன், எனக்காக அல்ல, ஆனால் தேவனுடைய மகிமைக்காக, நான் ஒரு முறை கூட ஜனங்களிடத்திலிருந்து பணத்தையோ அல்லது அது போன்ற எதையுமோ வாங்கியதில்லை; ஒரே காணிக்கையில், உண்மையாகவே பத்து லட்சம், ஐந்து லட்சம் டாலர்களை நிராகரித்து விட்டேன். நீங்கள் அதை அறிவீர்கள்; அந்தச் செய்தித்தாளில் இங்கே இருந்தது. பார்த்தீர்களா? அது உண்மை. அது அதற்காக

அல்ல...நீங்கள் அதைச் செய்யும்போது, நீங்கள் தேவனோடுள்ள உங்களுடைய விசுவாசத்தை இழக்கப் போகிறீர்கள்.

324 இப்பொழுது அந்நிய பாஷைகளில் பேசுகிற ஜனங்களே, அந்நிய பாஷைகளில் பேசும் வரங்களைப் பெற்றுள்ள உங்களைத் தேவன் ஆசீர்வதிப்பாராக. நீங்கள் இந்தக் கூடாரத்திற்குத் தேவையாயிருக்கிறீர்கள். நீங்கள் இங்கே எனக்கு வேண்டும். ஆனால், இப்பொழுது, காரியம் ஒழுங்காக உள்ளது, எனவே பிரசங்கிமார் பிரசங்கம் செய்யும்போது அதை ஒருபோதும் செய்யாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தால், நீங்கள் ஒழுங்கிற்கு அப்பாற்பட்டவர்களாயிருக்கிறீர்கள். பார்த்தீர்களா? நீங்கள் அதைச் செய்யக் கூடாது. ஏனென்றால் வேதம், "தீர்க்கதரிசியின் ஆவி தீர்க்கதரிசிக்கு அடங்கியிருக்கிறது" என்று கூறியுள்ளது. ஒரு மனிதன் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது, பேசுவதற்கு அவருக்கு முழு சுதந்திரம் உண்டு, அவர் கூட்டத்தாரை வைத்திருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் அவர் மூலமாகப் பேசப் போகிறார். அவர் கூறி முடித்தபிறகு, அப்பொழுது செய்திக்கான நேரம், நீங்கள் பாருங்கள். எனவே ஒழுங்கை மீறிச் செல்லாதீர்கள்; நீங்கள் அப்படிச் செய்தால், அப்பொழுது நீங்கள் குறுக்கிடுகிறீர்கள், நீங்கள்— நீங்கள் கூறிக் கொண்டிருக்கிற செய்தியோடு பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துவீர்கள்.

325 இங்கே அண்மையில், நான் இங்கே எங்கோ வாஷிங்டனில் ஒரு கூட்டத்தில் இருந்தேன், அங்கே பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் அமர்ந்திருந்தனர். என்னுடைய மேலாளர், அவர் ஒரு உண்மையான வேதாகம விரிவுரையாளர், அபிஷேகம் பண்ணப்பட்ட தெய்வீக சுகமளித்தலைக் குறித்து அங்கே நின்று பேசிக்கொண்டிருந்தார், பரிசுத்த ஆவியானவர் பேசிக்கொண்டிருந்தார். ஒரு பெண்மணி எழுந்து நின்று அந்நிய பாஷைகளில் பேசத் துவங்கினாள், அவர் சற்று நேரம் காத்திருந்து, பின்னர் அவர் பேசத் துவங்கினார். பரிசுத்த ஆவியானவர் துக்கமடையத்...தொடங்கினார், நீங்கள் அதை ஜனங்கள் மத்தியில் காண முடியும். அவர் மீண்டும் பேசத் துவங்க, அவள் எழுந்தாள். அவர், "சகோதரியே, கர்த்தருடைய நாமத்தில் உட்காருங்கள்" என்றார். மேலும், "நீங்கள் ஒழுங்கை மீறிவிட்டீர்கள்" என்றார். ஊழியக்காரர்கள் அவளை அங்கே அழைத்துச் சென்று அவளுக்குத் தெரியப்படுத்தினர்.

326 இப்பொழுது, அது என்னவெனில், அந்த வரங்கள் உலகத்தில் உள்ளன, அவைகள் இப்பொழுது சபையில் உள்ளன. வரங்கள் சபையில் உள்ளன, ஆனால் பரிதாபமான சிறு பிள்ளைகள் அந்த வரங்களைப் பெறுகின்றனர், அதை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்பதை அறிய போதிய போதனையைப் பெற்றிருக்கவில்லை. நீங்கள் அதைத் தவறாகக் கட்டுப்படுத்தினால், நீங்கள் நன்மை விளைவிப்பதைக் காட்டிலும் அதிக தீங்கு விளைவிப்பீர்கள். பார்த்தீர்களா?

327 ஒரு மனிதன் வெளியே சென்று, வியாதியஸ்தருக்காக ஜெபிப்பது போன்றும், யாரோ ஒருவர் சுகமடைவதுபோல, "இப்பொழுது, அதற்காக நீர் எனக்கு ஆயிரம் டாலர்கள் தர வேண்டும்" என்கிறான். இப்பொழுது, அவன் நன்மை செய்வதைக் காட்டிலும் அதிக சேதத்தைச் செய்துள்ளான். கிறிஸ்துவின் பாதையில் நிந்தையைக் கொண்டு வருவதற்குப் பதிலாக அந்த மனிதன் மரித்துப் போனால் நலமாயிருக்கும்.

328 இப்பொழுது, நீங்கள்...மேய்ப்பரோ அல்லது சுவிசேஷகரோ அல்லது அது யாராயிருந்தாலும் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது, அமைதியாயிருங்கள். பவுல் அதைச் செய்யும்படி கூறினான், நீங்கள் பாருங்கள். இப்பொழுது, அதன்பின்னர் அவர், "நீங்கள் ஒவ்வொருவராகப் பேசலாம்" என்றான். அது போதுமான உண்மை. மேலும் அவன், "நீங்கள் எல்லோரும் அந்நிய பாஷைகளைப் பேச வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அது நல்லது" என்றான்.

329 ஆனால் நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தைப் பெற்றிருந்தாலொழிய, உங்களால் அந்நிய பாஷையில் பேச முடியாது. இப்பொழுது இந்தச் சபையில் அதைக் குறித்த அநேக வரங்கள் உள்ளன என்பதில் சந்தேகமேயில்லை. இங்குள்ள மெத்தோடிஸ்டு சபையில் அதைக் குறித்த அநேக வரங்கள் உள்ளன, இங்குள்ள பாப்டிஸ்டு சபையிலும் அதைக் குறித்த அநேக வரங்கள் உள்ளன, அந்த வரம் செயல்பாட்டுக்குச் செல்லும்படியாக மட்டும் அது பிரசங்கிக்கப்பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

330 எப்படி? நீங்கள் நிலத்தில் விதையை விதைத்து, அதைப் பராமரிக்காவிட்டால், அதற்கு என்ன சம்பவிக்கப் போகிறது? பாருங்கள், அது அங்கே உலர்ந்த தூசியில் கிடக்கும், அழுகிவிடும்; அது எந்த நன்மையும் செய்யாது. இந்த வரங்கள் நீண்ட காலமாக சபையிலிருந்து வந்துள்ளன, ஆனால் இப்பொழுதுதான் தண்ணீர் விழத் துவங்கியுள்ளது, பெந்தேகோஸ்தே மழையானது அதற்குத் தண்ணீர் பாய்ச்சவும், கனிகளைப் பிறப்பிக்கும்படியாகவும் இருந்தது. இப்பொழுது, அதைச் சரியான இடத்தில் உபயோகியுங்கள்.

331 இப்பொழுது, அது கூறுகிறது, பாருங்கள், அடுத்த கேள்வி அங்கே இருந்தது என்று நான் நினைக்கிறேன், அந்த நபர் கேட்டபோது, கூறினார்:

எப்பொழுது...அவர்கள் ஒரு பீட அழைப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கும்போது?

332 இல்லை, அப்பொழுது நான் அப்படி நினைக்கமாட்டேன். நீங்கள் கவனித்து, கொரிந்தியர் நிரூபத்தை எடுத்து, அதை வாசித்தால், இங்குள்ள உங்களில் சிலர், நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசும் வரங்களைப் பெற்றிருந்தால், அப்பொழுது நீங்கள் கவனியுங்கள். வேதத்தில், அவர்கள்...ஆராதனை முடிவுற்ற

பிறகு, தேவனுடைய ஆசீர்வாதமானது சபையார் மீது இறங்கி, அதன்பின்னர் அவர்கள் பேசத் துவங்கி, அதன்பின்னர் அவர்கள் தேவனை மகிமைப்படுத்தத் துவங்கினர். ஒவ்வொரு முறையும் அது யாருக்காவது ஒரு நேரடியான செய்தியாக இருக்கிறது. இல்லை... நீங்கள் அதை இப்பொழுது கவனிக்க வேண்டும். பார்த்தீர்களா? அது மாம்சப்பிரகாரமான ஏதோ ஒன்றல்ல. அது யாரோ ஒருவருக்கு ஒரு செய்தியாயிருக்கும், யாரோ ஒருவர் ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படியாக அல்லது சபையைப் பக்திவிருத்தியடையச் செய்ய ஏதாவதொன்றாக இருக்கும். அது சபையை மகிமைப்படுத்த ஏதாவதொன்றாக இருக்கும்.

333 அங்குதான் பெந்தேகோஸ்தே ஜனங்கள் தங்களுடைய பெயருக்கு நிந்தையைக் கொண்டு வந்துள்ளனர். *பெந்தெகொஸ்தே* என்ற பெயரையே நீங்கள் குறிப்பிட்டுக் கூறினாலே, அப்பொழுது ஜனங்கள் விலகிச் சென்று, "முட்டாள்தனம்" என்று கூறுவார்கள், ஏனென்றால் அவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களைச் செய்வதை கண்டிருக்கிறார்கள்; ஜனங்கள் உத்தமமாய் இருந்தாலும், அது போதிக்கப்படவில்லை.

334 பவுல், "நான் அங்கே பெந்தேகோஸ்தே சபைக்கு வந்தபோது," என்று கூறி, "நான் அதை ஒழுங்குக்குள் கொண்டு வருவேன்" என்றான். அது ஒழுங்காக இருக்க வேண்டும், ஆவியானவர் கட்டளையிட்டபடியே, ஒவ்வொரு காரியமும் ஒழுங்காகச் செய்யப்பட வேண்டும். எனவே அவன், "இப்பொழுது, நீங்கள் உள்ளே வந்து, நீங்கள் யாவரும் அந்நிய பாஷையில் பேசத் துவங்கினால்; கல்லாதவன் உள்ளே வரும்போது, அவன், 'நீங்கள் எல்லோரும் பைத்தியம் பிடித்தவர்கள் அல்லவா?' என்று கேட்பான்; வெளியே நடந்து செல்வான்" என்றான்.

335 பெந்தேகோஸ்தே சபையும் அதைத்தான் செய்கிறது. அவன், "இப்பொழுது, அதற்குப் பதிலாக, உங்களில் ஒருவன் தீர்க்கதரிசனம் உரைத்து, ஒரு காரியத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினால், (வேறு வார்த்தைகளில் கூறினால், உங்களில் ஒருவன் ஒரு தீர்க்கதரிசி)" என்று கூறினால், அவன், "அப்படியானால் ஜனங்கள் விழுந்து, 'தேவன் உங்களோடு இருக்கிறார்' என்று கூறமாட்டார்களா?" என்று கூறினான்.

336 பாருங்கள், நான் தீர்க்கதரிசன வரத்தை மறுதலிக்க வேண்டியிருக்கும்போது, அந்நிய பாஷைகளில் பேசும் வரத்தை நான் எப்படி மறுக்க முடியும், இந்த மற்ற வரங்களை நான் மறுதலிக்க வேண்டுமா? இப்பொழுது, அநேக சபைகள், பெரிய சபைகள், நாசரேயன் சபை, யாத்திரீக பரிசுத்த சபை போன்றவை, ஒரு மனிதன் அந்நிய பாஷையில் பேசினால், அவனை ஒரு பிசாசு என்று அவர்கள் நினைக்கிறார்கள். அது பரிசுத்த ஆவிக்கு விரோதமான தூஷணமாயிருக்கிறது, அதற்கு மன்னிப்பு இல்லை. அதைத்தான் யூதர்கள் செய்தார்கள், பரிசுத்த ஆவியையுடைய

ஜனங்களைப் பரியாசம் செய்தனர், அதற்காக அவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தப்பட்டு இழக்கப்பட்டனர். சரியே! இயேசு, "பரிசுத்த ஆவிக்கு விரோதமாக ஒரு வார்த்தை பேசினாலும், அது இம்மையிலும் மறுமையிலும் உங்களுக்கு மன்னிக்கப்படமாட்டாது" என்று கூறவில்லையா? எனவே ஜாக்கிரதையாயிருங்கள்; நீங்கள் புரிந்து கொள்ளவில்லை, அப்படியே அமர்ந்திருங்கள்.

337 பரிசுத்த ஆவியைப் பெற்று, உத்தியோகங்களுக்கு அழைக்கப்பட்ட போதகர்களாகிய நீங்கள்...இப்பொழுது, உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா...இங்கு நான் நின்று கொண்டு கற்பிக்க முயற்சிக்கிறேன், இங்கே ஒரு மனிதன் குதித்தெழுகிறான், என் பக்கமாக, அதே சமயத்தில் போதிக்கத் துவங்குகிறான், யூபிலி பாடலைப் பாடிக்கொண்டிருக்கிற மற்றொரு மனிதன் இங்கே வெளியே நின்று கொண்டிருக்கிறானா? பாருங்கள், என்னே ஒரு குழப்பம்!

338 பாருங்கள், அந்நிய பாஷைகளில் பேசுவதைக் குறித்தும் அந்த விதமாகத்தான் உள்ளது. அது ஒழுங்காக வரட்டும், ஆவியானவர் அதை அருளினால், நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசலாம்.

339 இப்பொழுது நீங்கள், "பாருங்கள், சகோதரன் பிரான்ஹாம், என்னால் அதைத் தவிர்க்க முடியாது" என்று கூறலாம்.

340 ஓ, ஆம், உங்களால் முடியும்! உங்களால் முடியும் என்று பவுல் கூறினான். அவன், "உங்களில் ஒருவன் அந்நியபாஷை பேசுவானானால், அதற்கு அர்த்தம் உரைப்பவன் இல்லையென்றால், அவன் பேசாமலிருக்கக்கடவன்" என்றான். அது எவ்வளவுதான் பேச விரும்பினாலும் கவலைப்படாமல் அமைதியாயிருங்கள். சகோதரனே, அது ஒரு வரம். நான்—நான் ஜெபிக்கிறேன், வரும் நாட்களில் எப்போதாவது இங்கே ஒரு எழுப்புதல் உண்டாகும்படி தேவன் எனக்கு அருள்புரிவார், அப்போது நாம் உங்களுக்காக அந்தக் காரியங்களில் ஈடுபட முடியும், நீங்கள் பாருங்கள். அது ஒரு வரமாயுள்ளது என்பதையும், அந்த வரம் எல்லா நேரத்திலும் செயல்பட விரும்புகிறது என்பதையும் நீங்கள் காண முடிகிறது. பார்த்தீர்களா? ஆனால் எப்பொழுது, எப்படி அந்த வரத்தைக் கிரியை செய்ய வேண்டும் என்பதை அறிய பரிசுத்த ஆவியின் ஞானத்தை நீங்கள் பெற்றிருக்க வேண்டும். அந்த...

341 நீங்கள், "பாருங்கள், தேவனுக்கு மகிமை, பரிசுத்த ஆவியானவர் வரும்போது, உங்களுக்குப் போதகரே தேவையில்லை என்று வேதம் கூறியுள்ளது. அவர் தாமே போதகராயிருக்கிறார்" என்கிறீர்கள். ஓ, சகோதரனே, வேதத்தை வாசிப்பதில் நீங்கள் எப்படி அவ்வளவு அற்பமானவர்களாய் இருக்க முடியும்...அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் ஏன் சபையில் போதகர்களை ஏற்படுத்தினார்?

342 "எனக்கு யாரும் போதிக்க வேண்டியதில்லை. பரிசுத்த ஆவியானவரே எனக்குப் போதிக்கிறார்" என்று கூறலாம். அது

ஒரு போதகரின் மூலமாக அதைச் செய்கிறது. அவர் சபையில் போதகர்களை ஏற்படுத்தியார்.

343 அவன், "எல்லாரும் போதகர்களா, எல்லாரும் அப்போஸ்தலர்களா, எல்லாரும் சுகமளிக்கும் வரங்களை உடையவர்களா?" என்று கேட்டான். பரிசுத்த ஆவியானவர் இந்தக் காரியங்களைச் சபையில் அமைத்திருக்கிறார், அவர் அவைகள் எல்லாவற்றையும் கிரியை செய்கிறார், அவைகள் ஒவ்வொன்றும் ஒழுங்காக இயங்குகின்றன.

344 இப்பொழுது அது என்னுடைய பாதத்தைப் போன்றது; அவற்றில் ஒன்று, "நான் *இந்த* வழியாகப் போகிறேன்" என்றும், மற்றொன்று, "நான் *இந்த* வழியாகத் திரும்பிச் செல்லப் போகிறேன்" என்று கூறினால், இப்பொழுது, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்தக் கரம், "நான் மேலே போகப் போகிறேன்" என்று கூறியது, மற்றொன்று இந்த வழியாகச் சுற்றிக் செல்கிறது. சரீரம் என்னவிதமான ஒரு வடிவத்தைப் பெற்றுக்கொள்ளப் போகிறது? பார்த்தீர்களா?

345 ஆனால், இப்பொழுது, இங்குள்ள சிந்தை, "பாதம், நீங்கள் இருவரும் முன்னோக்கிச் செல்லுங்கள். கரம், நீ அவர்களோடு செல். தலையே, நீ நேராக நில். கைகளே, நீங்களும் அதையே செய்யுங்கள்" என்று கூறுகிறது, யாவும் இசைவாக நடந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுது, நான் அங்குச் செல்லும்போது, நான் என்னுடைய கரங்களை உபயோகித்திருக்கவில்லை. இப்பொழுது, பாதம் அதனுடைய கடமையைச் செய்து விட்டது, போதகர் பிரசங்கத்தின் மூலமாக; இப்பொழுது கைகளே, நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். பார்த்தீர்களா? நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா?

346 சரி, *இந்த* விதமாகக் கரங்கள் நீட்டிக் கொண்டிருந்தால், "ஓ, அது எங்கே உள்ளது? அது எங்கே உள்ளது?" என்று கேட்கும், பாதம் பிரசங்கிக்கிறதா? பாருங்கள், நீங்கள் இன்னும் அங்குச் செல்லவில்லை. பாருங்கள், கரமே, அமைதியாய் இரு; சிறிது நேரம் கழித்து நீ உபயோகிக்கப்படும் நேரம் வரும்; நீ அங்குச் செல்லும் வரை காத்திரு. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? அதுதான் வரம், அதுதான் ஆவியின் செயல்பாட்டில் உள்ள வரம்.

347 நான் கர்த்தரை நேசிக்கிறேன். நீங்கள் நேசிக்கவில்லையா? ஆமென். கவனியுங்கள், நான் உங்களுக்காக ஒரு காரியத்தைக் கூற முடியும் என்பதை நான் அறிவேன், நீங்கள் நிச்சயமாகப் பொறுமையாயிருக்கிறீர்கள்; பத்து மணி இருபது நிமிடங்கள். இப்பொழுது, நண்பர்களே, இப்பொழுது இங்கே இந்தவிதமாகப் பாருங்கள். நான்...இது என்னுடைய அறிவுக்கு எட்டின வரையில் மிகச் சிறந்ததாகும். அதைப் போன்ற ஒரு பெரிய கொத்தினூடே நான் விரைந்து செல்ல வேண்டும். நான்...உங்களுக்கு அதில் உடன்பாடு இல்லையென்றால், என்னுடன் கோபித்துக்கொள்ளாதீர்கள். நீங்கள்

என்னுடைய சகோதரனாயிருங்கள், பாருங்கள். நான் உங்களை நேசிக்கிறேன், நான் இந்தக் காரியங்களைக் கூறுகிறேன், ஏனென்றால் அது என்னுடைய இருதயத்தில் உள்ளது. அதைத்தான் நான் விசுவாசிக்கிறேன், அந்தவிதமாகவே நான் அதை விளக்கிக் கூறுகிறேன், அந்தவிதமாகவே நான் அதை வேதத்திலிருந்து கொண்டு வருகிறேன்.

348 இப்பொழுது, நீங்கள், "சகோதரன் பிரான்ஹாம், நான் அதை அந்தவிதமாக விசுவாசிப்பதில்லை" என்று கூறினால். அது முற்றிலும் சரியாயிருக்கும், பாருங்கள். நாங்கள் ஒருபோதும் வேறுவிதமாக நினைக்கமாட்டோம், நாங்கள் சகோதரர்களாகவும், நண்பர்களாகவுமே முன்னோக்கிச் செல்வோம்.

349 மேலும்—மேலும் நீங்கள், "பாருங்கள், நான்—நான் மெத்தோடிஸ்டு சபையைச் அல்லது பாப்டிஸ்டு சபையைச் சேர்ந்தவனாயிருந்தால், நான் எப்படியும் இரட்சிக்கப்படுவேன்" என்று கூறலாம். சரி, சகோதரனே, அது முற்றிலும் சரிதான். நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதால், நான் உங்களை இன்னமும் "என் சகோதரன்" என்று அழைத்துக் கொண்டிருக்கிறேன். பார்த்தீர்களா? அது உண்மை. எனவே நாம் ஒரே விதமாகச் சகோதரர்களும் நண்பர்களுமாய் இருக்கப் போகிறோம்.

350 ஆனால் நான் இந்தத் சபைக்கும், இங்குள்ள இந்தச் சில நாட்களுக்கும், இந்தத் சபை நிலைநாட்டும் கோட்பாட்டிற்கும் என்னை அர்ப்பணித்துக் கொள்கிறேன். பார்த்தீர்களா? அதற்காகத்தான் சபை நிற்கிறது! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், அல்லது ஆவியின் வரங்கள் வெளிப்படுதலை விசுவாசிக்காத ஒரு உதவிக்காரரானாலும், அந்த உதவிக்காரர், நான் இங்கே நின்றுகொண்டிருக்கையில், அவன் தன்னைச் சரிசெய்து கொள்ளும் வரை, அவன் சபையில் இருக்க தகுதியற்றவன். அது முற்றிலும் உண்மை. குழுவும் அதைக் கவனிக்க வேண்டும். சரியாக! இந்தச் சபை உதவிக்காரர்களால் கட்டுப்படுத்தப்படவில்லை; இந்தச் சபையானது வேதத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுகிறது. ஆம், ஐயா. இப்பொழுது, அந்தக் காரியங்கள், அது இந்தச் சபையின் உபதேசம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

351 எங்களுக்கு எந்த அங்கத்துவமே கிடையாது. இங்கே உறுப்பினர் என்று யாரும் இல்லை, ஆனால் வருகிற ஒவ்வொருவரும் ஒரு உறுப்பினரே, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நாம் யாவரும் ஒரே சரீரத்தின் அங்கத்தினர்களாய் இருக்கிறோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம்.

352 என்னுடைய அருமையான கிறிஸ்தவ சகோதரனே அல்லது சகோதரியே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம்

பெற்று, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி உங்களை வற்புறுத்துகிறோம். நீங்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பண்ணப்பட்ட பிறகு, நீங்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தால், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! நீங்களோ, "சகோதரன் பிரான்ஹாம், அதைக் குறித்து நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கலாம். கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டது. பவுல் கூறினது போல, நீங்கள் மீண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று மாத்திரமே என்னால் கூற முடியும்.

353 இப்பொழுது இங்கே பாருங்கள், அப்போஸ்தலர். இதைக் கலாத்தியர் 1:9-ஐ வாசிப்போமாக. அதை எழுதிக் கொண்டிருக்கிற நீங்கள் அதை எழுதிக் கொள்ளுங்கள். பவுல் இதைக் கூறினான், இதைக் கூறின அதே மனிதன், அவன் இந்தக் காரியத்தைப் போதித்தான். நீங்கள் அதை இப்பொழுது விசுவாசிக்கிறீர்களா? அது சரியா? அவர்கள் மீண்டும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பவுல் அவர்களிடம் கூறியிருந்தான். பவுல், "வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது..." என்றான். கலாத்தியர் 1:8, "வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, இதையல்லாமல் வேறெதையாவது உங்களுக்குப் போதித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்." அவர் ஒரு தலைமை பேராயராயிருந்தாலும், அவர் ஒரு போப்பாக இருந்தாலும், அவர் ஒரு ஊழியராயிருந்தாலும், அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தாலும் சரி, அவர் ஒரு சங்கையாயிருந்தாலும், அவர் பரலோகத்திலிருந்து வந்த ஒரு தூதனாயிருந்தாலும் அல்லது அது யாராயிருந்தாலும், அவன், "இதையல்லாமல் வேறேதாவது உபதேசம் பண்ணினால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்றான். அது சரியா? அவன் அதை மீண்டும் கூறி, "நான் கூறினபடியே, மறுபடியும் சொல்லுகிறேன்: இதைத் தவிர வேறெதையாவது அவர்கள் போதித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்!" அது சரியா?

354 எனவே கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான் அதை வார்த்தையிலிருந்து வாசிக்கிறேன், நீங்கள் உங்களுடைய தீர்மானத்தை எடுங்கள்.

355 இப்பொழுது எத்தனை பேர் அந்த நல்ல பழைய பாடலை விரும்புகிறீர்கள்:

என் விசுவாசம் உம்மையே நோக்கிப் பார்க்கிறது,
கல்வாரியின் ஆட்டுக்குட்டியானவரே,
தெய்வீக இரட்சகரே;
நான் ஜெபிக்கும்போது இப்பொழுதே
செவிகொடும்,
என்னுடைய எல்லா குற்றங்களையும்
போக்கிவிடும்,

இந்த நாள் முதற்கொண்டே நான்
முழுவதுமாக உம்முடையவனாய் இருப்பேனாக!

356 இந்தச் சபையில் உள்ள உங்களை, நான் ஒரு காரியத்தைக் கேட்க விரும்புகிறேன். நான் பிரசங்கிக்கிற கடைசி பிரசங்கம் இதுவாக இருக்கலாம் என்பதை உணர்ந்து, மரித்துக்கொண்டிருக்கிற ஒரு மனிதன், மரித்துக்கொண்டிருக்கிற மனிதனுக்குப் பிரசங்கிப்பதுபோல; நான் பிரசங்கிக்கும் ஒவ்வொரு பிரசங்கத்திலும், அது என்னுடைய கடைசி பிரசங்கமாக இருப்பதைப் போலவே, மரித்துக்கொண்டிருக்கிற ஒரு மனிதனாக, மரித்துக்கொண்டிருக்கிற மனிதனுக்குப் பிரசங்கிக்க முயற்சிக்கிறேன். இப்பொழுது, என்னுடைய சகோதரர்களே, இந்தச் சமுதாயத்திலும், தேசத்திலும் உள்ள என்னுடைய சக குடிமக்களே, இந்த ஆராதனைகளுக்குப் பிறகு நீங்கள் தேவனோடு நெருங்கி நடக்க வேண்டும் என்று உண்மையாகவே உணருகிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! நான் ஒரு...உங்களுடைய சகோதரன் என்ற முறையில், உங்களிடத்தில் பேசுகிறேன், நீங்கள் தேவனோடு நெருங்கிச் சஞ்சரிப்பீர்கள் என்பதே என்னுடைய உத்தமமான ஜெபமாயுள்ளது.

357 நியாயத்தீர்ப்பின் நாளிலே, இந்த இரவுகளில் நான் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, அந்நாளில் ஒரு பெரிய ஒலிப்பதிவு ஒலிபரப்பப்படுவது போல இருக்கும், அப்பொழுது என்னுடைய சத்தம் வெளியே வரும், நான் அங்கு நின்று கணக்கு ஒப்புவிக்க வேண்டும், ஏனென்றால் என்னுடைய வார்த்தைகள் என்னை ஆசீர்வதிக்கும் அல்லது அந்நாளில் என்னை ஆக்கினைக்குட்படுத்தும். அதுவே கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக என்னுடைய வார்த்தைகளாக இருந்து வருகின்றன, சுமார் இருபது வயதில் ஒரு சிறு பையனாய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, இப்போது எனக்கு நாற்பத்தைந்து வயதாகிறது, நான் அதை ஒருபோதும் மாற்றியதில்லை, ஏனென்றால் வேதாகமம் அந்தவிதமாக இருக்கும் வரை என்னால் அதை மாற்ற முடியாது.

358 நான் அதைப் பேராயர்களுக்குள்ளும் மற்ற ஒவ்வொரு காரியத்திலும் வேரூன்ற வைத்துள்ளேன், வார்த்தையின்படி அதற்கு முரணாகப் பேசக்கூடிய ஒருவரை நான் ஒருபோதும் கண்டதேயில்லை. அவர்கள் கூறுகிறார்கள்...பாருங்கள், இப்பொழுது, நான்...இந்தப் பாதிரியார், இங்கே ஒரு சில நாட்களுக்கு முன்பு, அவர், "சங்கை பிரான்ஹாம், நாங்கள் வேதாகமத்தை எடுத்துக் கொள்வதில்லை; அது எங்களுக்குச் சபையாயுள்ளது" என்று கூறினார். எனவே நீங்கள் அந்த மனிதனிடம் பேச முடியாது. ஆனால் நீங்கள் அதை வேதாகமத்தின் அடிப்படையில் ஆதாரமாகக் கொண்டால், அது வித்தியாசமானது. பார்த்தீர்களா?

359 தேவன்....என்று நான் ஜெபிக்கிறேன். இங்குள்ள என்னுடைய

கத்தோலிக்க நண்பர்கள் ஒவ்வொருவரும், என்னுடைய புராட்டஸ்டென்ட் நண்பர்கள் ஒவ்வொருவரையும், மேலும்... அவர்கள் இல்லை...இருந்தால்...நான்—நான் உங்களில் ஒவ்வொருவரையும் நேசிக்கிறேன். அது உண்மையா அல்லது இல்லையா என்பதை தேவன் அறிவார். ஜெப வரிசையைக் கவனியுங்கள், குருடர்—குருடரும், சப்பாணிகளும், அது "கத்தோலிக்கர்" என்று வேதம் கூறவில்லை.

360 இங்கே மேடை-...ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டிருக்கிறார், ஒரு கத்தோலிக்கர், புற்றுநோயால் அரிக்கப்பட்டு மரித்துக் கொண்டிருக்கிறார்; அவர் என்னுடைய வீட்டிற்கு வந்தபோது, பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கி, அந்தப் புற்று நோயிலிருந்து அவரைச் சுகப்படுத்தினார். அவர் கத்தோலிக்கரா இல்லையா என்பதை அவர் அவரிடம் ஒருபோதும் சொல்லவில்லை; நான் அவரிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அவர் வந்து, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியையும் பெற்றார். அங்கேதான் அந்த மனிதர் அமர்ந்திருக்கிறார், லூயிவில்லில் ஒரு வர்த்தகர். ஆம். பார்த்தீர்களா?

361 நீங்கள் ஒரு கத்தோலிக்கரா அல்லது இல்லையா என்று அது கேட்பதில்லை. உங்களுடைய இருதயம் தேவனுக்காகப் பசியாயிருக்கிறதா என்பதே அது. "நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்." அது சரியா? ஆமென். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

362 *பிணைக்கும் பிணைப்பு ஆசிர்வதிக்கப்படுவதாக* என்ற இந்த நல்ல பழைய பாடல் எத்தனை பேருக்குத் தெரியும்? இங்கே நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள், என்னுடன் கைகளை உயர்த்தி, "நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்தே எனக்கு அந்தப் பழைய பாடல் நினைவிருக்கிறது, *பிணைக்கும் பந்தம் ஆசீர்வதிக்கப்படட்டும்*" என்று சொல்பவர்கள் எத்தனை பேர்?

நம்முடைய இருதயங்களை கிறிஸ்தவ அன்பில்
பிணைக்கும் பிணைப்பு ஆசிர்வதிக்கப்படுவதாக;
ஒரே சிந்தையுள்ளவர்களின் ஐக்கியம்
அது மேலே உள்ளதைப் போன்றது.

363 அந்தப் பழைய பாடல்களை நீங்கள் விரும்புகிறதில்லையா? கேளுங்கள், நான் இதைச் சொல்ல விரும்புகிறேன், தற்போது நம்மிடம் இருக்கும் மற்ற காரியங்களுக்குப் பதிலாக, அந்தப் பழைய பாடல்கள் அதிகமாக இருந்திருந்தால், சபை இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்ட அந்த நல்ல பழைய பாடல்களை நான் விரும்புகிறேன்.

364 அந்தப் பண்டைய காலத்தவர்கள், நான் நினைவில் வைத்திருப்பேன், ஒரு வயதான கறுப்பின மனிதர், அங்கே

கென்டக்கி மலைகளில் உள்ள வீட்டிற்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டிருப்பது வழக்கம். அவர் சோர்ந்துபோகும்போது, அவர் அந்தப் பழைய—பழைய மரக்கட்டையின் மேல் உட்கார்ந்துகொண்டு, அவர் தன்னுடைய கைகளை அந்த மரக்கட்டையின் மேல் தட்டிக் கொள்வார். அவருடைய தலையைச் சுற்றி ஒரு வளையம் போன்று சிறிது வெள்ளை முடியோடு இருந்ததை நான் நினைவு கூருகிறேன். அவர் அந்தப் பழைய பாடலை, ஒரு பழைய பாடலைப் பாடுவார்:

நான் எழுந்து இயேசுவினிடத்தில் செல்வேன்,
அவர் என்னைத் தம்முடைய கரங்களினால் தழுவிக் கொள்வார்;
என்னுடைய அருமையான இரட்சகரின் கரங்களில்,
ஓ, பல்லாயிரம் அழகுகள் இருக்கின்றன.

365 அதற்கு அவ்வளவு மெல்லிசை இல்லை. எத்தனை பேர் அந்தப் பழைய பாடலைக் கேட்டிருக்கிறீர்கள்? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] என்னே! அது அருமையாயிருக்கிறது. கவனியுங்கள்... 

54-0515 கேள்விகளும் பதில்களும்
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org